# වාර්ෂික වාර්තාව

# ஆண்டறிக்கை

# Annual Report

# 2015

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

# இலங்கை
# மனித உரிமைகள் ஆணைக்குழு

## வருடாந்த அறிக்கை 2015

1996இன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரச் சட்டத்தின் இல.21, பிரிவு 30இல் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கை முன்வைக்கப்படுகின்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

தலைமை அலுவலகம்
இல.14, ஆர்.ஏ.டி.மெல். மாவத்தை, கொழும்பு 04 .

தொலைபேசி: (94) 0112505580, 2505581, 2505582
ஃபக்ஸ்: (94) 0112505541
மின்னஞ்சல் : sechrcsl@gmail.com
இணையதளம் : www.hrcsl.lk

உள்ளடக்கம் பக்கம்


| | | |
|---|---|---|
| தொலைநோக்கு, செயற்பணி மற்றும் ஆணைக்குழுவின் இலட்சினை | | 04 |
| ஆணைக்குழுவின் அடக்கம் | | 05 |
| தவிசாளரின் செய்தி | | 06 |
| **அத்தியாயம் ஒன்று:** அறிமுகம் | | 09 |
| 1.1 | ஆணைக்குழுவின் அடக்கம், ஆணை மற்றும் பணிகள் | 09 |
| **அத்தியாயம் இரண்டு:** விசாரணைகள் மற்றும் புலனாய்வுப் பிரிவு | | 14 |
| 2.1 | 2015இல் தலைமை அலுவலகத்தினாலும், பிராந்திய அலுவலகங்களினாலும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் ஒரு மேலோட்டம் | 14 |
| 2.1.1 | தலைமை அலுவலகம் | |
| 2.1.2 | பிராந்திய அலுவலகங்கள் | |
| 2.2 | முறைப்பாடு கையாள்தல் நடைமுறை | 18 |
| 2.3 | விசாரணைகள் ஊடாக விசேட தலையீடுகள் | 20 |
| 2.4 | துறித அழைப்பு சேவை | 20 |
| 2.5 | மற்றும் கண்காணித்தல் பொறிமுறை | 20 |
| 2.5.1 | பொலிஸ் நிலையங்களுக்கு நீடிக்கப்பட்ட இரவு தரிசிப்புக்கள் மற்றும் சிறைச்சாலை தரிசிப்புக்கள். | |
| **அத்தியாயம் மூன்று:** கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் பிரிவு | | 22 |
| 3.1 | நிகழ்ச்சித்திட்ட விருத்தி | 22 |
| 3.2 | மனித உரிமைகள் ஆவணங்களைத் தயாரித்தல் | 22 |
| 3.3 | இராணுவத்தினருக்கும், அரசாங்க அலுவலர்களுக்கும் கருத்தரங்குகளையும், செயலமர்வுகளையும் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்துதல் | 23 |
| 3.3.1 | வளவாளர்களை வழங்கியமை | |
| 3.3.2 | இராணுவ அலுவலர்களுக்கு மனித உரிமைகள் விழிப்பியல் நிகழ்ச்சித்திட்டங்கள் | |
| 3.3.3 | உரிமைகள் அடிப்படையிலான அரசாங்கச் சேவையை உறுதிப்படுத்துவதற்கு கடமையாற்றுவோரின் பொறுப்பு மீதான செயலமர்வுகள் | |
| 3.3.4 | சிறுபான்மையிரின் உரிமைகள் மீதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | |
| 3.4 | பணியாளர் ஆற்றலளவைக் கட்டியெழுப்புதல் | 27 |
| 3.4.1 | பால்நிலை மாற்றத்துக்கு உள்ளானவர்கள் தொடர்பாடல் | |
| 3.4.2 | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (03-05 ஒக்ரோபர் 2015 மற்றும் 10-12 ஒக்டோபர் 2015) | |

3.5 சட்ட வாரத்திற்காக இ.ம.உ.ஆ.கு. பொருட்காட்சிக் கூடம் 27
3.6 சர்வதேச மனித உரிமைகள் தினம் 2015 27
3.7 வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் 28
3.7.1 சிவில் சமூகத்துடன் ஒருங்கிணைப்பு
3.7.1.1 சிவில் சமூகக் கூட்டம்
3.7.1.2 சிவில் சமூக செயற் குழுக் கூட்டம்
3.7.1.3 சிவில் சமூகத்துடனும், புதிதாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவில் சிவில் சமூகத்திற்குமான கூட்டம்
3.7.2 பால்நிலை மாற்றத்துக்கு உள்ளான நபர்களுக்கான நிவாரணம்
3.7.3 மனித உரிமைகள் காப்பளிப்போர்களின் பாதுகாப்பு மீதான வழிகாட்டல்கள்

**அத்தியாயம் நான்கு: கண்காணிப்பு மற்றும் மீளாய்வுப் பிரிவு (ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு பிரிவு)** 30
**4.1 ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு பிரிவின் தாபிப்பு** 30
4.2 2015 ஜனாதிபதி தேர்தல் மீதான இ.ம.உ.ஆ.கு. அறிக்கை 30
4.2.1 கருத்துச் சுதந்திரம்
4.3 2015 பொதுத் தேர்தல்கள் 32
4.4 பண்டாரவளையில் நீர்ப் பிரச்சனை 35
4.5 இலங்கையில் சுதேசிய மக்களின் உரிமைகள் 36
4.6 மொழி உரிமைகள் 38
4.7 கொழும்பு நகரத்திலும், கிட்டிய பகுதிகளிலும் வாகன நெரிசல் 39
4.8 விசேட நிகழ்வுகள் 41

**அத்தியாயம் ஐந்து:** நிருவாகம் மற்றும் நிதிப் பிரிவு 42
5.1 நிருவாகப் பிரிவு 42
5.2 நிதிப் பிரிவு 42

**அத்தியாயம் ஆறு:** இலங்கையில் மனித உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகள் இணை நிகழ்ச்சித்திட்டம் - கருத்திட்டம் 43
6.1 கருத்திட்டத்தின் பின்னணி 43
6.2 கட்டம் 1இன் செயற்பாடுகள் 44
6.3 கட்டம் 2இன் செயற்பாடுகள் 48

பிற்சேர்க்கைகள்

## தொலைநோக்கு

அனைவருக்கும் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதும், சட்டத்தின் ஆட்சியை ஊக்குவித்துப் பாதுகாப்பதுமே எமது தொலைநோக்காகும்.

## செயற்பணி

சகலருக்கும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதையும், மேம்படுத்துவதையும் நோக்கி பணியாற்றுகின்ற சகல பயனுரித்தாளர்களின் ஒருங்கிணைப்புடனும், ஒத்துழைப்புடனும் இலங்கையின் பிரஜைகளுக்கு இலங்கையின் அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீது விசேட வலியுறுத்தலொன்றுடன், உலகளாவியரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளின் தரங்களுக்கும், கோட்பாடுகளுக்கும் ஒழுகி, சட்டத்திலும், கொள்கையிலும் மற்றும் நடைமுறையிலும் சகலருக்கும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதுடனும், மேம்படுத்துவதுடனும் ஊடாக, இலங்கையில் சிறந்த மனித உரிமைகள் கலாசாரமொன்றை விருத்திசெய்வதே எமது செயற்பணியாகும்.

## அடையாளச்சின்னம்

தேசிய மட்டத்தில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் தேசிய மனித உரிமைகள் நிறுவனத்தின் பொறுப்பினை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இலட்சனை வெளிப்படுத்துகின்றது. மனிதப் பிரவியினரின் உயிர்த்துடிப்பினையும், ஆக்கத்திறனையும் நீல நிறம் பிரதிபலிக்கின்றது. பாதுகாப்பினையும், பாதுகாப்புக்கான நடவடிக்கையை எடுத்தலையும் இரு கைகள் பிரதிபலிக்கின்றன. புவியின் தூரத்திலான மூலைகளினுள் மனித உரிமைகளின் பரவலையும், சர்வதேச மட்டத்தில் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பினையம் பூகோளம் பிரதிபலிக்கின்றது. தேசிய மட்டத்தில் பாதுகாப்புக்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான அவசியத்தை இலங்கையின் தேசப்படம் பிரதிபலிக்கின்றது. சகலருக்கும் மனித உரிமைகள் பாதுகாப்பு சமமாக வழங்கப்பட வேண்டும் என்பதை ஒரு பெண்ணினதும், ஆணினதும் மற்றும் சிறுவனினதும் உருவங்கள் பிரதிபலிக்கின்றன.

## ஆணைக்குழுவின் அடக்கம் (21 ஒக்டோபர் 2015 வரை)

தவிசாளர்
நீதியரசர் பிரியந்த ஆர்.பி.பெரேரா

ஆணையாளர்கள்
திரு.ரி.இ.ஆனந்தராஜா
திருமதி ஜெஸீமா இஸ்மயில்
கலாநிதி எஸ்.டபிள்யு.பரதீப மஹாநாமஹேவா
கலாநிதி பெர்னாட் டீ சொய்ஸா

பின்வருவோரைக் கொண்ட தற்போதைய ஆணைக்குழுவினால் மேற்குறித்த ஆணைக்குழு பிரதியீடு செய்யப்பட்டது.

தவிசாளர்
கலாநிதி நெலும் தீபிகா உடாகம

ஆணையாளர்கள்
திரு.எச்.கஸாலி ஹுசெயின்
திரு.சாலிய பீரிஸ்
திருமதி அம்பிகா சற்குணநாதன்
கலாநிதி உபனந்த விதானபத்திரண

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை - 2015

## தவிசாளரின் செய்தி

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்குப் புதிதாக நியமிக்கப்பட்ட தவிசாளராக, இவ்வருடத்திற்கான முன்னைய ஆணைக்குழுவின் செயற்பாடுகளின் விரிவான சாராம்சமொன்றை வழங்கும் மிகத்தெளிவான - கஷ்டமான பணியை நான் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதன் கொள்கைகளினதும், நியாய விளக்கத்தினதும் சாராம்சத்தை உள்வாங்கிக்கொண்டு செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடுவதில் கஷ்டம் சார்ந்திருக்கின்றது. எனவே, இலங்கையில் மனித உரிமைகளின் மேம்பாட்டினையும், பாதுகாப்பினையும் பலப்படுத்துவதற்காக, புதிய ஆணைக்குழுவின் தொலைநோக்கினதும், திட்டங்களினதும் மீது எனது செய்தி நோக்காகக் கொண்டிருக்கும் என்பது நியாயமானதாக மட்டும் விளங்கும்.

2015 ஏப்ரலில், பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கையின் அரசியலமைப்பின் பத்தொன்பதாவது திருத்தத்தின் கீழ் புதிய ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. 2015 ஒக்ரோபரில் புதிய ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

ஆண்டின் ஆரம்பத்தில், இலங்கை மக்கள், நிலைமாறு கால நீதி மற்றும் சிவில் யுத்தத்திற்குப் பிந்திய நல்லிணக்கம் ஆகியவற்றின் நடைமுறையொன்றின் முன்மொழிவுகளை முன்வைத்தல் உட்பட சகலருக்கும் மனித உரிமைகளுக்கு ஜனநாயகத்தன்மையிலான மரியாதையை வாக்களிக்கின்ற அரசியல் பங்கீடு சார்பாக தமது வாக்குரிமையை நிறைவேற்றினார்கள். நீதித்துறையினதும், கண்காணிப்பு ஆணைக்குழுக்களினதும் சுதந்திரத்தை பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கான பலமான பொதுசன கோரிக்கைகளுக்கு பதிலிறுப்பாக பத்தொன்பதாவது திருத்தம் இயற்றப்பட்டது. பதினெட்டாவது திருத்தத்தின் கீழ், அது நீக்கப்பட்டிருந்த போதிலும், நீதித்துறைக்கும், கண்காணிப்பு ஆணைக்குழுக்களுக்குமான நியமனங்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியினுள் மையப்படுத்தப்பட்டிருந்தது.

இலங்கையில் ஜனநாயகத்தன்மையிலான நடைமுறைக்கும் அத்துடன் மேம்படுத்தப்பட்ட மனித உரிமைகள் பாதுகாப்பின் உயர் நிலையிலான பொதுசன எதிர்பார்ப்புகளுக்கும் பத்தொன்பதாவது திருத்தத்தின் முக்கியத்துவத்தையிட்டு புதிதாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழு கூர்மையான உணர்வினைக் கொண்டிருந்தது.

இ.ம.உ.ஆ.குழுவையும் அத்துடன் இலங்கை மனித உரிமைகள் சூழ்நிலையையும் பலப்படுத்துவதற்கான பலமான அர்ப்பணிப்பொன்றை தம்முடன் புதிய ஆணையாளர்கள் கொண்டு வந்துள்ளதுடன், அவர்களில் பெரும்பாலானோர் மனித உரிமைகள் குறித்து ஆதரித்து வாதாடுபவர்களாக வருடக்கணக்கான அனுபவத்தைக் கொண்டுள்ளார்கள். மனித உரிமைகள் குறித்து ஆதரித்து வாதாடுபவர்களாக, பத்தொன்பதாவது திருத்தம் உட்பட ஜனநாயகரீதியிலான சீர்திருத்தங்களையிட்டு நாம் சீரான முறையில் கோரிக்கை விடுத்துள்ளோம்.

புதிய ஆணைக்குழுவின் அடக்கமானது இலங்கையின் இனத்துவ மற்றும் மதப் பரவலாக்கத்தைப் பிரதிபலிக்கின்றது. ஐந்து ஆணையாளர்களில் இருவர் பெண்கள் என்பதுடன், அதில் தவிசாளரும் ஒருவராவார். தம்முடன் அத்தகைய வளமிக்கதொரு மனித உரிமைகள் தொடர்பான அனுபவத்தையும், நிபுணத்துவத்தையும் கொண்டு வருகின்ற சகல ஆணையாளர்களுடன் பணியாற்றுவதில் தவிசாளராக நான் மிகவும் அதிகளவு அதிர்ஷ்டசாலியாக இருப்பதையிட்டு எண்ணிப்பார்க்கிறேன்.

நியமனத்தின் பின் உடனடியாக, சகல பணியாளருடனும், சிவில் சமூகத்துடனும், ஊடக ஆளணியினருடனும் (10 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பிராந்திய அலுவலகங்களின் பணியாளர் உட்பட) பரந்த கலந்தாலோசனையை ஆணைக்குழு நடத்தியது. தமது உத்தேசமான தொலைநோக்கினையும், உத்தேசமான செயல் பயனுரித்தாளர்களிடமிருந்து பின்னூட்டலையும் பெறுவதற்கு வாய்பொன்றை ஆணையாளர்களுக்கு கலந்தாலோசனைகள் வழங்கின.

முதலாவதாக, புதிய ஆணைக்குழுவின் வழிகாட்டும் தத்துவங்கள் உறுதியான சுதந்திரத்தைக் கொண்டிருக்கும் என்றும், மக்கள் முனைப்பிலான தன்மையொன்றில் சேவையாற்றும் என்றும் நாம் சுட்டிக்காட்டினோம். பொதுசனக் கருத்துக்கள் பிரதானமான முக்கியத்துவத்தைக் கொண்டதாக விளங்கும். இதேபோல, சிவில் சமூகத்துடன் பலமான தொடர்புகளைப் பராமரிப்பது முக்கியமான கொள்கை முன்னுரிமையொன்றாக இருக்கும்.

இரண்டாவதாக, முன்னுரிமைப்படுத்தப்பட்ட பிரச்சனைகள்.்.செயற்பாடுகள் அடையாளங் காணப்பட்டன:

- உத்தேசமான நிலைமாறு கால நீதி நடைமுறைக்கு மனித உரிமைகள் கண்காணிப்பை வழங்குதல்;
- மனித உரிமைகளின் அரசியலமைப்பிலான பாதுகாப்பினைப் பலப்படுத்துவதற்கு உத்தேசமான அரசியலமைப்புச் சீர்திருத்த நடைமுறை மீது தலையீடுகளைச் செய்தல்;
- தண்டனையிலிருந்தான விலக்கீட்டுரிமையை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கமொன்றுடன், சட்ட வினைப்படுத்தல் ஆளணியினராலான சித்திரவதையினதும் மற்றும் வேறு மீறல்களினதும் மீது நோக்கினைக் கொண்டிருத்தல்;
- சகல உரிமைகளை உறுதிப்படுத்துமுகமாக, ஓரங்கட்டப்பட்ட குழுக்களின் உரிமைகள் மீது நோக்கினைக் கொண்டிருத்தல்.
- உரிமைகளின் பிரிக்க முடியாத தத்துவத்திற்கான ஆணைக்குழுவின் அர்ப்பணிப்பினைக் கீழ்கோடிடுவதற்கு பொருளாதார மற்றும் சமூக உரிமைகள்.

மூன்றாவதாக, இலங்கை மனித உரி.மைகள் ஆணைக்குழுவில் பணியாற்றும் முறைகளில் உத்தேசமான சீர்திருத்தம் முனைவுபடுத்தப்பட்டது.

2016இல் கலந்தாலோசனை நடைமுறையொன்றின் ஊடாக மூலோபாயத் திட்டமொன்றை விருத்திசெய்வதற்கு ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

மனித உரிமைகள் தரங்களுக்கு அமைவான சட்டவாக்க மற்றும் நிருவாகச் செயற்பாடுகள் உள்ளதை உறுதிப்படுத்துவதில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதற்காக இ.ம.உ.ஆ.கு.இன் ஆலோசனைப் பணியை முன்னுரிமைப்படுத்துவதும் மிகவும் முக்கியமான கொள்கை நகர்வாகும் (பார்க்க, மூலத்திலான நியதியாக்கத்தின் 10(இ), (ஈ)). இதேபோல, புலனாய்வு.்.விசாரணை நடைமுறையைச் சீர்ப்படுத்துவது முன்னுரிமையொன்றாக விளங்கும். நடைமுறையில் பாரியளவில் தேங்கிக் கிடக்கும் விடயங்களை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். புலனாய்வு மற்றும் விசாரணை நடைமுறை இலகுவாக்கப்பட வேண்டும் என்ற அதேவேளை, இலங்கை மனி.த உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையினுள் நேரடியாக வராத முறைப்பாடுகள் தொடர்பான நிவாரண பொறிமுறைக்கு அனுப்பப்படும்.

நிறுவனரீதியிலான ஒட்டுந்தன்மைக்கு உத்தரவாதமளிப்பதற்காக தலைமை அலுவலகத்திற்கும், பத்து பிராந்திய அலுவலகங்களுக்கும் இடையில் மேம்படுத்தப்பட்ட தொடர்புறுத்தல் விளங்கும். இதேபோல, வேலை முறைகளைத் துரிதப்படுத்துவதற்கும், தரமுயர்த்துவதற்கும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் உபயோகத்தை நவீனமயப்படுத்துவதற்கும், ஊக்குவிப்பதற்குமான அவசியம் அடையாளங்காணப்பட்டுள்ளது.

பணியாளரின் தகுதிகளை மேம்படுத்துவது, குறிப்பாக புதிய முன்னுரிமைகளுடன் ஒத்திருப்பது தவிர்க்க முடியாததொன்றாகும்.

இ.ம.உ.ஆ.குழுவை மீள்-ஒழுங்குபடுத்துவதிலும், மீள்-முனைப்பாக்குவதிலும் அது முகங்கொடுக்கின்ற சவால்களின் சிரமத்தைப் புதிய ஆணைக்குழு முழுமையாக அங்கீகரிக்கின்றது. எனினும், ஆணையாளர்களின் தனிப்பட்ட அர்ப்பணிப்பும், சகல பிரிவுகளிலிருந்தும், குறிப்பாக சிவில் சமூக அமைப்புகளிலிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் அது பெற்றுக்கொண்ட ஆதரவும் அத்துடன் நல்லெண்ணமும் பணியைக் குறைந்தளவு கஷ்டமாக்கும் என்பதையிட்டு ஆணைக்குழு தன்னம்பிக்கையைக் கொண்டுள்ளது.

கலாநிதி நெலும் தீபிகா உடகம

தவிசாளர்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

# அத்தியாயம் ஒன்று : அறிமுகம்

ஜனவரியில் ஜனாதிபதி தேர்தல் மற்றும் ஓகஸ்டில் பொதுத் தேர்தல் போன்றவாறு நாட்டில் பாரிய மாற்றங்களை 2015ஆம் ஆண்டு சான்றுபகன்றது. பாரிய வன்முறைச் சம்பவங்கள் அறிக்கையிடப்படாமல், சார்புரீதியில் அமைதியான சூழல் ஒன்றில் தேர்தல்கள் இடம்பெற்றன. தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் ஒன்றுசேர்ந்து மிகவும் தீவிரமான வகிபங்கொன்றை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (இ.ம.உ.ஆ.கு.) வகித்ததுடன், இந்த அறிக்கையின் அத்தியாயம் இரண்டில் கண்காணித்தல் மற்றும் மீளாய்வு பிரிவின் செயற்பாடுகள் மீதான பிரிவில் சித்தரிக்கப்பட்டுள்ளவாறு சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல்களை உறுதிப்படுத்துவதற்காக பெருமளவு நடவடிக்கைகளையும் அது எடுத்தது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தியும், நாட்டில் ஜனநாயகத்தின் நடைமுறையை பலப்படுத்தியும் மற்றும் சுதந்திர ஆணைக்குழுக்களின் மீள்-தாபிப்பினை வழங்கியும் இலங்கையின் அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது. 2015 ஒக்டோபரில் சுதந்திரமான ஆணைக்குழுவொன்றாக இ.ம.உ.ஆ.கு. மீளமைக்கப்பட்டது.

2015ஆம் ஆண்டின் போது, இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை இந்த அறிக்கை கொண்டுள்ளது.

## 1.1 ஆணைக்குழுவின் அடக்கம், ஆணை மற்றும் பணிகள்

இலங்கை மக்களின் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் அத்துடன் பாதுகாப்பதற்கும் 1996இன் சட்டத்தின் இல.21இனால் தாபிக்கப்பட்ட சுதந்திரமான உறுப்பொன்றாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விளங்குகின்றது.

ஆணைக்குழுவின் பணிகள் அதிகாரச்சட்டத்தின் பிரிவு 10இல உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அவை வருமாறு:

(அ) அடிப்படை உரிமைகள் தொடர்பில் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்துகின்றதும் அத்துடன் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிக்கின்றதும் மற்றும் அவற்றை அனுசரிக்கின்றதுமான நோக்கமொன்றுடன் நடைமுறைகள் தொடர்பில் விசாரித்தலும், புலனாய்வு செய்தலும்.

(ஆ) அடிப்படை உரிமை மீறப்பட்டமை அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை என்பன தொடர்பிலான முறைப்பாடுகளையிட்டு விசாரணை செய்தலும், புலனாய்வு செய்தலும் அத்துடன் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்படும் ஏற்பாடுகளுக்கிணங்க மத்தியஸ்தம் மூலமும், இணக்கத்தின் மூலமும் அவற்றைத் தீர்ப்பதற்கு ஏற்பாடு செய்தலும்.

(இ) அடிப்படை உரிமைகளை மேம்படுத்துவதையும், பாதுகாப்பதையும் முன்னெடுத்துச் செல்வதில் சட்டவாக்க மற்றும் நிர்வாகப் பணிப்புரைகளையும், நடைமுறைமைகளையும் வகுத்தமைப்பதில் அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குதலும், உதவுதலும்.

(ஈ) சர்வதேச மனித உரிமைகள் தரங்களினதும் மற்றும் நியமங்களினதும் பிரகாரம், தேசிய சட்டங்களும், நிருவாக நடைமுறைகளும் உள்ளதை உறுதிப்படுத்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு பரிந்துரைகளைச் செய்தல்.

(உ) மனித உரிமைகள் துறையில் பொருத்தனைகளுக்கும், வேறு சர்வதேசச் சாதனங்களுக்கும் ஒப்பளிப்பதற்கான அல்லது இசைவதற்கான அவசியத்தின் மீது அரசாங்கத்திற்கு விதப்புரைகள் செய்தல் / அத்துடன்,

(ஊ) மனித உரிமைகளின் விழிப்புணர்வையும், கல்வியையும் மேம்படுத்தல்.

அதன் பணிகளை நிறைவேற்றுமுகமாக, பரந்த வீச்செல்லையைக் கொண்ட அதிகாரங்களுடன் ஆணைக்குழு உடமையாக்கப்பட்டுள்ளது. அவை சட்டத்தின் பிரிவு 11இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவை பின்வருவனவற்றுக்கான அதிகாரத்தை உள்ளடக்குகின்றன:

(1) அடிப்படை உரிமைகளின் ஏதேனும் மீறலை அல்லது உடனடியான மீறலை புலனாய்வு செய்தல்.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னால் அத்தகைய நீதிமன்றத்தின் அனுமதியுடன் விசாரணையிலுள்ள அடிப்படை உரிமைகளின் மீறலுக்கு அல்லது உடனடியான மீறலுக்கு தொடர்பான ஏதேனும் விசாரணைகளில் தலையீடு செய்தல்.

(3) அவர்களின் தடுத்துவைக்கும் இடங்களின் கிரமமான சோதனையின் மூலம் ஒன்றில் நீதித்துறைக் கட்டளையொன்றினால் அல்லது வேறு வகையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களின் சேமநலனைக் கண்காணித்தலும், அவர்களது தடுத்துவைத்தல் நிலைமைகளை மேம்படுத்துவதற்கு அவசியமான விளங்கக்கூடிய அத்தகைய பரிந்துரைகளைச் செய்தலும்.

(4) மீஉயர் நீதிமன்றத்தினால் அதற்கு அனுப்பப்பட்டுள்ள ஏதேனும் விடயம் தொடர்பில் மீஉயர் நீதிமன்றத்தினால் எடுக்கப்படுவதற்காக பணிப்புரைக்கப்பட்டுள்ளவாறு அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல்.

(5) நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் ஆகியவற்றை நடத்துவதன் மூலம், மனித உரிமைகளின் ஆராய்ச்சியைப் பொறுப்பேற்றல் அத்துடன் விழிப்பியலை மேம்படுத்தல் அத்துடன் அத்தகைய ஆராய்ச்சியின் முடிவுகளை பரப்புதல் மற்றும் பங்கிடுதல்.

(6 சட்டத்தின் பிரிவு 14இன் கீழ் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடொன்றைச் செய்வதன் மூலம், அவரினால் நியாயபூர்வமான விதத்தில் ஏற்படுகின்ற செலவினங்களை நிறைவேற்றுவதற்கு போதுமானதாகவுள்ள அத்தகைய தொகையைக் கொண்ட பணத்தை பாதிக்கப்பட்ட நபர் ஒருவருக்கு அல்லது பாதிக்கப்பட்ட நபரொருவரின் சார்பாக செயற்படும் நபரொருவருக்கு வழங்குதல்.

(7) அதன் பணிகளின் நிறைவேற்றத்திற்கு அவசியமான அல்லது உகந்த சகல அத்தகைய வேறு விடயங்களைச் செய்தல்.

மனித உரிமைகள் தொடர்பான விடயங்களில் அறிவினை அல்லது நடைமுறையிலான அனுபவத்தை கொண்டுள்ள நபர்கள் மத்தியிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஐந்து உறுப்பினர்களைக் கொண்டதாக ஆணைக்குழு விளங்குகின்றது. அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரை மீது, ஜனாதிபதியினால் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் நியமனத்திற்கு அதிகாரச்சட்டத்தின் பிரிவு 3 வழங்குகின்றது. தவிசாளராக ஆணைக்குழு உறுப்பினர்களின் ஒருவர் நியமிக்கப்படுகின்றார். 2015 மே மாதத்தில் அரசியலமைப்புக்கான 19ஆவது திருத்தத்தின் ஏற்றுக்கொள்ளலுடன் இ.ம.உ.ஆ.குழுவிற்கான ஆணையாளர்களின் நியமனம் அரசியலமைப்பினால் தற்போது ஆட்சிசெய்யப்படுகின்றது. இ.ம.உ.ஆ.கு. உட்பட இலங்கையின் சுதந்திரமான ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள் அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரை மீது இலங்கை ஜனாதிபதியினால் நியமிக்கப்பட வேண்டும் என 19ஆவது திருத்தத்தின் அத்தியாயம் அத்தியாயம் 7 அ வழங்குகின்றது.

மதிப்புரையின் கீழுள்ள ஆண்டின் போது, 2014ஆம் ஆண்டில் செயற்பட்ட ஆணைக்குழு 12 பெப்ரவரி 2015 அன்று பதவிக் காலம் முடிவடைந்த ஓர் ஆணையாளர் புறநீங்கலாக, 21 ஒக்ரோபர் 2015 அன்று வரை தொடர்ந்தது.

ஒரு தலைவர் மற்றும் நான்கு ஆணையாளர்கள் ஆகியோரைக் கொண்ட தற்போதைய ஆணைக்குழு 21 ஒக்ரோபர் 2015 அன்று நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவின் 5ஆவது உறுப்பினர் 13 நொவம்பர் 2015 அன்று நியமிக்கப்பட்டார்.

புதிதாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழு இலங்கை, கொழும்பு 08இல் உள்ள ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் 16 நவம்பர் 2015 அன்று பத்திரிகை மகாநாடொன்றை நடத்தியது. ஆணைக்குழுவின் எதிர்காலப் பணி மீது ஊடகங்களுக்குச் சுருக்கமாக விளக்குவதே அதன் பிரதான நோக்கமாகும்.

மூன்று வருடங்களைக் கொண்ட காலமொன்றுக்கு நியமிக்கப்பட்ட தற்போதைய ஆணைக்குழு, 30 ஒக்ரோபர் 2015 அன்று அதன் பணிகளை ஆரம்பித்ததுடன், மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டின் எஞ்சிய காலம் வரை ஆணைக்குழுவின் பணிகளையும் தொடர்ந்தது. அதிகாரச்சட்டத்தின் பிரிவு 22இன் பிரகாரம், செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அதிகாரச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு பணிகளை மேற்கொள்வதற்காக வேறு பணியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நான்கு பிரிவுகளை ஆணைக்குழு கொண்டுள்ளது.

- விசாரணை மற்றும் புலனாய்வுகள் பிரிவு
- கண்காணித்தல் மற்றும் மீளாய்வுய்வுப் பிரிவு
- கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் பிரிவு
- நிருவாக மற்றும் நிதிப் பிரிவு

ஒவ்வொரு பிரிவும் பணிப்பாளர் ஒருவரினால் தலைமை தாங்கப்படுகின்றது.

அதன் பணிகளை மிகவும் செயற்றிறனாக நிறைவேற்றுமுகமாக அம்பாறை, அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கல்முனை, கண்டி, மாத்தறை, திருகோணமலை மற்றும் வவுனியா ஆகியவற்றில் 10 பிராந்திய அலுவலகங்களை ஆணைக்குழு கொண்டுள்ளதுடன், ஆணைக்குழுவின் ஆணையை நிறைவேற்றுவதற்காக பிராந்திய ஒருங்கிணைப்பாளர் ஒருவரையும் மற்றும் வேறு பணியாளரையும் ஒவ்வொரு பிராந்திய அலுவலகமும் கொண்டுள்ளது. மேலதிகமாக, சில பிராந்திய அலுவலகங்கள் வேறுபட்ட அமைவிடங்களில் உப அலுவலகங்களை நடத்தின. மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, புத்தளம், நுவரெலியா மற்றும் பொலன்னறுவை ஆகியவற்றில் உப அலுவலகங்கள் செயற்பட்டன.

(இ.ம.உ..ஆ.கு. தலைமை அலுவலகத்தினதும் மற்றும் பிராந்திய அலுவலகங்களினதும் அமைவிடத்தினைக் கொண்டுள்ள இலங்கையின் தேசப்படமொன்றுக்கு இந்த அறிக்கையின் இறுதியில் பிற்சேர்க்கை 1அ ஐத் தயவுசெய்து பார்க்க).

மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டில், உள்நாட்டிலும் மற்றும் கடல்கடந்த நாடுகளிலும் உள்ள பரந்த வகையிலான நிறுவனங்களுடன் சந்திப்புக்களை ஆணைக்குழு நடத்தியது. ஏனையவற்றின் மத்தியில், PAFFREL, USAID மற்றும் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் ஆகியன உள்ளடங்குகின்றன (2015இல் இ.ம.உ..ஆ.கு.இன் ஆணையாளர்களினாலும் மற்றும் சிரேஷ்ட அலுவலர்களினாலும் பங்கெடுக்கப்பட்ட கூட்டங்களின் விரிவான சித்தரிப்பொன்றுக்கு இந்த அறிக்கையின் இறுதியில் பிற்சேர்க்கை 1ஆ ஐத் தயவுசெய்து பார்க்க).

UNDPஇலிருந்து பெருந்தன்மையிலான உதவுதொகையொன்றினால் அதன் செயற்பாடுகளில் ஆணைக்குழு உதவியளிக்கப்பட்டது (UNDPஉடனான ஆணைக்குழுவின் கூட்டுமுயற்சி மீதான விரிவான விபரமொன்றுக்கு இந்த அறிக்கையின் அத்தியாயம் ஆறு ஐத் தயவுசெய்து பார்க்க).

2015இல் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பு 233 ஆகும். ஆனால், ஆட்சேர்ப்பின் அங்கீகரிக்கப்பட்ட திட்டமொன்றின் இல்லாமையானது மேலதிகமான அலுவலர்களை ஆட்சேர்ப்பதிலிருந்து ஆணைக்குழுவைத் தடுத்தது. 2015இல் தலைமை அலுவலகத்திலும், பிராந்திய அலுவலகங்களிலும் தொழிலாற்றிய மொத்தப் பணியாளர் 161 ஆவர். ஆணைக்குழுவின் பிரதான நிதிப்படுத்தும் நிறுவனம் அரசாங்கத் திறைசேரியாகும். 2015ஆம் ஆண்டுக்கு ஆணைக்குழுவிற்கு ரூபா 186,500,000.00 ஒதுக்கப்பட்டது.

(2015இல் இ.ம.உ.ஆ.கு.இன் வருடாந்தச் செலவினத்தின் விரிவான கூற்றொன்றுக்கு இந்த அறிக்கையின் இறுதியில் உள்ள பிற்சேர்க்கை 01 ஐத் தயவுசெய்து பார்க்க).

# அத்தியாயம் இரண்டு : விசாரணைகள் மற்றும் புலனாய்வுப் பிரிவு

2.1 2015இல் தலைமை அலுவலகத்திற்கும், பிராந்திய அலுவலகங்களுக்கும் கிடைத்த முறைப்பாடுகளின் ஒரு மேலோட்டம்

முன்னைய வருடங்களின் பிரகாரம், தலைமை அலுவலகத்திலும், பிராந்திய நிலையங்களிலும் முறைப்பாடுகளைப் பெறுவதற்கும் அத்துடன் பதிவுசெய்வதற்குமான நடைமுறையொன்றை ஆணைக்குழு பேணியது.

**2.1.1 தலைமை அலுவலகம்**

2015ஆம் ஆண்டின் மீது 4,724ஐக் கொண்ட மொத்தமொன்றாக சேருகின்ற பொதுமக்களின் உறுப்பினர்களினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்னிலைப்படுத்தப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் தொழில் (22.30%) தொடர்பான விடயங்களுக்கே ஆகக்கூடுதலான எண்ணிக்கை தொடர்பினைக் கொண்டிருந்தது. அடுத்ததாக துன்புறுத்தல், தொந்தரவு (6.75%), கைது மற்றும் தடுத்துவைத்தல் (5.57%) அத்துடன் சித்திரவதை (4.72%) ஆகியன தொடர்பான முறைப்பாடுகள் உட்பட தனிப்பட்ட சுதந்திரத்தை (19.97%) மறுத்துரைத்தமை தொடர்பான முறைப்பாடுகள் விளங்குகின்றன. எனினும், 2015இல் சித்திரவதை மீதான முறைப்பாடுகள் குறைவடைந்துள்ளதாகக் குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், பொதுமக்களின் முறைப்பாடு தொடர்பான மனக்குறைகளுக்கு பொறுப்பான அரசாங்க அலுவலர்களினாலான செயலின்மைக்கு 15.79%ஐக் கொண்ட முறைப்பாடுகள் தொடர்பினைக் கொண்டுள்ளன.

2015இல் தலைமை அலுவலகத்தினால் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட விடயங்களின் எண்ணிக்கை 1,891 ஆகும்.

**2.1.2 பிராந்திய அலுவலகங்கள்**

**i. அம்பாறை பிராந்திய அலுவலகம்**

2015ஆம் ஆண்டின் போது, அம்பாறைப் பிராந்திய அலுவலகம் 141 முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டது. ஆண்டின் போது தீர்த்துவைக்கப்பட்ட விடயங்களின் எண்ணிக்கை 134 ஆகும். 2015இன் இறுதியில் உள்ளவாறு, கையிருப்பிலிருந்த விடயங்களின் எஞ்சிய எண்ணிக்கை 78 ஆகும். முறைப்பாடுகளின் ஆகக்கூடுதலான எண்ணிக்கை மீண்டும் ஒரு முறை தொழிலின் விடயங்களுக்கு (36.8%) ஆகும் என்பதுடன், அதை காணி மற்றும் சொத்து ஆதன விடயங்கள் (25.5%) பின்தொடர்கின்றன. சமூக சேமநலன் விடயங்கள் தொடர்பான முறைப்பாடுகள் மூன்றாவது அதிகளவு எண்ணிக்கையை (12.76%) கொண்டிருப்பதுடன், 9.21%இல் நான்காவதாக தனிப்பட்ட சுதந்திர விடயங்கள் விளங்குகின்றன.

### ii. அனுராதபுரம் பிராந்திய அலுவலகம்

2015ஆம் ஆண்டின் போது, அனுராதபுரம் பிராந்திய அலுவலகத்தில் 652 முறைப்பாடுகளை அனுராதபுரம் பிராந்திய அலுவலகம் பெற்றுக்கொண்டது. ஆண்டின் போது, 637 விடயங்களை இந்த அலுவலகம் தீர்த்து வைத்தது. 31 டிசம்பர் 2015இல் உள்ளவாறு, கைவசமுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 514 ஆகும். முறைப்பாடுகளின் ஆகக்கூடுதலான சதவீதம் (22.69%) சொத்து, ஆதனம் தொடர்பான விடயங்கள் ஆகும். தொழில் மீதான விடயங்கள் 21.62% ஆகும். முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கையின் 17.48% தனிப்பட்ட சுதந்திரங்கள் தொடர்பானவை என்பதுடன், முறைப்பாடுகள் மீதான 18.25% பொறுப்பான அரசாங்க அலுவலர்களின் செயலின்மை தொடர்பானவையாகும்.

### iii. பதுளை பிராந்திய அலுவலகம்

ஆண்டின் போது, பதுளை பிராந்திய அலுவலகம் 273 முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டது. ஆண்டின் போது, 191 விடயங்கள் மீது நடவடிக்கையை பதுளை பிராந்திய அலுவலகம் முடித்துவைத்தது. ஆண்டின் இறுதியில் கைவசம் உள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 177 ஆகும். தொழில் தொடர்பான விடயங்களே முறைப்பாடுகளின் ஆகக்கூடுதலான சதவீதங்களைக் கொண்டவையாகும். அதைத் தொடர்ந்து தனிப்பட்ட சுதந்திரத்தின் மீறல்கள் 18.31%ஐக் கொண்டிருப்பதுடன், காணி மற்றும் சொத்து ஆதனம் ஆகியன 17.21%ஐக் கொண்டிருக்கின்றன. அதேவேளை, பொறுப்பான அரசாங்க உத்தியோகத்தர்களின் செயலின்மைகள் மீதான முறைப்பாடுகள் 6.59%இல் விளங்குகின்றன.

### iv. மட்டக்களப்பு பிராந்திய அலுவலகம்

ஆண்டின் போது, மட்டக்களப்பு பிராந்திய அலுவலகம் 433 முறைப்பாடுகளைக் பெற்றுக்கொண்டது. முந்தைய ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட விடயங்கள் உட்பட 441 விடயங்கள் மீதான நடவடிக்கையை அலுவலகம் முடிவுக்கு கொண்டுவந்தது. அடுத்தமைகின்ற ஆண்டுக்கு 157 விடயங்கள் முன்கொண்டுவரப்பட்டுள்ளன. பொறுப்பான அரசாங்க அலுவலர்களின் செயலின்மைகள் மீதான முறைப்பாடுகள் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்தில் 31.40%இல் விளங்கின. 2015இல் உள்ளவாறு, தனிப்பட்ட சுதந்திரங்கள் 28.17%ஐக் கொண்ட சதவீதமொன்றிலும், தொழில் விடயங்கள் 11.17%இலும் மற்றும் சொத்து, ஆதன விடயங்கள் 7.62%இலும் விளங்கின.

**v. யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகம்**

ஆண்டின் போது, இ.ம.உ.ஆ.கு.இன் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகம் மட்டும் 315 முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டது. ஆண்டின் போது, 317 முறைப்பாடுகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதுடன், இவை 2015இல் சமர்ப்பிக்கப்பட்ட 234 விடயங்களையும் மற்றும் முந்தைய ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட 83 விடயங்களையும் கொண்டிருந்தன. யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடுகளின் ஆகக்கூடுதலான எண்ணிக்கையானது பொறுப்பான அரசாங்க அலுவலர்களின் செயலின்மைகள் மீது கிடைக்கப்பெற்ற மொத்த எண்ணிக்கைகளின் 23.49% ஆகும். தனிப்பட்ட சுதந்திரம் 20.63%ஐக் கொண்ட சதவீதமொன்றில் இருப்பதுடன், சமூக சேமநலன் விடயங்களுக்கு 20.63% தொடர்பானவையாகும். இது 14.92%இல் கல்விசார் விடயங்களினால் பின்தொடர்கின்ற அதேவேளை, சிறுவர் உரிமைகள் பிணக்குகள் 0.63%இல் விளங்குகின்றன.

**(அ) கிளிநொச்சி உப அலுவலகம்**

கிளிநொச்சியில் 3 ஒக்டோபர் 2012 அன்று நடமாடும் அலுவலகமொன்றை இ.ம.உ.ஆ.கு. யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகம் ஆரம்பித்துவைத்தது. 2015ஆம் ஆண்டின் போது, 101 முறைப்பாடுகளை நடமாடும் அலுவலகம் பெற்றுக்கொண்டது. கிளிநொச்சி உப அலுவலகத்தில், காணி மற்றும் சொத்து, ஆதனம் ஆகியன தொடர்பான விடயங்கள் மீது 29.70%ஐக் கொண்ட சதவீதமொன்று நிலவியது. இது தனிப்பட்ட சுதந்திரத்தின் மீறல்கள் மீது 22.77%ஐக் கொண்ட சதவீதமொன்றையும், அத்துடன் கல்வி மீதான விடயங்களில் 11.88%ஐயும் கொண்டிருந்தது. எனினும், 2015இல் தொழில் விடயங்கள் மீது 10.89%ஐக் கொண்ட சதவீதமொன்றையும், பொறுப்பான உத்தியோகத்தர்களின் செயலின்மை மீதான முறைப்பாடுகள் 7.92 சதவீதமொன்றையும் கொண்டிருந்தது.

**vi கல்முனைப் பிராந்திய அலுவலகம்**

ஆண்டின் போது, பிராந்திய அலுவலகம் 250 முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டது. ஆண்டின் போது, 262 முறைப்பாடுகள் மீதான நடவடிக்கை முடிவுக்கு கொண்டுவரப்பட்டதுடன், இவற்றில் 126 முறைப்பாடுகள் 2015இல் கிடைக்கப்பெற்றவையாகும். 2016ஆம் ஆண்டுக்கு 154 முறைப்பாடுகள் முன்கொண்டுவரப்பட்டுள்ளன. கல்முனைப் பிராந்திய அலுவலகத்தில் தொழில் விடயங்கள் மீதான முறைப்பாடுகள் 29.2%இல் விளங்குவதுடன், ஆகக்கூடுதலான எண்ணிக்கையாக செயலின்மைகள் மீதான முறைப்பாடுகள் 19.2%ஆக விளங்குகின்றன. தனிப்பட்ட சுதந்திரம் தொடர்பிலான விடயங்களைப் பொறுத்தளவில் அது 16%இலும், சொத்து,ஆதனப் பிணக்குகள் 12.4%இலும் விளங்குகின்றன.

**vii கண்டி பிராந்திய அலுவலகம்**

01 ஜனவரி 2015இல் உள்ளவாறு, முந்திய வருடங்களிலிருந்து 146 முறைப்பாடுகள் முன்கொண்டுவரப்பட்டன. 2015இன் போது, தலைமை அலுவலகத்தினால் அனுப்பப்பட்ட 123 முறைப்பாடுகளை இந்தப் பிராந்திய அலுவலகம் பெற்றுக்கொண்டது. நுவரெலியா நடமாடும் அலுவலகத்திற்கு 56 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதுடன், கண்டி பிராந்திய அலுவலகத்தினால் நேரடியாக 700 முறைப்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. அவ்வாறாக, ஆண்டின் போது 1,024 முறைப்பாடுகளைக் கொண்ட மொத்தமொன்று இப்பிராந்திய அலுவலகத்தினால் கையாளப்பட்டது. இத்தொகையில் 161 விடயங்கள் ம.உ.ஆ.கு. இன் ஆணையினுள் வராதவை எனக் கண்டறியப்பட்டது. 2015இல், 684 முறைப்பாடுகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டன. அவ்வாறாக, 01 ஜனவரி 2016க்கு 179 முறைப்பாடுகள் முன்கொண்டுவரப்பட்டன. கண்டி பிராந்திய அலுவலகத்தில் தொழில் பிணக்குகள் 21.75%இல் சார்ந்திருப்பதுடன், பொறுப்பான அரசாங்க அலுவலர்களின் செயலின்மைகள் மீதான முறைப்பாடுகள் 23.23%இலும், தனிப்பட்ட சுதந்திரம் 10.59%இலும் விளங்குகின்றன. கல்வி தொடர்பான விடயங்கள் 8.31%இலும், சொத்து, ஆதனப் பிணக்குகள் 6.94%இலும், சமூக சேமநலன் 2.05%இலும் விளங்குகின்றன.

**viii மாத்தறைப் பிராந்திய அலுவலகம்**

01 ஜனவரி 2015இல் உள்ளவாறு, 156 முறைப்பாடுகளை அலுவலகம் கொண்டிருந்தது. 2015இல் அலுவலகத்திற்கு 646 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதுடன், ஆண்டின் போது 621 முறைப்பாடுகள் மீது நடவடிக்கை முடித்து வைக்கப்பட்டது. 2016க்கு 181 முறைப்பாடுகள் முன்கொண்டுவரப்பட்டன. மாத்தறைப் பிராந்திய அலுவலகத்தில் தனிப்பட்ட சுதந்திரம் தொடர்பிலான விடயங்கள் மீது அதியுயர்வான சதவீதமொன்று (22.91%) இருந்தது. தொழில் 23.06%இல் சார்ந்திருப்பதுடன், கல்வி 10.37%இலும், ஆதனப் பிணக்குகள் 15.94%இலும் விளங்குகின்றன. எனினும், சமூக சேமநலன் (1.54%), சிறுவர் உரிமைகள் (0.30%) மற்றும் சூழல் (2.63%) போன்ற விடயங்கள் குறைந்தபட்ச வீதமொன்றில் சார்ந்திருப்பதை எம்மால் காணக்கூடியதாக இருக்கின்றது.

### ix திருகோணமலைப் பிராந்திய அலுவலகம்

2015இல், 152 முறைப்பாடுகளை திருகோணமலை பிராந்திய அலுவலகம் பெற்றுக்கொண்டதுடன், 2014இலிருந்து நடவடிக்கைக்காக 71 நடந்துகொண்டிருக்கும் விடயங்கள் 2015க்கு முன்கொண்டுவரப்பட்டன. அவ்வாறாக, 2015ஆம் ஆண்டின் போது மொத்தமாக 223 விடயங்களை அலுவலகம் கையாண்டது. அவசியமான புலன்விசாரணைகளும் மற்றும் விசாரணைகளும் முடிவுற்ற பின்னர், 166 விடயங்கள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டன. 1 ஜனவரி 2016 அன்று, 57 விடயங்கள் விசாரணையில் இருந்தன. திருகோணமலைப் பிராந்திய அலுவலகத்தில் பொறுப்பான அலுவலர்களின் செயலின்மை தொடர்பான முறைப்பாடுகளே ஆகக்கூடுதலான எண்ணிக்கையாக (34.21%) விளங்குகின்றன. அதைத் தொடர்ந்து தொழில் (22.36%), தனிப்பட்ட சுதந்திரம் (14.47%) மற்றும் சொத்து, ஆதனப் பிணக்குகள் (12.5%) ஆகியன விளங்குகின்றன. அதேவேளை 3.28%இல் கல்வியும், 1.97%இல் சமூக சேமநலனும் விளங்குகின்றன.

### x வவுனியா பிராந்திய அலுவலகம்

2015ஆம் ஆண்டின் போது, அடிப்படை உரிமை மீறல்கள் மீது 284 முறைப்பாடுகளை வவுனியா பிராந்திய அலுவலகம் பெற்றுக்கொண்டது. தனிப்பட்ட சுதந்திரத்தின் மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளின் ஆகக்கூடுதலான எண்ணிக்கை 39.43%இல் சார்ந்திருக்கின்ற அதேவேளை, 19.36%இல் சொத்து, ஆதனப் பிணக்குகள் விளங்குகின்றன. தொழில் விடயங்கள் 13.73%இல் சார்ந்திருப்பதுடன், செயலின்மைகள் மீதான முறைப்பாடுகள் 13.02%இல் விளங்குகின்றன. எனினும், சூழல் (1.05%) மற்றும் சமூக சேமநலன் (3.87%) போன்ற விடயங்கள் மீது முறைப்பாடுகளின் குறைந்த எண்ணிக்கையொன்று முன்னிலைப் படுத்தப்பட்டதை எம்மால் காண முடிகின்றது.

(2015ஆம் ஆண்டில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தினாலும் மற்றும் பிராந்திய அலுவலகங்களினாலும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் விபரங்களையும் அத்துடன் அத்தகைய முறைப்பாடுகளின் வகைப்படுத்தலையும் கொண்டுள்ள அட்டவணைகளுக்கு இந்த அறிக்கையின் இறுதியில் பிற்சேர்க்கைகள் 2அ மற்றும் 2ஆ ஆகியவற்றைத் தயவுசெய்து பார்க்க).

## 2.2 முறைப்பாட்டைக் கையாளும் நடைமுறை

விடயத்தின் தன்மை, மனுதாரர்களினதும் மற்றும் பிரதிவாதிகளினதும் விபரங்கள், விசாரணை அலுவலரின் பெயர் மற்றும் விடயத்தின் நிலை ஆகியவற்றை அடையாளங்காண்பதற்காக, பிரிவினால் தரவுத் தளமொன்று பராமரிக்கப்படுகின்றது. அலுவலகத்திற்கு வருகைதருவதுடன், ஆலோசனையை நாடுகின்ற முறைப்பாட்டாளர்களுக்கு செவிமடுப்பதற்காக ஒவ்வொரு நாளும் ஓர் அலுவலர் அல்லது இரு அலுவலர்கள் கடமைக்கு அமர்த்தப்படுத்தப்பட்டுள்ளனர். மேலதிகமாக, ‘ஹொட்லைன்’ ஊடாகவும் முறைப்பாடுகள் பெறப்படுகின்றன.

எழுத்துமூல முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்கின்ற சம்பந்தப்பட்ட அலுவலர் முறைப்பாடு குறித்து விசாரிப்பதற்கு மிகவும் பொருத்தமானதாக விளங்கக்கூடிய வேறு நிறுவனங்கள் மீதும் ஆலோசனையை வழங்குவார். நாளொன்றுக்கு அலுவலக நேரங்களின் போது சராசரியாக 35 முறைப்பாடுகளை கடமையில் உள்ள அலுவலர் கவனிப்பார்.

இ.ம.உ.ஆ.கு.இன் ஆணையினுள் விடயமொன்று வருகின்றதா என்பதைப் பரிசீலிப்பதன் மூலம், எந்த விடயங்களை முன்னெடுத்துச் செல்வது என்பது குறித்து தீர்மானிப்பதே முறைப்பாட்டைக் கையாளும் நடைமுறையின் இரண்டாவது கட்டமாகும். முறைப்பாடொன்று முன்னெடுத்துச் செல்லப்பட முடியுமென்றால், பிரதிவாதிகளிடமிருந்து அறிக்கைகளைப் பெறுதல், அவர்களது அவதானிப்புகளைக் கோருதல் மற்றும் அறிக்கைகளை நுண்ணாய்தல் ஆகியவற்றைப் புலனாய்வின் பூர்வாங்க நடவடிக்கைகள் உள்ளடக்குகின்றன. பின்னர் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அழைப்பாணைகளை வழங்குவதற்கும் மற்றும் அனுப்புவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆணைக்குழுவின் நோக்கெல்லையினுள் வராத விடயங்களை வேறு நிறுவனங்களுக்கு இ.ம.உ.ஆ.கு. அனுப்புகின்றது. அரசாங்கச் சேவை ஆணைக்குழு, தேசியப் பொலிஸ் ஆணைக்குழு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, அரச கருமமொழிகள் ஆணைக்குழு, தொழில் ஆணையாளர் மற்றும் சட்ட உதவி ஆணைக்குழு ஆகியனவே கலந்தாய்வதற்குரிய நிறுவனங்களில் சிலவாகும்.

இணக்கத்தினதும், மத்தியஸ்த்தினதும் ஊடாக தீர்வுகளைப் பெறுவதற்கு தரப்புக்களை வசதிப்படுத்துவதற்காக, ஆணைக்குழு அதிகாரத்தைக் கொண்டுள்ளது. விசாரணைகளையும், புலன்விசாரணைகளையும் ஆணைக்குழு நடத்துவதுடன், அடிப்படை உரிமைகளின் மீறலின் தருணங்களில் சம்பந்தப்பட்ட பதிலிறுப்பு அதிகார சபைகளுக்கு பரிந்துரைகளையும் செய்கின்றது. தலைமை அலுவலகத்தினால் அனுப்பப்படும் முறைப்பாடுகள் அல்லது பிராந்திய அலுவலகங்களில் நேரடியாகத் தாக்கல் செய்யப்படும் முறைப்பாடுகள் ஆகியன குறித்து பூர்வாங்க புலன்விசாரணைகளை.்.விசாரணைகளை பிராந்திய அலுவலகங்கள் பொறுப்பேற்கின்றன.

இ.ம.உ.ஆ.கு.இனால் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் மீள்-கரிசனைக்கான வேண்டுகோள்கள் கரிசனைக்கெடுக்கப்படுவதுடன், அவசியமானதென எண்ணப்படும் அத்தகைய விடயங்கள் குறித்து மேலும் விசாரணைகள் நடத்தப்படுகின்றன. பொதுவாக அத்தகைய விசாரணைகள் ஆணைக்குழுவின் தலைவரின் முன்னிலையில் நடத்தப்படுகின்றன.

(இ.ம.உ.ஆ.கு.இன் முறைப்பாட்டின் கையாள்தல் நடைமுறையின் சித்தரிப்பொன்றுக்காக, இந்த அறிக்கையின் இறுதியில் பிற்சேர்க்கைகள் 2இ (முறைப்பாடுகள் இல: **HRC/4429/09, HRC/1188/10)** மற்றும் 2ஈ (முறைப்பாடு இல. **HRC/630/15/1-14)** ஆகியவற்றைத் தயவுசெய்து பார்க்க)

**2.3 விசாரணைகள் ஊடாக விசேட தலையீடுகள்**

மேலதிகமாக சட்டத்தின் பிரிவு 14இன் கீழ் அதன் சொந்தப் பிரேரணையிலான (தன்னிச்சையாக) புலனாய்வுகளை ஆணைக்குழு பொறுப்பேற்கலாம் என்பதுடன், அடிப்படை உரிமைகளின் உடன் நிகழக்கூடிய மீறலை அல்லது உடனடியான மீறலை வெளிப்படுத்துவதாக ஆணைக்குழு கருத்தினைக் கொண்டுள்ள ஏதேனும் விடயம் குறித்து அது விசாரிக்கவும் முடியும். பொதுவாக, பொதுசன அக்கறை மீது பாரதூரமான தாக்கமொன்றை கொண்டுள்ள விடயங்கள் மீது அவ்வாறாக ஆணைக்குழு மேற்கொள்கின்றது.

(உறுப்புரை 14இனால் பாரப்படுத்தப்பட்டமை மீது உடமையாக்கப்பட்டுள்ள தகுதிகளின் சித்தரிப்பொன்றுக்கு பிற்சேர்க்கை 2உ: முறைப்பாடு இல. **HRC/3824/15** மற்றும் **3827/15**ஐத் தயவுசெய்து பார்க்க)

ஏதேனும் சட்டத்தின் மன்றத்தின் முன்னால் விசாரணையிலுள்ள அதே விடயமுள்ள விடயங்கள் குறித்து இ.ம.உ.ஆ.கு. விசாரணை செய்ய முடியாது.

**2.4 துரித அழைப்பு சேவை**

24 மணி நேர 'ஹொட்லைன்' சேவை நிலவுவதுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்பு கொள்வதன் மூலம் சித்திரவதை, தன்னிச்சையிலான கைதுகள் மற்றும் தடுத்துவைத்தல் ஆகியவற்றின் முறைப்பாடுகள் தொடர்பில் உடனடியான நடவடிக்கையை 'ஹொட்லைனைக்' கையாளும் புலனாய்வு அலுவலர்கள் எடுப்பார்கள்.

**2.5 தரிசிப்பு மற்றும் கண்காணித்தல் பொறிமுறை**

நீதித்துறைக் கட்டளையொன்றினால் அல்லது வேறுவகையில் யாரேனும் நபர் தடுத்துவைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்களுக்கும், சிறைச்சாலைகளுக்கும் தடுத்துவைத்தல் நிலையங்களுக்கும் மற்றும் வேறேதேனும் இடத்திற்கும் ஆணைக்குழு தரிசிப்புக்களை மேற்கொள்வதுடன், அங்கு அத்தகைய விசாரணைகளையும மேற்கொள்கின்றது அல்லது பாதுகாக்கப்படுகின்றனர் என்ற தடுத்துவைக்கப்பட்டோர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் குறிக்கோளுடன், தடுத்துவைத்தலில் அவர்களது சேமநலனையும் மற்றும் நிலைமைகளையும் கண்காணிப்பதற்கு அவசியமாக விளங்கக்கூடியதாக அதில் காணப்படுகின்ற யாரேனும் நபரிடமிருந்து அத்தகைய விசாரணைகளையும் மேற்கொள்கின்றது. தடுத்து வைக்கப்பட்டோரினால் சித்திரவதையினதும் மற்றும் சட்டவிரோதமாக நடத்தும் விதத்தினதும் சார்த்துரைகள் குறித்தும் ஆணைக்குழு புலன்விசாரணைகளை நடத்துகின்றது.

**2.5.1 பொலிஸ் நிலையங்களுக்கு நீடிக்கப்பட்ட இரவு தரிசிப்புக்கள் மற்றும் சிறைச்சாலை வருகைதரல்கள்**

சுதந்திரம் பறிக்கப்பட்டதாக விளங்குகின்ற நபர்கள் வைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்களுக்கும், சிறைச்சாலைகளுக்கும் மற்றும் வேறு அரசாங்கத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட இடங்களுக்கும் அறிவிக்கப்படாத தரிசிப்புக்களை இ.ம.உ.ஆ.கு.இன்

விசாரணைகள் மற்றும் புலன்விசாரணைகள் பிரிவு அத்துடன் பிராந்திய அலுவலகங்கள் ஆகியன மேற்கொள்கின்றன. தீவகத்தைச் சுற்றி ஒரு தொகையைக் கொண்ட வகைப்படுத்தப்பட்ட மார்க்கங்கள் மீது பொலிஸ் நிலையங்கள் அமைந்துள்ளன (8-12 பொலிஸ் நிலையங்களை மார்க்கமொன்று கொண்டுள்ளது). சிறைச்சாலைகள், CID, TID போன்ற வேறு தடுத்துவைத்தல் இடங்களுக்கான வருகைதரல்களுக் தரிசிப்புக மேலதிகமாக, அலுவலர்களினால் மொத்தமாக 159 பொலிஸ் நிலையங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

செயற்றிறனான முன்னேற்பாட்டிலானதும் மற்றும் எதிர்வினையிலானதுமான நடவடிக்கைகளின் ஊடாக, இலங்கையில் சித்திரவதையின் சம்பவங்களை ஒழிப்பதும், இந்த மீறல்களை இழைக்கின்ற பொறுப்பான அலுவலர்களை அடையாளங்காண்பதற்கு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதும் அத்துடன் தீர்விலான நடவடிக்கையைப் பரிந்துரைப்பதுமே பொலிஸ் நிலைய வருகைதரல்களின் நோக்கமாகும். மேலும், சித்திரவதையின் சம்பவங்களைத் தணிக்குமுகமாக, வேறு தொடர்பான அரசாங்க மற்றும் அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்களுடனான கூட்டுமுயற்சியை ஒருங்கிணைப்பதும், செயற்படுத்துவதுமே குறிக்கோளாகும். பொலிஸ் திணைக்களத்தின் நோக்கெல்லையினுள் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு (TID) மற்றும் குற்றவியல் புலனாய்வு பிரிவு (CID) ஆகியவற்றுக்கான விசேட் தரிசிப்புக்களை இ.ம.உ.ஆ.கு. மேற்கொள்கின்றது.

பொலிஸ் தரிசிப்புக்களையும் அடையாளங்காணப்பட்ட பொதுவான பிரச்சனைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- சந்தேகத்தின் மீது பாதுகாவலினுள் நபர்களை எடுத்தல், ஆனால் தடுத்துவைக்கப்பட்டோர் மீது சந்தேகிக்கப்பட்டுள்ள தவறு/குற்றம் குறித்து விளக்கம் அளிப்பதற்கு இயலாதிருத்தலை கைதின் போது உரிய நடைமுறையை பின்பற்றுவதற்கு தவறுதல் உள்ளடக்குகின்றது;
- பாதுகாவலில் தவறாக நடத்துதல் மற்றும் சித்திரவதை;
- நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்துவதில் தாமதம்;
- கூடங்களின் கடும்நெரிசல்;
- தடுத்துவைக்கப்பட்டோருக்கு சுகாதார வசதிகள் போன்ற தோதான அடிப்படை வசதிகள் இன்மை.

சிறைச்சாலைகளுக்கான வருகைதரல்களையும் ஆணைக்குழு பொறுப்பேற்கின்றது. இத்தகைய தரிசிப்புக தரிசிப்புககளின் போது சனநெரிசலையும் அத்துடன் சுகாதார வசதிகளுக்கான போதிய அடைதல்யின்மையையும் ஆணைக்குழு அவதானித்தது. சம்பந்தப்பட்டவர்களுடனான உசாவுகைகளைத் தொடர்ந்து, அதேயிடத்திலேயே சில பிரச்சனைகள் கவனத்திற்கு எடுக்கப்பட்டன.

## அத்தியாயம் மூன்று: கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் பிரிவு

மனித உரிமைகள் தொடர்பில் விழிப்பியலை மேம்படுத்துவதும், கல்வி வழங்குவதுமே இ.ம.உ.ஆ.கு. அதிகாரச்சட்டத்தின் பிரிவு 10 (ஊ)இன் கீழ் இ.ம.உ.ஆ.கு.இன் உள்மையப் பணிகளில் ஒன்றாகும். தீவகம் பூராவும் நிகழ்ச்சித்திட்டங்களையும், கருத்தரங்குகளையும், செயலரங்குகளையும் மற்றும் பயிற்சிகளையும் நடத்துவதன் மூலம், மனித உரிமைகளின் விழிப்பியலை இ.ம.உ.ஆ.கு.இன் கல்வி மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் பிரிவு மேற்கொள்கின்றது. பொதுமக்கள் மத்தியில் பங்கிடுவதற்காக மனித உரிமைகள் தொடர்பான ஆவணங்களையும் அது தயாரிக்கின்றது.

2015ஆம் ஆண்டில், பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு சுருக்கமாக கலந்துரையாடப்படுகின்றது:

### 3.1 நிகழ்ச்சித்திட்ட விருத்தி

2015 ஆண்டின் போது பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களைப் பிரிவு விருத்திசெய்து, நடத்தியது:

(i) உரிமைகள் அடிப்படையிலான அரசாங்கச் சேவையை உறுதிப்படுத்துவதற்கு கடமையாற்றுவோரின் பொறுப்பு;
(ii) பாதுகாப்புப் படைகளுக்கு சிறுபான்மை உரிமைகள் பாதுகாப்பு;
(iii) மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் அரசாங்க அலுவலர்களுக்கும் மற்றும் சிவில் சமூகத்திற்கும் இடையில் ஒருங்கிணைப்பைப் பலப்படுத்துதல் மீதான செயலமர்வு.

### 3.2 மனித உரிமைகள் ஆவணங்களைத் தயாரித்தல்

சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் பின்வரும் சிற்றேடுகளைப் பிரிவு தயார்படுத்தி, அச்சிட்டது:

| | ஆவணத்தின் பெயர் | அச்சடிக்கப்பட்ட பிரதிகள் | |
|---|---|---|---|
| | | சிங்களம் | தமிழ் |
| 1 | இலங்கை மனித ஆணைக்குழு பற்றி அறிந்துகொள்ளல் (மீளவாயப்பட்ட) | 5,000 | 5,000 |
| 2 | மனித உரிமைகள் பொறிமுறைகள் | 5,000 | 5,000 |
| 3 | அடிப்படை உரிமைகள் | 20,000 | 10,000 |
| 4 | மனித உரிமைகளின் மூலங்கள் மற்றும் அதன் முன்னேற்றம் | 8,000 | 5,000 |

3.3 இராணுவத்தினருக்கும், அரசாங்க அலுவலர்களுக்கும் கருத்தரங்குகளையும், செயலமர்வுகளையும் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்துதல்
3.3.1 வள நபர்களின் வளங்களுடன்

| திகதி | தலைப்பு/விடயம் | இலக்குக் குழு | ஒழுங்குபடுத்திய நிறுவனம் |
|---|---|---|---|
| 29-30.01.2015 | மனித உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வகிபங்கு | மதுபரிபாலன அலுவலர்கள் | இலங்கை மதுபரிபாலன திணைக்களம் |
| 12.03.2015 | வேலைத்தளத்தில் பாலியல் தொந்தரவுக்கு எதிரான கொள்கை | பணியாளர் | தேசிய உளவியல் சுகாதார நிறுவனம், அங்கொடை |
| 27.04.2015 | இ.ம.உ.ஆ.கு.இன் வகிபங்கு | பொலிஸ் அலுவலர்கள் | தேசிய பொலிஸ் கல்வி நிறுவனம், கட்டான |
| 28.04.2015 | சர்வதேசக் ஆவணங்கள் | பொலிஸ் அலுவலர்கள் | தேசிய பொலிஸ் கல்வி நிறுவனம், கட்டான |
| 28.04.2015 | குழு உரிமைகள் | பொலிஸ் அலுவலர்கள் | தேசிய பொலிஸ் கல்வி நிறுவனம், கட்டான |
| 30.04.2015 | தடுத்துவைக்கப்பட்டோரின் உரிமைகள் | பொலிஸ் அலுவலர்கள் | தேசிய பொலிஸ் கல்வி நிறுவனம், கட்டான |
| 30.04.2015 | பொதுசன அக்கறையிலான வழக்குத்தொடுப்பு | பொலிஸ் அலுவலர்கள் | தேசிய பொலிஸ் கல்வி நிறுவனம், கட்டான |
| 30.04.2015 | பெண் ஊழியர்களைக் கடத்துதல் | அரசாங்க அலுவலர்கள் | சனசமூக அபிவிருத்தி சேவைகள், கொழும்பு 10 |
| 13.07.2015 | மனித உரிமைகள் மற்றும் அரசாங்க அலுவலர்கள் | SLEAS அலுவலர்கள் | தேசிய கல்வி நிறுவனம் |
| 10.07.2015 | சித்திரவதைக்கு பாதிக்கபட்டோருக்கு ஆதரவாக சர்வதேச தினம் | பொலிஸ் அலுவலர்கள் | அனுராதபுரம் பிராந்திய அலுவலகம்/E & S P பிரிவு |
| 20.07.2015 | அரசாங்கச் சேவையில் பெண்களினால் முகங்கொடுக்கப்படும் பிரச்சனைகள் | பணியாளர்கள் | பெண்கள் விவகார, தேசிய மொழிகள், சமூக ஒருங்கிணைப்பு அமைச்சு, ராஜகிரிய |
| 25-26.08.2015 | மனித உரிமைகள் | அரசாங்க அலுவலர் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்கள் | அம்பாறை பிராந்திய அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகம் |
| 15.09.2015 | நோயாளர்களின் உரிமைகள் மற்றும் தாதியர் சேவை | தாதிமார் | கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவில |

| | | | |
|---|---|---|---|
| 10.09.2015 | சித்திரவதைக்கு பாதிக்கபட்டோருக்கு ஆதரவாக சர்வதேசத் தினம் | பொலிஸ் அலுவலர் | மாத்தறை பிராந்திய அலுவலகம்/தலைமை அலுவலகம் |
| 03.10.2015 | சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர்களின் உரிமை (உலக சிறுவர் தினம்) | மாணவர்கள், பெற்றோர்கள் | லயன்ஸ் கழகம், ஹொறண |
| 12.10.2015 | நோயாளர்களின் உரிமைகள் மற்றும் தாதிப்பணி | தாதிமார் | கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவில |
| 04.11.2015 | நோயாளர்களின் உரிமைகள் மற்றும் தாதிப்பணி | தாதிமார் | கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவில |
| 14.11.2015 | குடும்பம், சிறுவர் நலன், உரிமைகள் மற்றும் அது தொடர்பான சட்டங்கள் | இளைஞர் | திவிநெகும சனசமூக அடிப்படையிலான வங்கி, ஜா-எல |
| 18.12.2015 | பால்நிலை அடிப்படையிலான வன்முறை | பணியாளர் | தேசிய இணை-வாழ்வு, கலந்தாய்வு, அரச கரும மொழிகள் அமைச்சு |

### 3.3.2 இராணுவ அலுவலர்களுக்கு மனித உரிமைகள் விழிப்பியல் நிகழ்ச்சித் திட்டங்கள்

இலங்கை இராணுவத்தின் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டத்தின் பணிப்பாளர் சபையினால் செய்யப்பட்ட வேண்டுகோள்கள் மீது, இராணுவ அலுவலர்களுக்காக பிரிவானது கூற்றுக்களை விருத்திசெய்ததுடன், மனித உரிமைகள் விழிப்பியல் நிகழ்ச்சித் திட்டங்களையும் நடத்தியது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் சிங்களம் பேசும் வளவாளர்கள் பற்றாக்குறையின் காரணமாக, அப்பகுதிக்கு சிங்களம் பேசும் வளவாளர்கள்களை இ.ம.உ.ஆ.கு. தலைமை அலுவலகம் வழங்கியது.

விரிவுரை உதவிக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு வழங்கப்பட்டது:

| திகதி | தலைப்பு-விடயம் | ஒழுங்குபடுத்திய நிறுவனம் |
|---|---|---|
| 21.07.2015 | பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் மனித உரிமைகள் | சமாதான ஆதரவுச் செயற்பாட்டுப் பயிற்சி நிறுவனம், இலங்கை குக்கிலேகம |
| 12.05.2015 | மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள் மற்றும் சிறுவர் உரிமைகள் | 513 படையணி, இராணுவ முகாம், மாவம்கல்லடி, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் |
| 13.05.2015 | மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள் மற்றும் சிறுவர் உரிமைகள் | 512 படையணி, இராணுவ முகாம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் |
| 27.05.2015 | மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள் மற்றும் சிறுவர் உரிமைகள் | 12ஆவது கஜபா படைப்பிரிவு, இராணுவ முகாம், சிங்கள மகா வித்தியாலயம், கல்முனை வடக்கு, மட்டக்களப்பு |
| 09.06.2015 | மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள் மற்றும் சிறுவர் உரிமைகள் | கஜபா படைப்பிரிவு, /போர்ட் பிரெட்ரிக், இராணுவ முகாம், திருகோணமலை |
| 10.06.2015 | மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள் மற்றும் சிறுவர் உரிமைகள் | 222 படையணி, இராணுவ முகாம், ஜயந்திகம, கந்தளாய் |

### 3.3.3 உரிமைகள் அடிப்படையிலான அரசாங்கச் சேவையை உறுதிப்படுத்துவதற்கு கடமையாற்றுவோரின் பொறுப்பு மீதான செயலமர்வுகள்

பொதுமக்களிடமிருந்து ஆணைக்குழுவினால் பெறப்பட்ட முறைப்பாடுகள் பலதரப்பட்ட அரசாங்க நிறுவனங்களிலிருந்து சேவைகளைப் பெறுவதில் அவர்கள் முகங்கொடுத்த கஷ்டங்களுக்கு தொடர்பானவை என பிரிவு அவதானித்தது. எனவே, உரிமைகள் அடிப்படையிலான அரசாங்கச் சேவையை உறுதிப்படுத்துவதற்காக கடமையாற்றுவோரின் பொறுப்பு மீது நிகழ்ச்சித்திட்டமொன்றைப் பிரிவு விருத்திசெய்ததுடன், பின்வருமாறு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்தியது:

| இல. | திகதி | ஒழுங்குபடுத்திய நிறுவனம் |
|---|---|---|
| 1. | 12.05.2015 | யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகம் (தமிழ் மொழிமூலம்) |
| 2. | 26.05.2015 | மட்டக்களப்பு பிராந்திய அலுவலகம் (தமிழ் மொழிமூலம்) |
| 3. | 09.06.2015 | திருகோணமலை பிராந்திய அலுவலகம் (தமிழ் மொழிமூலம்) |
| 4. | 09.07.2015 | அனுராதபுரம் பிராந்திய அலுவலகம் |
| 5. | 24.07.2015 | அரசாங்க நிருவாக அமைச்சின் பணியாளர்கள் |
| 6. | 27.07.2015 | தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், பாணந்துறை |
| 7. | 16.09.2015 | கண்டி பிராந்திய அலுவலகம் |

### 3.3.4 சிறுபான்மையினரின் உரிமைகள் மீதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

பாதுகாப்பு படைகளினதும் மற்றும் பொலிஸினதும் மத்தியில், சிறுபான்மையினரின் உரிமைகள் குறித்து விழிப்பியலை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை பிரிவு எடுத்தது. சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பான சர்வதேச நியமங்கள், இலங்கைச் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகியன தொடர்பில் பாதுகாப்புப் படைகளின் வகிபங்கு மற்றும் பொறுப்பு ஆகியவற்றை நிகழ்ச்சித்திட்டம் கொண்டிருந்தது.

| திகதி | இலக்குக் குழு | ஒழுங்குபடுத்திய நிறுவனம் |
|---|---|---|
| 10.03.2015 | இராணுவத்தினதும், கடற்படையினதும் மற்றும் விமானப்படையினதும் அலுவலர்கள் | சமாதான ஆதரவுச் செயற்பாட்டுப் பயிற்சி நிறுவனம், இலங்கை, குக்குலேகங்க |
| 26.05.2015 | மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பொலிஸ் அலுவலர்கள் | கல்வி மற்றும் விசேட நிகழ்சித் திட்டப் பிரிவு |
| 09.06.2015 | திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பொலிஸ் அலுவலர்கள் | கல்வி மற்றும் விசேட நிகழ்சித் திட்டப் பிரிவு |
| 02.10.2015 | இராணுவத்தினதும், கடற்படையினதும் மற்றும் விமானப்படையினதும் அலுவலர்கள் | சமாதான ஆதரவுச் செயற்பாட்டுப் பயிற்சி நிறுவனம், இலங்கை, குக்குலேகங்க |

### 3.4 பணியாளரின் ஆற்றலளவைக் கட்டியெழுப்புதல்

2015ஆம் ஆண்டின் போது, பெருமளவு வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் ஆகியவற்றில் இ.ம.உ.ஆ.கு.இன் பணியாளர் பங்கெடுத்ததுடன், பெருமளவு உள்ளூர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் பங்கெடுத்தனர் (2015இல் இ.ம.உ.ஆ.கு.இன் அலுவலர்களினால் பங்கெடுக்கப்பட்ட வெளிநாடுகளில் நடைபெற்ற மகாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் ஆகியன மீதான விரிவான அட்டவணை ஒன்றுக்கு பிற்சேர்க்கை 3அ ஐத் தயவுசெய்து பார்க்க).

### 3.4.1 பால்நிலை மாற்றத்திற்குட்பட்ட நபர்கள் தொடர்பான விசேட விரிவுரை.

இ.ம.உ.ஆ.கு. தலைமை அலுவலகத்தில் 22 ஜுலை 2015 அன்று 1 பால்நிலை மாற்றத்திற்குட்பட்ட நபர்கள் மீதான ஒரு விசேட விரிவுரை நடைபெற்றது. UNAIDS இன் நாட்டு முகாமையாளரான கலாநிதி தயானத் ரணதுங்க வள நபராக விளங்கினார்.

### 3.4.2 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (03-05 ஒக்ரோபர் 2015 மற்றும் 10-12 ஒக்ரோபர் 2015)

குழாம் முயற்சி - பெலிகுல்லோயவில் அட்வென்ச்சர் அறிவுசெறிந்த கல்வி நிறுவனத்தினால் நடத்தப்பட்ட இ.ம.உ.ஆ.கு. பணியாளருக்கான வாழ்க்கைத்தொழில் முன்னேற்ற அனுபவப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம். பொதுவாக பங்கெடுப்பாளர்கள் மத்தியில் தலைமைத்துவம், குழாமைக் கட்டியெழுப்புதல், தொடர்பாடல் மற்றும் குழாம் பணி, சுய தன்னம்பிக்கை ஆகியன மீதும் மற்றும் குறிப்பாக அவர்களது வாழ்க்கைத்தொழில் தகுதிகளை விருத்திசெய்தல் மீதும் இந் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பநிலையாக நோக்கினைக் கொண்டிருந்தது. நிகழ்ச்சித்திட்டமானது இரு தொகுதிகளுக்காக 03-05 ஒக்ரோபர் 2015 வரையும் 10-12 ஒக்ரோபர் 2015 வரையும் நடத்தப்பட்டது.

### 3.5 சட்ட வாரத்திற்காக இ.ம.உ.ஆ.கு. பொருட்காட்சிக் கூடம்

தேசிய சட்ட வாரம் 23-29 நவம்பர் 2015 வரை நடத்தப்பட்டது. இந்த வாரத்தைக் கொண்டாடுவதற்காக, 28-29 நவம்பர் 2015 வரை பொருட்காட்சியொன்றை ஒழுங்குபடுத்துவதற்காக நீதி அமைச்சுடனும் மற்றும் சட்ட உதவி ஆணைக்குழுவுடனும் இலங்கை வழக்கறிஞர் சங்கம் கூட்டுமுயற்சியை மேற்கொண்டது. அந்தப் பணிக்கு ஆணைக்குழு பங்களித்ததுடன், பொருட்காட்சியில் கூடமொன்றையும் கொண்டிருந்தது.

### 3.6 சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2015

வெகுஜன ஊடகத்தினதும் மற்றும் சமூக ஊடகத்தினதும் ஊடாக "இலங்கையில் மனித உரிமைகள் கலாசாரமொன்றை உருவாக்குவதற்காக ஒன்றாகப் பணியாற்றுவோம்" என்ற கருப்பொருளின் கீழ், தேசிய மட்டத்தில் சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2015ஐ இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கொண்டாடியது.

மனித உரிமைகள் தினத்தன்று, மூன்று மொழிகளில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் ஆணைக்குழு பங்கெடுத்தது.

நிகழ்ச்சிகள் வருமாறு:

| | | |
|---|---|---|
| நியூஸ் லைன் | 10 டிசம்பர் 2015 | எம்.ரி.வி. சனல்ஸ் பிறை. லிமிற். |
| பத்திகட | 10 டிசம்பர் 2015 | சிரச ரி.வி. |
| நுகசெவன | 10 டிசம்பர் 2015 | இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் |
| நிசகலங்கா ஹத ஹமார | 10 டிசம்பர் 2015 | சுயாதீன தொலைக்காட்சி வலைப்பின்னல் |
| எதிரொலி | 11 டிசம்பர் 2015 | சக்தி ரி.வி. |

'சமூக ஊடகங்கள் ஊடாக மனித உரிமைகள் கலாசாரமொன்றை உருவாக்குவதற்காக ஒன்றாகப் பணியாற்றுவோம்' என்ற கருப்பொருளின் கீழ், மனித உரிமைகள் பிரச்சாரமொன்றையும் ஆணைக்குழு ஆரம்பித்தது. தலைவரினதும் மற்றும் ஆணையாளர்களினதும் முன்னிலையில் 14 டிசம்பர் 2015 அன்று பிரச்சாரம் ஆரம்பிக்கப்பட்டது.

மனித உரிமைகள் மீது ஒரு நிமிட துணுக்குகளை ஆணைக்குழு உருவாக்கியதுடன், இது ஒரு மாதத்தைக் கொண்ட காலமொன்றுக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக ஒலிபரப்பப்பட்டது. இந்தச் செய்திகள் தீவகம் பூராகவும் வர்த்தகச் சேவை வானொலி அலைவரிசைகளினதும் மற்றும் பிராந்திய வானொலி அலைவரிசைகளினதும் ஊடாக ஒலிபரப்பப்பட்டன.

### 3.7 வேறு நிகழ்ச்சித்திட்டங்கள்

### 3.7.1 சிவில் சமூகத்துடன் ஒருங்கிணைப்பு

#### 3.7.1.1 சிவில் சமூகக் கூட்டம்

இ.ம.உ.ஆ.கு.இல் 18 பெப்ரவரி 2015 அன்று இ.ம.உ.ஆ.கு.இனால் சிவில் சமூக ஆலோசனை ஒன்று நடத்தப்பட்டது. இக் கூட்டத்தில் நிலை அறிக்கையொன்றை உருவாக்குவதெனவும், தடுப்பு நிலையங்களுக்கு இணைந்த வருகைதரல்களை மேற்கொள்வதெனவும், தமது தேசிய கீதத்தில் சகல சமூகங்களின் மொழியை எவ்வாறு வேறு நாடுகள் ஒன்றிணைக்கின்றன என்பது குறித்து மதிப்பாய்வொன்றை மேற்கொள்வதெனவும், தேர்தல்கள் மீது இணைந்த ஆலோசனை கொண்டிருப்பதெனவும் அத்துடன் LLRC அறிக்கை குறித்து பொதுமக்களுக்கு அறியச்செய்வதெனவும் சிவில் சமூகமும், இ.ம.உ.ஆ.குழுவும் கூட்டாக உடன்பட்டன.

#### 3.7.1.2 சிவில் சமூக செயல் குழுக் கூட்டம்

ஒரு சிவில் சமூக குழுக் கூட்டம் 20.01.2015 அன்று நடத்தப்பட்டது. இந்த கலந்துரையாடலில், கிட்டிய அண்மைக் காலத்தில் எவ்வாறு ஊடகங்களும், சிவில் சமூகமும் நடத்தப்பட்டன அத்துடன் ஒன்றுகூடுவதற்கான உரிமை, இணைவதற்கான உரிமை மற்றும் கருத்திற்கான உரிமை ஆகியன பற்றி அவை எவ்வாறு உணர்ந்தன என்பன குறித்து சுட்டிக்காட்டப்பட்டது. சிவில் சமூகம் மீது பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை மீதும் அத்துடன் பயங்கரவாத தடுப்புச்சட்டம் மீதும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

### 3.7.1.3 (சிவில் சமூகத்துடன் ) புதிதாக நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவுடனும் கூட்டம்

புதிதாக நியமிக்கப்பட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் 16 நவம்பர் 2015 அன்று சிவில் சமூகத்துடன் கூட்டமொன்று நடத்தப்பட்டதுடன், அவர்களது கரிசனைகள் மற்றும் சிவில் சமூகம் மீது ஆணைக்குழுவின் எதிர்காலச் செயற்பாடுகள் ஆகியன மீது சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் ஆணைக்குழு ஆலோசனை நடத்தியது.

### 3.7.2˙ பால்நிலை மாற்றத்திற்குட்பட்ட நபர்களின் நிவாரணம்

இதயத்திலிருந்து இதயத்திற்கு மற்றும் சமமான பங்கு போன்ற LGBTIQ உரிமைகள் மீது பணியாற்றுகின்ற இ.ம.உ.ஆ.கு.க்கும், சிவில் சமூகத்திற்கும் இடையில் 22 மே 2015 அன்று கலந்துரையாடலொன்று நடைபெற்றது. கலந்துரையாடலின் போது, அவர்களுக்கு கரிசனையைக் கொண்ட பிரச்சனைகள், விசேடமாக பிறப்புச் சான்றுப்பத்திரம், தேசிய ஆளடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு போன்ற பால்நிலை மாற்றத்திற்குட்பட்ட நபர்களை சட்டபூர்வ ஆவணத்தில் பால்நிலை மாற்றம் தொடர்பிலான சட்டபூர்வ மற்றும் நடைமுறையிலான பிரச்சனைகளை ஆணைக்குழுவின் முன்னிலையில் அவர்கள் முன்வைத்தனர்.

பதிவாளர் நாயகத்தின் திணைக்களம், ஆட்கள் பதிவுத் திணைக்களம், குடிவரவு, மற்றும் குடியகல்வு திணைக்களம், சுகாதாரத் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் போன்ற சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகார சபைகளுடன் இன்னொரு கலந்துரையாடல் 16 ஜுன் 2015 அன்று நடத்தப்பட்டது. அது முதல் தனிப்பட்ட ஆவணப்படுத்தலில் பால்நிலை மாற்றத்திற்குட்பட்ட நபர்களை இயலச்செய்வதற்காக இ.ம.உ.ஆ.கு.இனால் வகுத்தமைக்கப்பட்ட பால்நிலைச் சான்றுப்பத்திரம் தொடர்பில் சுகாதார அமைச்சு, பதிவாளர் நாயகத்தின் திணைக்களம் மற்றும் சிவில் சமூகம் ஆகியவற்றுடன் கலந்துரையாடல்களை இ.ம.உ.ஆ.கு. தொடர்ந்தது. 2015இல், தமது தனிப்பட்ட ஆவணப்படுத்தலில் தமது பால்நிலை மாற்றத்தை மாற்றுப்பாலினத்தவர்களை இயலச்செய்வதற்காக, சுற்றுநிருபமொன்றை வழங்குவதற்கு சுகாதார அமைச்சுக்கு இ.ம.உ.ஆ.கு. பரிந்துரைத்தது.

### 3.7.3 மனித உரிமைகள் காப்பளிப்போர்களின் பாதுகாப்பு மீதான வழிகாட்டல்கள்

மனித உரிமைகள் காப்பளிப்போர்களைப் பாதுகாப்பதற்காக, அரசாங்க அதிகார சபைகளுக்கான வழிகாட்டல்களைத் தயாரிக்கும் அவசியத்தை இ.ம.உ.ஆ.கு. அவதானத்திற்கெடுத்தது. வழிகாட்டல் தயாரிக்கப்பட்டு, அவர்களது கருத்துக்களுக்காக சிவில் சமூகச் செயல் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. பிராந்திய மட்டத்திலும் கலந்துரையாடல்களை நடத்துவதற்கு ஆணைக்குழுவிற்கு சிவில் சமூகச் செயல் குழு வேண்டுகோள் விடுத்தது. ஆறு பிராந்திய ஆலோசனைகளுக்கு பிரிவு கொண்டிருந்தது

(யாழ்ப்பாணம் - 13 மே 2015, வவுனியா - 09 ஜுலை 2015, அனுராதபுரம் - 10 ஜுலை 2015, திருகோணமலை - 10 ஜுன் 2015, கண்டி - 16 செப்ரெம்பர் 2015, மட்டக்களப்பு - 27 மே 2015).

## அத்தியாயம் நான்கு: கண்காணிப்பு மற்றும் மீளாய்வுப் பிரிவு (ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு பிரிவு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினுள் ஒரு மிகவும் முக்கியமான வகிபங்கினை கண்காணித்தல் மற்றும் மீளாய்வு பிரிவு ஆற்றுகின்றது. பிரிவின் ஆணை மிகவும் பரந்தது என்பதுடன், சர்வதேச மனித உரிமைகள் நியமனங்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சகல பிரச்சனைகளையும் சூழவுள்ளது.

2015ஆம் ஆண்டின் போது, கண்காணித்தல் மற்றும் மீளாய்வுப் பிரிவினால் பின்வரும் செயற்பாடுகள் பொறுப்பேற்கப்பட்டன.

### 4.1 ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு பிரிவின் தாபிப்பு

புதிதாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவானது கண்காணிப்பு மற்றும் மீளாய்வுப் பிரிவை ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு பிரிவாக[1] மீள்-பெயரிட்டது. அவசியமான கொள்கைத் தலையீடுகளைச் செய்வதில் ஆணைக்குழுவுக்கு உதவுமுகமாக, இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சனைகள் மீது ஆராய்ச்சியை நடத்துவதே இப்பிரிவின் குறிக்கோளாகும்.

### 4.2 2015 ஜனாதிபதி தேர்தல் மீதான இ.ம.உ.ஆ.கு. அறிக்கை

8 ஜனவரி 2015 அன்று நடைபெற்ற இறுதியான ஜனாதிபதி தேர்தலில் ஒரு சுதந்திரமானதும், நியாயமானதும் மற்றும் பாரபட்சமற்றதுமான தேர்தல் ஒன்றை உறுதிப்படுத்துவதற்காக, தீவிரமான வகிபங்கொன்றை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆற்றியது. சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலொன்றில் ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதற்காக நாட்டின் மக்களுக்கு உதவுவதற்காக, அரசாங்க அலுவலர்களையும், சிவில் சமூகத்தின் உறுப்பினர்களையும் மற்றும் தேர்தல் கண்காணிப்பாளர்களையும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கையாண்டது. ஆணைக்குழுவின் செயற்பாடுகளின் அங்கமொன்றாக தேர்தல் ஆணையாளருடனும் மற்றும் வேறு பயனுரித்தாளர்களுடனும் ஆணைக்குழு கூட்டங்களை நடத்தியது, விசாரணைகளையும், ஊடக கண்காணித்தலையும் மேற்கொண்டது, அறிக்கைகளை வரவழைத்தது அத்துடன் தேர்தல் தொடர்பான சகல நடவடிக்கைகள் தொடர்பில் பணிப்புரைகளையும், வழிகாட்டல்களையும் மற்றும் பரிந்துரைகளையும் வழங்கியது. 2015 ஜனாதிபதி தேர்தலில், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீடு மீது அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டது. தேர்தல்கள் திணைக்களத்திற்கான பரிந்துரைகள் வருமாறு:

---

[1] 23 நவம்பர் 2015இலிருந்து ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு பிரிவாக கண்காணிப்பு மற்றும் மீளாய் பிரிவு பெயர் மாற்றமடைந்தது

1. மனிதனால் ஆக்கப்பட்ட அல்லது இயற்கையான பேரிடரின் காரணமாக, தமது வதிவிடங்களுக்கு அப்பால் பாதுகாப்பான இடங்களில் மக்கள் தங்கவேண்டிய சூழ்நிலையொன்று எழுகின்ற விடயத்தில், அதன் மாவட்ட மட்ட அலுவலர்கள் ஊடாக நிலவுகின்ற சூழ்நிலை குறித்து தேர்தல்கள் திணைக்களம் விசாரணை செய்ய வேண்டும் என்பதுடன், அந்தச் சூழ்நிலையில் தமது வாக்குகளை அளிப்பதற்கு மக்களுக்கான வாய்ப்புக்களையும் வழங்க வேண்டும்.

2. அறிக்கையிடப்பட்டவாறு, தமது விலாசங்களினதும் மற்றும் வீட்டு இலக்கங்களினதும் கீழ், தேர்தல் பதிவேட்டில் வாடகைக் குடியிருப்பாளர்களின் பதிவினை வீட்டு உரிமையாளர்கள் நிராகரிக்கின்றனர் என்ற உண்மையின் காரணமாக, தேர்தல் பதிவேட்டில் பதிவுசெய்யப்படுவதற்கு வாடகைக் குடியிருப்பாளரின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கும் அத்துடன் அவ்வாறாக இனிவரவுள்ள தேர்தல்களில் தமது வாக்குகளை அளிப்பதற்கான வாய்ப்பினை அவர்களுக்கு வழங்குவதற்கும் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

3. தேர்தல்கள் ஆணையாளருடனான உறவை அதிகளவு ஒழுங்குபடுத்தப்படுமுகமாக, தேர்தல் காலத்தின் போது, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக, தேர்தல்கள் திணைக்களத்தில் அலுவலர் ஒருவரை நியமித்தல்.

### 4.2.1 கருத்துச் சுதந்திரம்

2015 ஜனாதிபதி தேர்தல் காலத்தின் போது, உள்ளூராட்சி அதிகார சபைகளின் நோக்கெல்லையினுள் உள்ள குறிப்பான இடங்களில் கூட்டங்களை நடத்துவதற்கு அனுமதி கோரப்பட்ட போது, சில அரசியல் கட்சிகள் சாதகமாக நடத்தப்பட்டதுடன், தேர்தல் நடைமுறைக்கு தொடர்பற்ற வேறு செயற்பாடுகளுக்கு அத்தகைய இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்ற அடிப்படையின் மீது, இந்த உரிமை ஏனையோரிடம் பறிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிக்கையிடப்பட்டது. இந்த ஆணைக்குழுவுக்கு இந் நடைமுறையை தேர்தல்கள் ஆணையாளர் அறிக்கையிட்டார். இ.ம.உ.ஆ.கு.இன் தலைவரின் முன்னிலையில், மேல் மாகாண சபையின் உறுப்பினர் திரு.எஸ்.ரண்வலவினால் முன்னிலைப்படுத்தப்பட்ட **HRC/5030/2014** முறைப்பாடு குறித்த விசாரணையின் போது, தேர்தல் காலத்தின் போது பொது இடங்களின் ஒதுக்கீடு தொடர்பில் உள்ளூராட்சித் திணைக்களத்தின் சகல மாகாண ஆணையாளர்களுடன் தேசிய மட்டத்திலான கூட்டமொன்றை நடத்தும் முக்கியத்துவத்தினைத் தேர்தல்கள் ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடலொன்றுக்கான பிரச்சனையொன்றாக, இதை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு எடுத்துக்கொண்டதுடன், இ.ம.உ.ஆ.கு.இல் 17 மார்ச் 2015 அன்று கருத்தரங்கொன்றையும் நடத்தியது. பின்வரும் அரசாங்க நிறுவனங்களினதும், பயனுரித்தாளர்களினதும் பிரதிநிதிகள் பங்கெடுத்தனர்.

1. தேர்தல் ஆணையாளர் மற்றும் தேர்தல்கள் திணைக்களத்தின் சிரேஷ்ட அலுவலர்கள்
2. பொது ஒழுங்கு அமைச்சுச் செயலாளரின் ஒரு பிரதிநிதி
3. உள்ஙராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் மேலதிகச் செயலாளர்
4. சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் (நிருவாகம் மற்றும் தேர்தல்)
5. மேல், வட மேல், மத்திய, கிழக்கு, சப்ரகமுவ வட மத்தி மற்றும் ஊவ ஆகிய மாகாண சபைகளின் உள்ஙராட்சித் திணைக்களத்தின் ஆணையாளர்கள்
6. வட-மேல், கிழக்கு மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாண சபைகளின் வீதிப் பிரயாணிகள் போக்குவரத்து அதிகார சபைகளின் தலைவர்கள்
7. அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள்
8. தேர்தல் கண்காணித்தல் தாபனங்களின் பிரதிநிதிகள்

தேர்தல் ஆணையாளரினாலும் மற்றும் பங்கெடுப்பாளர்களினாலும் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளின் சாராம்சம் வருமாறு:

சகல மாகாண சபைகளின் உள்ஙராட்சி அமைச்சுக்கள், உள்ஙராட்சி அதிகார சபைகள் (விசேடமாக கொழும்பு மாநகர சபை) மற்றும் வேறு தொடர்பான நிறுவனங்கள் ஆகியவற்றின் ஆதரவுடன், மாவட்ட மட்டத்தில் பொதுக்கூட்டங்களுக்கான பொருத்தமான இடங்கள் மீது தகவலைச் சேகரித்தல். ஒவ்வொரு மாவட்டத்திலும் பொதுக்கூட்டங்களுக்கான பொருத்தமான இடங்களை அடையாளங்காண்பதை அடுத்து சொல்லப்பட்ட மாவட்டத்தின் மாவட்டச் செயலாளரும் மற்றும் மாவட்டத்தின் உதவித் தேர்தல் ஆணையாளர்களும் ஒவ்வொரு மாவட்டத்தின் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் கூட்டமொன்றை நடத்தி, அவர்களது தேவைகளையும் மற்றும் கூட்டங்களின் நாட்காட்டியையும் கரிசனைக்கெடுத்து, ஒவ்வொரு கட்சியையும் அறிவூட்ட வேண்டும். மேற்படி முன்மொழிவினை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அங்கீகரித்ததுடன், பங்கெடுக்குமாறும் அத்துடன் அவர்களது தாராளமான ஆதரவை வழங்குமாறும் சகல கட்சிகளுக்கும் அறிவித்தது.

### 4.3 2015 பொதுத் தேர்தல்கள்

17 ஓகஸ்ட் 2015 அன்று புதிய பாராளுமன்றமொன்றைத் தெரிவுசெய்வதற்கு இலங்கையர்கள் வாக்களித்தனர். மனித உரிமைகள் ஆணைக்குழுவும், தேர்தல்கள் திணைக்களமும் வேறுபட்ட ஆணைகளைக் கொண்டுள்ளன. ஆனால், அவை இரண்டும் நீதியையும், சமத்துவத்தையும் நோக்கி பணியாற்றுகின்ற நோக்கத்தினைக் கொண்டுள்ளன. இவற்றைச் சாதிக்குமுகமாக, சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல் ஒன்றை உறுதிப்படுத்துவதற்காக தேர்தல்கள் திணைக்களத்துடனான அத்துடன்.∴அல்லது சிவில் சமூகத் தாபனங்களுடனான கூட்டு முயற்சியுடன் ஆணைக்குழுவினால் வேறுபட்ட முன்னெடுப்புக்கள் எடுக்கப்பட்டன.

**I** - அரசியல் கட்சிகளுடன் தேர்தல் கூட்டங்களுக்கு பொது இடங்களை ஒதுக்குதல்

தேர்தல்கள் ஆணையாளரினதும், உள்ஙராட்சிச் சபைகளினதும் மற்றும் அமைச்சுக்களுக்கு தொடர்பான செயலாளர்களினதும் பங்கெடுப்புடன், கூட்டங்களை மனித உரிமைகள் ஆணைக்குழு நடத்தியது. சட்ட வரைச்சட்டத்தினுள் முதலில் வந்தவர் முதலில் பரிமாறப்படுவார் என்றவாறு, சலுகைகள் இன்றி நியாயத்தை உறுதிப்படுத்துவதற்காக,

சொல்லப்பட்ட பிரச்சனை தொடர்பில் அது வழிகாட்டல்களையும் தயாரித்தது. இந்த வழிகாட்டல்களின் அமுலாக்கத்தினை மேற்பார்வை செய்வதற்காக மாவட்டச் செயலாளரின் தலைமையிலான குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

**II - தனியார் துறை ஊழியர்களுக்கான லீவு**

வாக்களிப்பதற்கு தனியார் துறை ஊழியர்களுக்கு லீவு வழங்குவது தொடர்பில் ஓட்டை ஒன்று இருந்தது. பிரச்சனை குறித்து கலந்துரையாடுவதற்கு தொழில் அமைச்சிற்கான செயலாளர் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு வரவழைக்கப்பட்டது. லீவு வழங்குவதற்கான பொருத்தமான முன்மொழிவுகளைத் தேர்தல்கள் ஆணையாளருடன் ஒன்றுசேர மனித உரிமைகள் ஆணைக்குழு முன்வைத்தது. இந்த முன்மொழிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், தொழில் அமைச்சின் செயலாளருக்கும் மற்றும் தொழில் ஆணையாளருக்கும் பரிந்துரையொன்றும் வழங்கப்பட்டது. இறுதியாக, வாக்களிப்பதற்காக தனியார் துறை ஊழியர்களின் லீவு உரித்துரிமை தொடர்பில் சகல தனியார் துறை ஊழியர்களுக்கும் பகிரங்க அறிவித்தலொன்றைத் தொழில் அமைச்சர் வழங்கினார்.

**III - ‘கட் அவுட்களையும், பதாகைகளையும் அகற்றுதல்**

தேர்தல் ஆணையாளரின் பங்கெடுப்புடனும் மற்றும் அரசியல்வாதிகளின் சார்பாக சுவரொட்டிகளையும் மற்றும் பதாதைகளையும் வெளிப்படுத்தியதாக தேர்தல் கண்காணிப்பு குழாம்களினால் சார்த்துரைக்கப்பட்ட முக்கிய அரசாங்க முகவராண்மைகளின் பங்கெடுப்புடனும் கூட்டமொன்று நடத்தப்பட்டது. அரசாங்கத்திற்குச் சொந்தமான இடங்களில் வெளிப்படுத்தப்பட்ட சகல ‘கட்-அவுட்’களையும், பதாதைகளையும் அகற்றுவதற்கு அரசாங்க அலுவலர்கள் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

**IV - தேர்தல் காலத்தின் போது ஊடகங்களைப் பயன்படுத்துதல்**

சர்வஜன வாக்குரிமையொன்றின் அல்லது தேர்தல் ஒன்றின் போது இலத்திரனியல் அச்சக ஊடகங்களினால் பின்பற்றுவதற்கான ஊடக வழிகாட்டல்களை.ஃஅவதானிக்கப்பட வேண்டிய கொள்கைகளை தயாரிப்பதில், தேர்தல்கள் திணைக்களத்திற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆதரவளித்தது.

**V - அரசியலில் பெண்களின் பங்கெடுப்பு**

பெண்களின் அரசியல் பங்கெடுப்பு மீதான ஊநுனுயுறு பரிந்துரைக்கான பின்தொடராகவும், பெண்களின் அரசியல் பங்கெடுப்புக்கு தேசிய முன்னெடுப்புக்களை மேம்படுத்துவதற்காகவும் தேர்தல் ஆணையாளரினதும் மற்றும் ஜனாதிபதி செயலகம், பிரதமரின் அலுவலகம், மகளிர் விவகார அமைச்சு, நீதி அமைச்சு மற்றும் சிவில் சமூகம் ஆகியவற்றினதும் பிரதிநிதிகளுடன் 23.06.2015 அன்று கூட்டமொன்று நடத்தப்பட்டது. நியமனப் பட்டியல்களின் தயாரிப்பில் பெண்களை உள்ளடக்குவதற்கு அதிகளவு கரிசனையை வழங்குமாறு

அரசியல் கட்சிகளின் சகல செயலாளர்களையும் கோரி, மனித உரிமைகள் ஆணைக்குழு கடிதங்களை (07 ஜூலை 2015 திகதியிடப்பட்ட) வழங்கியது.

### VI - ஓரம்கூட்டப்பட்ட குழுவொன்றின் வாக்களிக்கும் உரிமைகள்

கற்பிட்டி குடாவின் தீவகங்களில் வாழும் கடற்றொழில் சமூகத்தின் வாக்களிக்கும் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக, அதன் சொந்தப் பிரேரணையின் மீது மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிட்டது. வாக்களிக்கும் நிலையத்திற்கு அவர்களுக்கு போக்குவரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவுக்கு தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்தார்.

### VII - மார்ச் 12 தூய்மையான அரசியலுக்கான இயக்கம்

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பொதுசன விழிப்பியல் நிகழ்ச்சித்திட்டங்களில் சிவில் சமூகத்தினால் வகுத்தமைக்கப்பட்ட மார்ச் 12 பிரகடனத்தில் குறித்துரைக்கப்பட்ட அரசியல் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான மூலப்பிரமாணத்தை ஆணைக்குழு மேம்படுத்தியது.

### VIII - முறைப்பாட்டினைக் கையாள்தல்

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளைத் துரிதப்படுத்துவதற்காக, விசேட அலகொன்றை ஆணைக்குழு தாபித்தது. பத்து முறைப்பாடுகள் முன்னிலைபடுத்தப்பட்டதுடன், இவற்றில் இரு விடயங்கள் தேர்தல்கள் ஆணையாளருக்கு எதிரானவையாகும். முன்னாள் ஜனாதிபதியின் சிறப்புரிமைகள் மற்றும் பாராளுமன்ற அபேட்சகர் ஒருவரின் உரித்துரிமைகள் ஆகியன மீதே தேர்தல் ஆணையாளருக்கு எதிரான இரு முறைப்பாடுகளுமாகும். முன்னாள் ஜனாதிபதியைக் குறிப்பிடுகின்ற மேற்படி விடயம் மீஉயர் நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரணையில் உள்ள அதே பிரச்சனை என்பதனால் பின்போடப்பட்டது. மேலும் இரு விடயங்கள் ஊடக முகவராண்மைகளுக்கு எதிரானவையாகும். தனியார் ஊடகமொன்றுக்கு எதிரானதாக ஒன்று விளங்கியதனால் அது தேர்தல்கள் ஆணையாளருக்கு முன்வைக்கப்பட்டதுடன், ஏனைய விடயம் இணக்கப்பட்டது. நான்கு விடயங்கள் தேர்தல்கள் நேரத்தின் போது அரசாங்க நிறுவனங்களுக்கு இடமாற்றங்கள் மற்றும் ஆட்சேர்ப்புக்கள் ஆகியன தொடர்பானவையாகும். பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற அரசாங்க சுகாதாரத் துறையைச் சேர்ந்த தொழிற்சங்கச் செயலார்வலர் ஒருவரின் கைது தொடர்பானவையே இரு விடயங்களாகும். அவர் உத்தியோகபூர்வ இடங்களில் சுவரொட்டிகளை ஒட்டியதாக சார்த்துரைக்கப்பட்டிருந்தார்.

### IX - பொதுத் தேர்தலுக்கான விசேட அலகு

வாக்களிக்கும் போது தேர்தல் தொடர்பான அடிப்படை உரிமைகள் மீறல்களைத் தடுப்பதற்காக விசேட அலகொன்றை அமைப்பதெனெ இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்தது. ஓர் ஆணையாளர், செயலாளர் மற்றும் ஆணைக்குழுவின் ஒரு சில சிரேஷ்ட அலுவலர்கள் ஆகியோரைச் செயலகம் கொண்டிருந்தது. இந்த விசேட அலகு தேர்தல் தினமான 17 ஓகஸ்ட் 2015 மாலை 4.00 வரை செயற்பட்டது.

### 4.4. பண்டாரவளையில் நீர்ப் பிரச்சனை

தேசிய மின் நெய்யரிக்கு வருடாந்தம் 230 புறூஜத் தோற்றுவித்தல் முறைமைக்கு 120 ஆறு ஐச் சேர்ப்பதே உம ஓய பல்-நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் ஐருஅய மூலய Multipurpose Development Project (UOMDP)] நோக்கமாகும். 4,500 ஹெக்டார்கள் கொண்ட காணி விருத்திசெய்யப்படவுள்ள அதேவேளை, 1,500 ஹெக்டார்கள் கொண்ட விருத்திசெய்யப்பட்ட காணி மேலும் விருத்திசெய்யப்படும். மின் சக்தி அமைச்சு மற்றும் இலங்கை மின்சாரச் சபை ஆகியவற்றுடனான ஒருங்கிணைப்புடன் நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சினால் கருத்திட்டம் அமுலாக்கப்படுகின்றது. 20 ஜூலை 2008 அன்று UOMDP ஆரம்பித்ததுடன், பின்னர் MahabGhodss Consulting Engineering Companyஇனால் பூர்வாங்க சாத்தியவள ஆய்வறிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் சூழல் தாக்க மதிப்பீடு செய்யப்பட்டது. கருத்திட்டத்தை அங்கீகரிக்கும் முகவராண்மையாக மத்திய சூழல் அதிகார சபை செயற்பட்டது. எனினும், சூழல் அனுமதியைப் பெறுவதற்கு முன்னரேயே நிருமாணச் செயற்பாடுகளைக் கருத்திட்டம் ஆரம்பித்தது. 1991இல் ஆரம்ப உம ஓய முன்மொழிவினை மத்திய எந்திரவியல் உசாவுகைப் பணியகம் தயாரித்ததுடன், நிதிசார் உதவிக்காக ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு அது சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், மக்களின் நீர் உரிமைகளின் மீறலொன்றின் காரணமாக அதை ஆசிய அபிவிருத்தி வங்கி நிராகரித்தது.

26 டிசம்பர் 2014 அன்று, எல்ல பிரதேசச் செயலகத்திலுள்ள ஹீல்ஓய மற்றும் பள்ளேபெருவ அத்துடன் பண்டாரவளை பிரதேசச் செயலகத்தில் உள்ள மகுலெல்ல, ஈகொடகம மற்றும் வெஹெரகலதென்ன ஆகிய கிராமவாசிகள் தமது வீடுகளில் வெடிப்புக்களையும் அத்துடன் பகுதியின் நிலத்தடி நீர் மட்டம் குறைவடைவதையும் அவதானித்துள்ளனர். UOMDPஇன் நிலக்கீழ் சுரங்க முறைமையினுள் வினாடி ஒன்றுக்கு 250 லீற்றர்கள் கொண்ட நீர் பாய்கின்ற ஒழுக்கொன்றை ஊடகங்கள் அறிக்கையிட்டிருந்தன.

பண்டாரவளை பட்டினத்தில் UOMDக்கு எதிராக 26 டிசம்பர் 2014 அன்று போராட்டமொன்றை மேற்படி குறிப்பிடப்பட்ட பகுதிகளின் கிராமவாசிகள் நடத்தினர். அவர்கள் ‘அசர்தக்க உமா ஓய பியப்ருதியென் பிடவர பாத் ஜனதா எகமுதுவ’ என அழைக்கப்பட்ட தாபனமொன்றையும் அத்துடன் அதே பெயரில் முகநூல் பக்கமொன்றையும் அமைத்தனர். பண்டாரவளையில் உள்ஙர் மக்களின் போராட்டத்தின் பின்னர் தலையிடுவதென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்தது. முதலில் பண்டாரவளை மாநகர சபை, பண்டாரவளை பிரதேச சபை, எல்ல பிரதேசச் சபை, பண்டாரவளை பிரதேசச் செயலகம், எல்ல பிரதேசச் செயலகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், புவிசரிதவியல் அளவீடு, சுரங்கமறுத்தல் பணியகம், தேசியக் கட்டிட ஆராய்ச்சித் தாபனம் போன்ற தொடர்பான அதிகார சபைகளிலிருந்து அறிக்கைகளை ஆணைக்குழு கோரியதுடன், அசர்தக்க உமா ஓய பியப்ருதியென் பிடவர பாத் ஜனதா எகமுதுவ என அழைக்கப்பட்ட சிவில் சமூக தாபனத்திலிருந்து தகவலையும் திரட்டியது.

6 மற்றும் 7 மார்ச் 2015இல், அரசாங்க அலுவலர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், வேறு பயனுரித்தாளர்கள் மற்றும் பகுதியின் பாதிக்கப்பட்ட கிராமவாசிகள் ஆகியோருடன் ஒரு சில கூட்டங்களை ஆணைக்குழு கூட்டியது. பதுளை மேலதிக மாவட்டச் செயலாளர், பண்டாரவளை பிரதேசச் செயலகத்தின் பிரதேசச் செயலாளர், எல்ல பிரதேசச் செயலகத்தின் பிரதேசச் செயலாளர், உள்ஙர் அரசியல்வாதிகள் மற்றும் உம ஓய கருத்திட்டத்தின் ஒரு பிரதிநிதி ஆகியோர் அரசாங்க அலுவலர்களின் கூட்டத்தில் பங்கெடுத்தனர். அதைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு இ.ம.உ.ஆ.கு. வருகைதந்து, கிராமவாசிகளைச் சந்தித்து, எல்ல பிரதேசச் செயலகத்திலுள்ள ஹீல் ஓய மற்றும் பள்ளேபெருவ ஆகியவற்றினதும் மற்றும் பண்டாரவளை பிரதேசச் செயலகத்திலுள்ள மகுலெல்ல, ஈகொடகம, மற்றும் வேஹெரகலதென்ன ஆகியவற்றில் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கும், நிலத்தடி நீர் மூலங்களுக்கும், பாடசாலைகளுக்கும் மற்றும் கிராமங்களுக்கும் வருகைதந்ததுடன், அசர்தக்க உமா ஓய பியப்ருதியென் பிடவர பாத் ஜனதா எகமுதுவவின் பிரதிநிதிகளுடனும் மற்றும் பகுதியின் சமயத் தலைவர்களுடனும் கூட்டமொன்றை நடத்தியது.

29 ஜூன் 2015 அன்று பண்டாரவளைக்கு இ.ம.உ.ஆ.கு.இலிருந்து குழாமொன்று மீளத்திரும்பி பகுதியின் அலுவலர்களையும் மற்றும் பாதிக்கப்பட்ட கிராமவாசிகளையும் சந்தித்ததுடன், சூழ்நிலையையும் ஆவணப்படுத்தியது. பண்டாரவளைக்கான இரண்டாவது வருகைதரலுக்கு முன்னர் கிராமங்களுக்கு நிவாரண சேவைகளின் நுணுக்கமான கண்காணித்தலை ஆணைக்குழு நடத்தியது. கூட்டத்தின் பின்னர் அரசாங்க அலுவலர்களுக்கு கிராமவாசிகளின் மனக்குறைகளை இ.ம.உ.ஆ.கு. குழாம் முன்வைத்தது.

### 4.5 இலங்கையில் சுதேசிய மக்களின் உரிமைகள்

இலங்கையில் துரிதப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களின் காரணமாக, சுதேசிய மக்கள் தமது பாரம்பரியமான காணிகளை விட்டு வெளியேறி, புதிய மகாவலி காணிகளில் மீள்குடியமர்ந்துள்ளனர். அவர்கள் மகாவலித் திட்டத்திலிருந்து நன்மைகளைப் பெற்றுக் கொண்டதுடன், வாழ்வுக்கான தமது வேட்டையாடும் முறையை விலத்திக்கொண்டுள்ளதுடன், அதற்குப் பதிலாக செய்கையாளர்களாக.்.கமக்காரர்களாக விளங்குகின்றனர். 1 நொவம்பர் 2007இன் மனித உரிமைகளின் சூழ்நிலை மீதான சுதேசிய மக்களின் உரிமைகள் மற்றும் சுதேசிய மக்களின் அடிப்படைச் சுதந்திரங்கள் ஆகியன மீதான விசேட அறிக்கையிடுனரின் அறிக்கையின் பிரகாரம் ‘அபிவிருத்திக் கருத்திட்டங்கள், பெருந்தோட்டக் குத்தகைகள், மரம் வெட்டுதல் சலுகைகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட பகுதியைத் தாபித்தல் ஆகியன சுதேசிய காணியின் அதிகரிக்கின்ற இழப்புக்கு பாரிய சக்திகளாக விளங்கி, தமது பாரம்பரியமான பிரதேசங்களிலிருந்து சுதேசிய மக்களின் பாரிய இடப்பெயர்வுக்கு இட்டுச்சென்றுள்ளதுடன், அவர்களது பாரம்பரியமான சூழலின் தரக்குறைவுக்கும் மற்றும் அதிகரிக்கின்ற வறுமைக்கும் மற்றும் புலம்பெயர்வுக்கும் இட்டுச்சென்றுள்ளது.[2]

---

[2] ஆசியாவின் சுதேசிய மக்களின் மனித உரிமைகளினதும், அடிப்படைச் சுதந்திரத்தினதும் சூழ்நிலை மீது விசேட அறிக்கையிடுனரின் 1 நொவம்பர் 2007இன் அறிக்கை

பல்-நோக்கு மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், மாதுரு ஓய தேசிய வனம் போன்ற மனிதர்களினால் பிரவேசிப்பதற்கு தடைசெய்யப்பட்டுள்ள பெருமளவு தேசிய வனங்களை இலங்கை அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது. இதனால் தமது வாழ்வுக்காக வேட்டையாடுவதற்கான பகுதியாக பயன்படுத்தப்பட்ட பகுதிகளின் சுதேசிய மக்கள் மிக மோசமான விதத்தில் பாதிப்படைந்தனர். ஒரு சில வருடங்களுக்கு முன்னர் வேடுவ மக்களுக்கு ஆளடையாள அட்டைகளை வனவாழ்வுப் பேணல் திணைக்களம் வழங்கியது. தடை செய்யப்பட்ட தேசிய வனங்களுக்கு பிரவேசிப்பதற்கும் அத்துடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவொன்றின் மீது தமது பாரம்பரியமான வாழ்க்கை முறையில் ஈடுபடுவதற்கும் அவர்களினால் இந்த ஆளடையாள அட்டையைப் பயன்படுத்த முடியும். ஆனால், சில நடைமுறையிலான கஷ்டங்களின் காரணமாக இந்த முறைமை தடையின்றி செயற்படவில்லை.

கல்வியில் வேடுவ மக்களின் பங்கெடுப்பு மிகவும் குறைவானதாகும். சுதேசிய மக்களின் மத்தியில் புதிய மொழியொன்றுக்கான அனுசரிப்புத்தன்மை பிரச்சனையொன்று என்பதுடன், வளங்களுக்கான கிட்டுந்தன்மையுடன் பாரிய பிரச்சனையொன்றாகவும் விளங்குகின்றது. இலங்கையின் தேசிய மொழிகளாக சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகள் விளங்குவதனால், ஒன்றில் சிங்களம் அல்லது தமிழ் ஆகிய மொழிகளில் கல்வியொன்றை பெறுவதற்கு வேடுவ மக்களின் பிள்ளைகள் கட்டாயப்படுத்தப்படுகின்றார்கள். வேடுவ மக்களின் பிள்ளைகள் செல்கின்ற பாடசாலைகள் மிகவும் குறைந்த கல்விசார் வசதிகளையும், ஆசிரியர்களின் பற்றாக்குறையையும் கொண்டுள்ளன.

தேசிய அபிவிருத்திக் கருத்திட்டங்களின் காரணமாக, பாரம்பரியமான காணிகளிலிருந்து நடமாட்டமானது சுதேசிய மக்களின் ஆன்மீக வாழ்க்கையை மறுதலையாகப் பாதித்துள்ளது. பாரம்பரியமான காணிகளுக்கு தொடர்பினைக் கொண்டுள்ள ஆன்மவாதமானது சுதேசிய மக்களின் பெரும்பாலான குழுக்களின் மூலத்திலான நம்பிக்கையாகும். தமது சொந்த மத மற்றும் நம்பிக்கை முறைகளைப் பொறுத்தளவில், சுதேசிய மக்களினால் புனிதமானது எனக் கருதப்படும் அமைவிடங்கள் பாரியளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்களினால் தூய்மை கெட்டுள்ளது அல்லது அழிக்கப்பட்டுள்ளது. சமூகத்தின் உறுப்பினர்களின் உள்நாட்டினுள் புலம்பெயர்வின் காரணமாக, பாரம்பரிய நிருவாகத்தின் கீழ் சமூகத்தை வைத்திருப்பதற்கு பாரம்பரிய தலைவர்களினால் முடியாதிருக்கின்றது.

இலங்கையில் சுதேசிய மக்கள் மீது மாகாண அளவீடொன்றைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்வுப் பிரிவு ஆரம்பித்ததுடன், இது ஊவ, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் சகல பிரதேசச் செயலகங்களையும் உள்ளடக்கியிருந்தது. அளவீட்டின் பிரகாரம், மேற்படி குறிப்பிடப்பட்ட மூன்று மாகாணங்களில் 12,096 சுதேசிய மக்கள் உள்ளனர். அவர்கள் 13 பிரதேசச் செயலகங்களில் வாழ்கின்றனர். விரிவான தரவுகளைச் சேகரிப்பதற்காக சகல பிரதேசச் செயலகங்களையும் உள்ளடக்கி உண்மையைக் கண்டறியும் செயற்பணிகளை நடத்துவது அவசியமானதாகும். சுதேசிய மக்கள் மீதான அளவீட்டு முடிவுகள் கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது:

இலங்கையில் சுதேசிய மக்களின் அளவீடு

| மாவட்டம் | பிரதேசச் செயலகப் பிரிவு | பெண் | ஆண் | மொத்தம் | மாவட்ட மொத்தம் |
|---|---|---|---|---|---|
| மொனராகலை | மதுல்ல | 160 | 168 | 328 | **325** |
| பதுளை | மஹியங்கனை | 180 | 165 | 345 | **245** |
| மட்டக்களப்பு | மண்முனை மேற்கு - நாவற்காடு | 39 | 37 | 76 | |
| | கோரளைபற்று வடக்கு - வாகரை | 1,633 | 822 | 2,455 | |
| | கோரளைபற்று தெற்கு - கிரான் | 374 | 383 | 757 | **328** |
| திருகோணமலை | மூதூர் | 1,289 | 1,215 | 2,504 | **2,504** |
| அம்பாறை | மஹாஓயா | 452 | 320 | 772 | |
| | தெஹியத்தகண்டிய | 747 | 831 | 1578 | **2,350** |
| அனுராதபுரம் | கஹட்டகஸ்திகிலிய | 506 | 487 | 993 | |
| | ஹொரவப்பத்தானை | 441 | 366 | 807 | |
| | மஹாவிலச்சிய | 180 | 165 | 345 | **2,145** |
| பொலன்னறுவை | வெலிக்கந்த | 95 | 96 | 191 | |
| | திம்புலாகல | 414 | 531 | 945 | **1,136** |
| மொத்தம் | | 6,562 | 5,645 | 12,096 | **12,096** |

மூலம்: இ.ம.உ.ஆ.கு.இனால் இலங்கையின் சுதேசிய மக்களின் மீதான பிரதேச மட்ட அளவீடு - 2015

## 4.6 மொழி உரிமைகள்

இலங்கையின் அரசியலமைப்பின் அத்தியாயம் ஐஏஇன்[3] பிரகாரம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகள் இலங்கையின் அரசகரும மொழிகளாகும். இலங்கையின் அரசியலமைப்பின் அத்தியாயம் மூன்றின் பிரகாரம், மொழி அடிப்படையிலான பாரபட்சம் ஓர் அடிப்படை உரிமைகள் மீறலாகும்.[4] 2015இல், கொழும்பில் தளத்தைக் கொண்ட சிவில் சமூகத் தாபனமொன்றான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திலிருந்து மொழிகள் தொடர்பான 50 முறைப்பாடுகளை இ.ம.உ.ஆ.கு. பெற்றுக்கொண்டது. மொழிகள் விடயங்களின் வகைப்படுத்தல் வருமாறு:

[3] இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் அரசியலமைப்பின் அத்தியாயம் IV

[4] இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் அரசியலமைப்பின் அத்தியாயம் III

**முறைப்பாட்டின் தன்மையின் பிரகாரம் மொழி தொடர்பான முறைப்பாடுகள் - 2015**

| முறைப்பாடுகளின் தன்மை | முறைப்பாடுகளின் எண். |
|---|---|
| பெயர்ப் பலகைகள்/சுட்டித்துண்டுகள் | 22 |
| கடிதங்கள்/சுற்றுநிருபங்கள்/மதிப்பாய்வுகள் | 07 |
| தளக்கோலங்கள்/விண்ணப்பங்கள்/அறிவித்தல்கள் | 03 |
| திருத்தப்பட்ட தமிழ் வாசகத்தில் | 01 |
| சிங்கள் மொழியில் உத்தரவுப்பத்திரங்கள்/அனுமதிச்சீட்டுகள்/ நுழைவுச்சீட்டுக்கள் | 03 |
| இணைய தளங்கள் | 12 |
| தயாரிப்புத் திகதி, காலாவதியாகும் திகதி, பயன்பாட்டின் விவரணம் | 02 |
| மொத்தம் | 50 |

மூலம்: மொழி உரிமைகள் விடயக் கோவைகள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு - 2015

### 4.7 கொழும்பு நகரத்திலும், கிட்டிய பகுதிகளிலும் போக்குவரத்து நெரிசல்

கொழும்பிலும், அதைச் சார்ந்த பகுதிகளிலும் போக்குவரத்து நெரிசல் மீதான பல்-துறை பயனுரித்தாளர் கூட்டமொன்றை 8 ஒக்ரோபர் 2015 அன்று, ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஒழுங்குபடுத்தியது. நேரம் மீது பொருளாதாரச் செயற்பாடுகளில் பிரஜைகளின் ஈடுபாட்டினைக் குறைக்கின்றதும், அவ்வாறாக அவர்களது வாழ்வாதாரங்கள் மீது மறுதலையான தாக்கமொன்றைக் கொண்டிருப்பதுமான கொழும்பு நகரத்திலும் மற்றும் கிட்டிய பகுதிகளிலும் போக்குவரத்து நெரிசலின் அடிப்படைக் காரணங்களை அடையாளங்காண்பதே கூட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர், பெரும் பிராந்திய, மேற்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.), பிரதி பொலிஸ் மா அதிபர் (போக்குவரத்து) மற்றும் கொழும்பு நகரத்திலும் மற்றும் அண்டியுள்ள பகுதிகளிலும் உள்ள சகல பொலிஸ் பிரிவுகளின் சகல சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்திலிருந்து பட்டினம், நாடு திட்டமிடல் பிரிவிலிருந்து நூற்கல்வியாளர்கள் ஆகியோர் வரவழைக்கப்பட்டோர் மத்தியில் விளங்கினர்.

**அழைக்கப்பட்டோர்களினால் பெருமளவு பிரச்சனைகள் அடையாளங்காணப்பட்டன. அவை வருமாறு:**

1. போதாத பொதுப் போக்குவரத்து முறைமை;
2. கொழும்பு நகரம் ஊடாக அதிகரித்துள்ள பிரயாணம்;
3. கொழும்புத் துறைமுகத்தில் சில துறைமுகம் அடிப்படையிலான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதில்லை. உதாரணமாக, நிறையளவிடல் கொள்கலன்கள் துறைமுகத்தில் இல்லை. ஆனால், ஒருகொடவத்தையில் சொல்லப்பட்ட பகுதியில் மேலதிகமான போக்குவரத்து நெரிசலை உருவாக்குகின்ற அமைவிடமொன்றில் உள்ளது;
4. வீதி ஓரங்களின் வழியே சில்லறை வியாபாரங்கள்;
5. சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு (ரெலிகொம், நீர் சபை, உள்ஙராட்சிச் சபை உறுப்புக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை) ஆகியவற்றுக்கு இடையில் ஒருங்கிணைப்பின்றி, வீதி நிருமாணங்கள் மற்றும் பழுதுபார்த்தல்கள்.

**மேற்படி ஓட்டைகளை வெற்றிகொள்வதற்கான மூலோபாயங்கள் மற்றும் முன்மொழிவு**

1. கொழும்பு நகரத்தை விட்டுவிலகுகின்ற புதிய பஸ் மார்க்கங்களை அறிமுகப்படுத்தல்; வாகனங்கள் மீதான இறக்குமதிக் கொள்கையை மீளவாய்தல்;
2. துறைமுகங்கள் அதிகார சபையினதும், சுங்கத் திணைக்களத்தினதும் கூட்டு முயற்சியுடன், கொழும்புத் துறைமுகத்தில் நிறையளவிடல் கொள்கலன்களுக்கான வசதிகளை அறிமுகப்படுத்தல்;
3. பாதசாரிகளுக்கு மின்சார ஏற்றிகளை அறிமுகப்படுத்தல்;
4. பொரளை மயானச் சந்தி, ஒருகொடவத்தை மற்றும் மலிபன் சந்தி ஆகியவற்றுக்கு புதிய மேந்தலை பறத்தல் பாலங்களை உருவாக்குதல்;
5. தமது மனோநிலைகளை மாற்றுவதற்கு சாரதிகளுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தல்;
6. போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக்கு கணனிமயப்படுத்தப்பட்ட 'கமெரா' முறைமை ஒன்றை அறிமுகப்படுத்தல்;
7. இரவில் பட்டினச் சுத்திகரிப்பினையும், வீதி பழுதுபார்த்தல்களையும் மேற்கொள்ளுதல்;
8. நடைமுறையிலான சட்டங்களுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும் ஒழுகி நடப்பதை உறுதிப்படுத்தல்;
9. முச்சக்கர வண்டிகளுக்கு ஒழுங்குபடுத்தல் உறுப்பொன்றைத் தாபித்தல்;
10. வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நீர் சபை, மின்சாரச் சபை மற்றும் உள்ஙராட்சி சபை உறுப்புக்கள் ஆகியவற்றின் மத்தியில் மிகவும் உயர்வான ஒருங்கிணைப்புடன், சகல வீதிகளின் பழுதுபார்த்தல்களும், நிருமாணங்களும் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும்.

## 4.8 விசேட நிகழ்வுகள்

இ.ம.உ.ஆ.கு. அலுவலர்களைக் கொண்ட குழாமுடன் ஒன்றுசேர, ஊவ மாகாண சபையின் தேர்தல்களைக் கண்காணித்த பின்னர் மீளத்திரும்பிய போது, 21 செப்ரெம்பர் 2014 அன்று காலமாகிய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் (கண்காணித்தல் மற்றும் மீளாய்வு) செல்வி துஷித்த சமரசேகரவின் முதலாவது நினைவுதின ஆண்டு நிறைவுவிழா மனித உரிமைகள் காப்பாளராக அவரினதும் மற்றும் இலங்கை என்ற எமது நாட்டின் சகல மனித உரிமைகள் காப்பாளர்களினதும் பங்களிப்புக்காக, வருடாந்த நிகழ்வொன்றைச் ஒழுங்குபடுத்துவதன் மூலம், பாராட்டொன்றைச் செலுத்துவதற்காக ஆணைக்குழுவினால் நினைவுகூரப்பட்டது. அவரது ஞாபகார்த்தமாக ஒரு விசேட விரிவுரை சட்டத்தரணி திரு.எஸ்.ஜி.புஞ்சிஹேவவினால் ஆற்றப்பட்டது.

# அத்தியாயம் ஐந்து : நிருவாகம் மற்றும் நிதிப் பிரிவு

மனித வளங்களையும் மற்றும் நிதியையும் நிருவகிப்பதே நிருவாகம் மற்றும் நிதிப் பிரிவின் பிரதான பொறுப்பாகும். ஆணைக்குழுவின் குறிக்கோள்களைச் சாதிப்பதில் மனித வளங்களின் முகாமைத்துவமே மிகவும் முக்கியமானதாகும்.

## 5.1 நிருவாகப் பிரிவு

பணியாளரின் ஆட்சேர்ப்பிலும் மற்றும் பணியாளரின் ஆற்றலளவைக் கட்டியெழுப்பும் விடயங்களிலும் நிருவாகப் பிரிவு கரிசனையைக் கொண்டுள்ளது. பிராந்திய அலுவலகங்கள் உட்பட அலுவலக முகாமைத்துவத்தில் அது மேலும் ஈடுபட்டுள்ளதுடன், பாதுகாப்பு வலைப்பின்னலையும் பராமரிக்கின்றது.

(இ.ம.உ.ஆ.கு.இன் பணியாளரின் செயற்றிறனை மேம்படுத்துவதற்காக 2015இல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் சித்தரிப்பொன்றுக்காக - 3.4 பணியாளரின் ஆற்றலளவைக் கட்டியெழுப்புதல் என்பதைத் தயவுசெய்து பார்க்க).

## 5.2 நிதிப் பிரிவு

ஆணைக்குழுவுக்கான வருடாந்த வரவு-செலவுத்திட்டத்தை நிதிப் பிரிவு தயாரிப்பதுடன், பிரிவுசார் செயற்பாடுகளுக்கான நிதியங்களை வழங்குவது உட்பட சகல நிதிசார் விடயங்களையும் கையாள்கின்றது. இது தீர்மானமெடுக்கும் நோக்கங்களுக்காக நிதிசார் தகவலையும் சமர்ப்பிக்கின்றது.

(2015இல் இ.ம.உ.ஆ.கு.இன் வருடாந்தச் செலவினத்தின் விரிவான கூற்றொன்றுக்கு இந்த அறிக்கையின் இறுதியில் உள்ள பிற்சேர்க்கை 1அ என்பதைத் தயவுசெய்து பார்க்க).

2015ஆம் ஆண்டின் போது, நிருவாகம் மற்றும் நிதிப் பிரிவு பின்வருவனவற்றை பொறுப்பேற்றுள்ளது:

சகல பிராந்திய அலுவலகங்களுக்கும் கைவிரல் ‘ஸ்கான்’ இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. அலுவலகங்களுக்குள்ளே தொடர்பாடலை இலகுவாக்குவதற்காக தலைமை அலுவலகத்தின் ‘இன்டர்கொம்’ முறைமை நவீனமயப்படுத்தப்பட்டது. 03 ‘கெப்’ வண்டிகள் மற்றும் 03 கார்கள் உட்பட ஆணைக்குழுவுக்கு புதிய வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. 1 ஜனவரி 2015 அன்று 03 கார்களும், 29 ஜனவரி 2015 அன்று 03 ‘கெப்’ வண்டிகளும் பெறப்பட்டன.

# அத்தியாயம் ஆறு : இலங்கையில் மனித உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகள் இணை நிகழ்ச்சித்திட்டம்

(மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கான ஆதரவு, கட்டம் 2 - ஜுன் 2013 முதல் ஜுன் 2016 வரை)

## 6.1 கருத்திட்டத்தின் பின்னணி

இது UNDP (ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம்)இ ழுர்ஊர்சு (மனித உரிமைகளுக்கான ஐ.நா. உதவி ஆணையாளரின் அலுவலகம்) , UNHCR (ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஆணையாளர்), UNICEF (ஐக்கிய தேசங்கள் சிறுவர் நிதியம்) , UNFPA (ஐக்கிய நாடுகள் சனத்தொகை செயற்பாடுகளுக்கான நிதியம்) மற்றும் IOM (சர்வதேச புலம்பெயர்வுக்கான தாபனம்) ஆகியவற்றினால் இணைந்து ஆதரவளிக்கப்பட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் (இ.ம.உ.ஆ.கு.) அமுல்படுத்தப்படும் கருத்திட்டமொன்றாகும். கருத்திட்டத்தின் முதலாவது கட்டம் 2010 ஜனவரியிலிருந்து 2012 டிசம்பர் வரை நிறைவேற்றப்பட்டதுடன், இரண்டாவது கட்டம் 2013 ஜுனிலிருந்து 2016 ஜுன் வரை நிறைவேற்றப்பட்டது.

2008ஆம் ஆண்டில், மனித உரிமைகள் பேரவையின் UPR நடைமுறையில் அர்ப்பணிப்பொன்றினை இலங்கை அரசாங்கம் செய்தது:

அ) காணாமல்போதல்கள் மீது ஒரு தேசிய மனித உரிமைகள் செயல் திட்டத்தையும் அத்துடன் தரவுத் தளமொன்றையும் விருத்திசெய்தல்.

ஆ) நாட்டினுள் மனித உரிமைகள் பாதுகாப்புக்கும், முன்னேற்றத்திற்கும் உள்ளகப் பொறிமுறைகளைப் பலப்படுத்துதல்

இக் கட்டத்தில், நிதிசார் மற்றும் தொழில்நுட்ப உதவிக்காக UNDPI அரசாங்கம் அணுகியதுடன், இ.ம.உ.ஆ.கு.இனாலும், ஐ.நா.இனாலும் இணைந்து கருத்திட்டம் திட்டமிடப்பட்டது. தரம் ஆ க்கு இ.ம.உ.ஆ.கு.இன் தரம் தாழ்த்தலுக்கான காரணங்களாக 2007இலும், 2009இலும் தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் சர்வதேச ஒருங்கிணைப்புக் குழுவினால் அடையாளங்காணப்பட்ட இடைவெளிகள் மற்றும் பிரச்சனைகள்; 2012இல் APF, UNDP பிராந்திய அலுவலகம் மற்றும் OHCHR ஆகியவற்றினால் நடத்தப்பட்ட ஆற்றலளவு மதிப்பீட்டின் பரிந்துரைகள்; தேசிய மனித உரிமைகள் செயல் திட்டம் LLRC அறிக்கையில் இ.ம.உ.ஆ.கு.க்கு வழங்கப்பட்ட பரிந்துரைகள்; கருத்திட்டத்தின் கட்டம் ஒன்றின் போது நடைபெற்ற பல்-பயனுரித்தாளர் கலந்தாலோசனைகளில்.ஃகூட்டங்களில் திரட்டப்பட்ட உள்ளீடு மற்றும் பாடங்கள் மூலம் கற்கப்பட்ட அனுபவங்கள் ஆகியன கருத்திட்டத்தை வடிவமைப்பதில் பொறுப்புக்கு எடுக்கப்பட்டன.

அதன் வினைத்திறனையும் மற்றும் செயற்றிறனையும் மேம்படுத்துவதற்காக, இ.ம.உ.ஆ.கு.இன் நாளாந்த ஆணையிடப்பட்ட பணிகளினுள் கருத்திட்டத்தை ஒன்றிணைப்பதற்காக இப் பணியின் முதலவாது கட்டமும் அத்துடன் இரண்டாவது கட்டமும் திட்டமிடப்பட்டன. 2010 ஜனவரியிலிருந்து 2012 டிசம்பர் வரை, இ.ம.உ.ஆ.கு.க்கான ஐக்கிய நாடுகள் இணை ஆதரவின் முதலாவது கட்டத்தின் போது 'A' அந்தஸ்தை மீட்டெடுக்குமுகமாக, இடைவெளிகளைச் சீரமைக்கும் குறிக்கோளுடன், 2007இல் இ.ம.உ.ஆ.கு.ஐக் கீழ்நிலைப்படுத்துவதில் ICCஇனால் அடையாளங்காணப்பட்ட பிரச்சனைகளை அடையாளங் காண்பதற்கு இ.ம.உ.ஆ.கு. விரும்பியது.

எனவே, இ.ம.உ.ஆ.கு.இனுள் ஒருங்கிணைப்பினையும், பணியாட் பொறிமுறைகளையும் பலப்படுத்துவது, தகவலைப் பரப்புவதற்கு ம.உ.ஆ.கு.க்கு ஆதரவளித்தல், சிவில் சமூகத்துடனும் மற்றும் அரசாங்க நிறுவனங்களுடனும் மிகவும் செயற்றிறனாக ஒத்துழைப்பதற்கு இ.ம.உ.ஆ.கு.க்கு ஆதரவளித்தல் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் நியதிகளுடனும் மற்றும் தரங்களுடனும் தேசிய சட்டங்களும், நிருவாக நடைமுறைகளும் உள்ளதை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கத்திற்கு பரிந்துரைகளைச் செய்வதற்காக ம.உ.ஆ.கு.இன் ஆற்றலளவைக் கட்டியெழுப்புதல் ஆகியன மீது முதலாவது கட்டம் பிரதானமாக செறிந்திருந்தது.

இதன் பின்தொடராக, மேலே குறிப்பிடப்பட்ட முக்கிய செயற்பாட்டு முடிவு துறைகளின் கீழ், 2010 ஜனவரியிலிருந்து 2012 டிசம்பர் வரை பின்வரும் பிரதான செயற்பாடுகளை.ஂ.விளைவுகளை ஐ.நா. கருத்திட்டத்தின் முதலாவது கட்டம் வழங்கியது. எனினும், மனித உரிமைகள் தொடர்பான தலையீடுகளுக்கு குறிப்பாக அந்நேரத்தில் ஆதரவளிக்கப்படாத அல்லது உகந்ததற்ற நடைமுறையிலான அரசியல் நிலைமையின் காரணமாக உள்ளக மற்றும் வெளியக சவால்கள் என மிதமிஞ்சிய சவால்களாக கருத்திட்டச் செயற்பாடுகளின் நிறைவேற்றம் விளங்கியதை குறித்துக்கொள்ளவேண்டும்.

### 6.2 கட்டம் 1இன் செயற்பாடுகள்

கருத்திட்டத்தின் முதலாவது கட்டத்தின் போது, இ.ம.உ.ஆ.கு.இனுள் ஒருங்கிணைப்பினைப்பும், பணியாற்றல் பொறிமுறைகளும் அவற்றின் ஆணையை வினைத்திறனாக வழங்குவதற்காக பலப்படுத்தப்பட்டன. கருத்திட்ட விளைவுகள் வருமாறு:

அ) இணைந்த காலாண்டு ஒருங்கிணைப்புக்கு ஆதரவளித்தல், பிராந்திய இணைப்பாளர்களினதும், இ.ம.உ.ஆ.கு. தலைமையக சிரேஷ்ட பணியாளர்களினதும், ஆணையாளர்களினதும் மத்தியில் மதிப்பாய்வு மற்றும் கண்காணித்தல் கூட்டங்களுக்கு ஆதரவளித்தல், அவ்வாறாக 2010க்கு முன்னரிலிருந்து செயற்படாதிருந்த இ.ம.உ.ஆ.கு.இனுள் உள்ளக ஒருங்கிணைப்பினை மீட்டுயிர்த்தல்.

ஆ) இ.ம.உ.ஆ.கு.இனுள் ஒருங்கிணைப்பினையும், கண்காணித்தலையும் பலப்படுத்துமுகமாக இ.ம.உ.ஆ.கு. தலைமை அலுவலகத்திலிருந்து ஆணையாளர்களினாலும் மற்றும் சிரேஷ்ட பணியாளர்களினாலும் பிராந்தியங்களுக்கான வருகைதரல்கள்.

இ) கருத்திட்டத்தினால் நடத்தப்பட்ட ஆற்றலளவு மதிப்பீடுகளைத் தொடர்ந்து, தலைமை அலுவலகத்திற்கும் மற்றும் 10 பிராந்திய அலுவலகங்களுக்கும் சாதன/வாகன ஆதரவு (மரத்தளபாடங்களுக்கும், தகவல் தொழில்நுட்பத்திற்கும் ரூ. 9 மில்லியன் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூ. 2.6 மில்லியன்).

ஈ) அவர்களால் அடையாளங்காணப்பட்ட கருப்பொருள்களில் இ.ம.உ.ஆ.கு. பணியாளருக்கு பயிற்சிகள் (மொழிப்பயிற்சி, கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்தல், ஆளுமையைக் கட்டியெழுப்புதல், புலனாய்வுத் தொழில்நுட்பங்கள், உளசார்சமூகத் திறன்கள், தலைமைத்துவத் திறன்கள்).

உ) சட்ட அலுவலர்கள் இன்றி, தொழிற்பட்ட 7 பிராந்திய அலுவலகங்களுக்கு சட்ட ஆரேசகர்களின் சேவைகளைப் பெறுவதற்கான ஆதரவு.

ஊ) APF நியமனத்திலான நிபுணர்களுடன் இ.ம.உ.ஆ.கு. ஆணையாளர்களுக்கு ஒரு வாரம் நீண்ட “உயர் மட்டக் கலந்தாய்வு” மற்றும் அவர்களது வினைத்திறனானதும், செயற்றிறனானதுமான தொழிற்பாட்டுக்கு ஊறுவிளைவிக்கின்ற பிரச்சனைகளை அடையாளங்காண்பதற்காகவும் அத்துடன் மேம்படுத்தலுக்காக சுட்டிச்சொல்லப்பட்ட பரிந்துரைகளுக்காகவும் இ.ம.உ.ஆ.கு.க்கு ஆதரவளிக்குமுகமாக APF மற்றும் UNDP பிராந்திய அலுவலகம் மற்றும் OHCHR ஆகியவற்றினால் ஆணையாளர்களுடனும் மற்றும் சகல பணியாளருடனும் இ.ம.உ.ஆ.கு.இன் 21 நாள் நீண்ட ஆற்றலளவு மதிப்பீடு ஆகியன ஒழுங்குபடுத்தப்பட்டன.

எ) இ.ம.உ.ஆ.கு. அலுவலகங்களைக் கொண்டிருக்காத இடங்களில் நடமாடும் அலுவலகங்களுக்கும் மற்றும் நடமாடும் நிலையங்களுக்கும் ஆதரவளிக்கப்பட்டது.

ஏ) கிளிநொச்சியில் நடமாடும் அலுவலகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கும் அத்துடன் பிராந்திய அலுவலகங்கள் ஊடாக உள்ளடக்கப்படுவதற்கு கஷ்டமான பகுதிகளில் நடமாடும் நிலையங்களை நடத்துவதற்கும் ஆதரவைக் கருத்திட்டம் வழங்கியது.

ஐ) மூன்று தேர்தல் கண்காணித்தல் வருகைதரல்களுக்கு ஆதரவளிக்கப்பட்டது.

**6.2.1 தகவலைப் பரப்புவதற்காக ம.உ.ஆ.கு.க்கு ஆதரவளிக்கப்பட்டதுடன், பின்வரும் விளைவுகளுக்கும் ஆதரவளிக்கப்பட்டன:**

அ) இ.ம.உ.ஆ.கு.இன் இணையதளத்தை தரமுயர்த்துவதற்கும், பராமரிப்பதற்குமான ஆதரவு (2010 முதல் 2016 வரை).

ஆ) வருடாந்த அறிக்கைகளின் மொழிபெயர்ப்புக்கும், வெளியீட்டுக்கும் ஆதரவு (2008, 2009, 2010 மற்றும் 2011).

இ) பத்திரிகை மகாநாடுகளை நடத்துவதற்கு ஆதரவளித்தல் (2011 - 1, 2012 - 2).

ஈ) துண்டுப் பிரசுரங்களையும், சிற்றேடுகளையும் மற்றும் வேறு கல்விசார் சாதனங்களையும் அத்துடன் ஆவணங்களையும் மொழிபெயர்ப்பதற்கும், வெளியிடுவதற்கும் இ.ம.உ.ஆ.கு. க்கு ஆதரவு.

உ) சர்வதேச மனித உரிமை தினக் கொண்டாட்டங்களை நடத்துவதற்கு இ.ம.உ.ஆ.கு.க்கு ஆதரவு (2010, 2011, 2012).

ஊ) ஊடக சட்ட ஆலோசகர் ஒருவரின் சேவையுடன் இ.ம.உ.ஆ.கு.க்கு ஆதரவளித்தல்

எ) இ.ம.உ.ஆ.கு.க்கு மனித வள அமைச்சினால் (UNDP உதவியிலான) விருத்திசெய்யப்பட்ட காணாமல்போனோர் தரவுத் தளத்தின் கைமாற்றத்தின் நடைமுறைக்கு ஆதரவளித்தல்.

6.2.2 சிவில் சமூகத்துடனும் மற்றும் அரசாங்க நிறுவனங்களுடனும் மிகவும் வினைத்திறனாக கூட்டுமுயற்சியை மேற்கொள்வதற்காக இ.ம.உ.ஆ.கு.க்கு ஆதரவு வழங்கப்பட்டது. பின்வரும் விளைவுகளுக்கு ஆதரவளிக்கப்பட்டது:

அ) மனித உரிமை தொடர்பான பிரச்சனைகள் மீது இ.ம.உ.ஆ.கு., சிவில் சமூகம் மற்றும் அரசாங்க நிறுவனங்கள் ஆகியன மத்தியில் ஒருங்கிணைப்பினை அதிகரிப்பதற்காக சிவில் சமூகத்துடனும், அரசாங்க நிறுவனங்களுடனும் உசாவுகைகளை.்.கலந்தாய்வுகளை நடத்துவதற்கு இ.ம.உ.ஆ.கு.க்கு ஆதரவளித்தல் (2010 - தேசிய மட்டத்தில் இரண்டு, பிராந்திய மட்டத்தில் பதினேழு; 2011 - தேசிய மட்டத்தில் ஒன்று, பிராந்திய மட்டத்தில் இருபத்தியொன்பது; 2012 - தேசிய மட்டத்தில் இரண்டு, பிராந்திய மட்டத்தில் முப்பத்திநான்கு).

ஆ) அரசாங்க அலுவலர்களுக்கும் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்களுக்கும் இரு நாள் வதிவிட மனித உரிமை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.

இ) தேசிய மட்டத்தில் ஊடக ஆளணியினருக்கு (இதழியலாளர்கள்) ஒரு இரு நாள் வதிவிட மனித உரிமைப் பயிற்சி மற்றும் நுவரெலியாவில் இளைஞர் அமைப்பினதும் மற்றும் அரசாங்க முகாமைத்துவச் சீர்திருத்தங்கள் அமைச்சினதும் கூட்டுமுயற்சியில் இளைஞர்களுக்கான மூன்று நாள் வதிவிட மனித உரிமைப் பயிற்சி.

**6.2.3 இ.ம.உ.ஆ.கு.இன் ஆற்றலளவைப் பலப்படுத்துவதற்கான ஆதரவானது தேசியச் சட்டங்களும், நிருவாக நடைமுறைகளும் சர்வதேச மனித உரிமைகள் மாதிரிகளுக்கும் மற்றும் தரங்களுக்கும் ஏற்ப உள்ளதை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கத்திற்கான பரிந்துரைகளைச் செய்கின்றது. பின்வரும் விளைவுகள் ஆதரவளிக்கப்பட்டன:**

அ) 2012இல் சபாநாயகரினதும், பிரதி சபாநாயகரினதும் தலைமைத்துவத்துடன், பாராளுமன்றத்தின் உள்ளே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மனித உரிமைகள் மீதான ஒரு முழு நாள் ஆய்வு மகாநாட்டை ஐ.நா.உடனும், பாராளுமன்றத்துடனும் ஒன்றுசேர இ.ம.உ.ஆ.கு. ஒழுங்குபடுத்தியது (74 பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கெடுத்தனர்).

ஆ) 2012இல் சபாநாயகரினதும், பிரதி சபாநாயகரினதும் தலைமைத்துவத்துடன், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஐ.நா. நாட்டு அலுவலகத்திற்கும் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் இடையில் மனித உரிமைகள் மீது ஊடாடு கலந்தாய்வு/கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டு, நடத்தப்பட்டது (53 பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கெடுத்தனர்).

இ) மனித உரிமைகள் மீது பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் உறுப்பினர்களைச் சந்திப்பதற்கும் மற்றும் கருத்துக்களைப் பரிமாறுவதற்கும் அத்துடன் எமது பாராளுமன்றத்தினுள் மனித உரிமைகள் மீது பாராளுமன்றத் தெரிவுக் குழுவொன்றைத் தாபிப்பது மீது பிலிப்பைன்ஸ் பாராளுமன்றத்தின் சபாநாயகரிடமிருந்து உள்ளீட்டினைப் பெறுவதற்கும் அத்துடன் பிரதி சபாநாயகருக்கும், இன்னொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் பிலிப்பைன்ஸ் பாராளுமன்றத்திற்காக 2012இல் ஆய்வு வருகைதரலுக்கும் ஆதரவளிக்கப்பட்டது.

ஈ) வயதுமுப்பான சனத்தொகையின் பிரச்சனைகள் மீது சிவில் சமூகம், ஐ.நா. முகவராண்மைகள், வயதுமூத்தோர் குழுக்கள், அரசாங்க அலுவலர்கள் மற்றும் கொள்கை வகுப்போர் ஆகியோருடன் 10 பிராந்திய மட்ட உசாவுகைகளும் அத்துடன் ஒரு தேசிய மட்ட உசாவுகையும் ஒழுங்குபடுத்தப்பட்டு, நடத்தப்பட்டது. இந்த உசாவுகைகளிலிருந்து தொகுக்கப்பட்ட வயது வந்தோர் உரிமைகள் மீது ஐ.நா. திறந்த முறையிலான செயற்குழுவுக்கு இ.ம.உ.ஆ.கு. பரிந்துரைகளை வகுத்தமைத்து, அனுப்பிவைத்தது.

**6.3 கட்டம் 2இன் செயற்பாடுகள்**

2013 ஜூனிலிருந்து 2016 ஜூன் வரை இ.ம.உ..ஆ.கு.க்கான ஐ.நா. ஆதரவின் இரண்டாவது கட்டம் தொடர்ந்தது. இரண்டாவது கட்டத்தில் இ.ம.உ..ஆ.கு.ஐக் கீழ்நிலை தரப்படுத்தலின் நேரத்தில் ICCஇனால் அடையாளங்காணப்பட்ட இடைவெளிகளைக் கவனத்திற்கெடுப்பது மட்டுமன்றி, ஆனால் திறைசேரியிலிருந்து நிதியங்களைப் பெறுவதற்கு அது கஷ்டமானதென கண்டறியப்பட்ட ஆணைக்குழுவின் சில முக்கியமான பணிகளுக்கு ஆதரவளிப்பதற்காக கருத்திட்டம் வடிவமைக்கப்படுவதை இ.ம.உ..ஆ.கு. விரும்பியது.

எனவே, இரண்டாவது கட்டத்தில் 5 முக்கிய செயற்பாட்டு விளைவுகளின் கீழ் குழுவாக்கும் செயற்பாடுகளுக்காக கருத்திட்டம் வடிவமைக்கப்பட்டது. அவை வருமாறு:

- மனித உரிமைகள் மீது அதிக பயனுறுதிவாய்ந்த பயிற்சியையும், விழிப்பியலையும் வழங்குவதற்காக, இ.ம.உ..ஆ.கு.இன் ஆற்றலளவு பலப்படுத்தப்பட்டது;
- தேசிய மற்றும் பிராந்திய மட்டத்தில் முக்கியமான தீர்மானமெடுப்போர்களுக்கு விழிப்பியலை உயர்த்துவதற்கும் மற்றும் பயிற்சிநிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கும் இ.ம.உ..ஆ.கு. ஆதரவளித்தது;
- இ.ம.உ..ஆ.கு.இன் பணியாளரின் தொழில்பாட்டிலான ஆற்றலளவுகளும் மற்றும் இ.ம.உ..ஆ.கு. அலுவலகங்களின் தொழிற்பாட்டிலான ஆற்றலளவுகளும் விருத்தி செய்யப்பட்டன;
- மனித உரிமைகள் பிரச்சனைகளினதும், கரிசனைகளினதும் மீது கண்காணிப்பதற்கும், அறிக்கையிடுவதற்குமான இ.ம.உ..ஆ.கு. ஆற்றலளவு பலப்படுத்தப்பட்டது;
- சிவில் சமூகத்துடன் இ.ம.உ..ஆ.கு.இன் விருத்திசெய்யப்படுகின்ற ஈடுபாடானது பிராந்திய மற்றும் தேசிய மட்டங்களில் ஆதரவளிக்கப்பட்டது; அத்துடன்
- மனித உரிமைகள் அடிப்படையிலான கொள்கையையும், நிகழ்ச்சிப்படுத்தலையும் மேம்படுத்துவதற்காக சட்ட மன்ற உறுப்பினர்களுடனும், அரசாங்க அலுவலகத்துடனும் மற்றும் நியதியாக்க உறுப்புக்களுடனும் பணியாற்றுதல்.

மேற்படி கருப்பொருள்சார்ந்த துறைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளவாறு, பின்வரும் விளைவுகளை வழங்குவதற்காக இ.ம.உ..ஆ.கு.க்கு கருத்திட்டம் ஆதரவளித்தது:

**6.3.1 மனித உரிமைகள் மீது அதிகளவு செயற்றிறனான பயிற்சியையும், விழிப்பியலையும் வழங்குவதற்காக இ.ம.உ..ஆ.கு. ஆற்றலளவு பலப்படுத்தப்பட்டது.**

1) வேறுபட்ட இலக்குக் குழுக்களுக்கு மனித உரிமைகள் மீதும் அத்துடன் வேறுபட்ட கருப்பொருள்கள் மீதும் விழிப்பியலை உயர்த்துவதற்கும், பயிற்சிக்குமாக 16 பாடவிதானங்களை விருத்திசெய்தல்

உள்ளடக்கப்பட்ட இலக்குக் குழுக்கள் - சிவில் சமூகம், பல்-மதத் தலைவர்கள், தொழிற்சங்கங்கள், இதழியலாளர்கள், பொலிஸ், இராணுவம், உள்ளூராட்சி அரசியல்வாதிகள், மாகாண சபை உறுப்பினர்கள், இளைஞர்கள், அரசாங்க அலுவலர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்-பள்ளி ஆசிரியர்கள்

உள்ளடக்கப்பட்ட தலைப்புக்கள் - பால்நிலை அடிப்படையிலான வன்முறை, மத உரிமைகள், மொழி உரிமைகள், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள்
இந்த பாடவிதானத்தை விருத்திசெய்தல் 2013இல் ஆரம்பிக்கப்பட்டதுடன், ஆரம்பத்தில் இந்த சில இலக்குக் குழுக்களுக்காக பிராந்திய மட்டத்தில் 2013இலும், 2014இலும் மேற்கொள்ளப்பட்ட விழிப்பியல் மற்றும் பயிற்சிநிகழ்ச்சித் திட்டங்களில் விருத்திசெய்யப்பட்ட பாடவிதானம் பயன்படுத்தப்பட்டது. இதன் பின்னர், கற்கப்பட்ட பாடங்களினதும் அத்துடன் இப்பயிற்சிகளில் பங்கெடுத்த பங்கெடுப்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்களினதும் மீதான அடிப்படையில், ஆரம்பத்தில் விருத்திசெய்யப்பட்ட பாடவிதானம் மீளவாயப்பட்டது.

2) விழிப்பியலை எழுப்புதல் மற்றும் பயிற்சிநிகழ்ச்சித் திட்டங்களில் பயன்படுத்துவதற்காக மனித உரிமைகள் மீது கல்விசார் விடயதானத்தை (துண்டுப்பிரசுரங்கள், சிற்றேடுகள் மற்றும் நூல்கள்) விருத்திசெய்தல் மற்றும் அச்சிடுதல்.

**6.3.2 தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களில் முக்கியமான தீர்மானமெடுப்போர்களுக்கு விழிப்பியலை உயர்த்துவதற்கும் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் இ.ம.உ.ஆ.கு. ஆதரவளித்தது**

அ) பிராந்திய மட்டங்களில் நடைபெற்ற உசாவுகைகளினாலான கலந்தாய்வுகளுடன் இணைந்திருந்த 8 நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக, மனித உரிமைகள் மேம்படுத்தலினதும் மற்றும் பாதுகாப்பினதும் மீது சிறந்த விழிப்பியலையும், அவற்றில் அவர்களின் வகிபங்கனையும் பல்-மதங்களிலிருந்து மொத்தமாக 353 ஆண் மற்றும் 31 பெண் மதத் தலைவர்கள் திரட்டப்பட்டனர் (கிளிநொச்சி, அனுராதபுரம், அம்பாறை, கல்முனை, மாத்தறை, வவுனியா, கண்டி, மட்டக்களப்பு). - (2013)

ஆ) மட்டக்களப்பு, கண்டி, மாத்தளை, நுவரெலியா, அனுராதபுரம், பொலன்னறுவை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் கல்முனை ஆகியவற்றில் 05 பயிற்சிகள் ஊடாக, தொழில் பிரச்சனைகள் மற்றும் மனித உரிமைகள் ஆகியன மீது மொத்தமாக 267 ஆண் மற்றும் 41 பெண் தொழிற்சங்கச் செயலார்வலர்கள் பயிற்சிகளையும், பரிச்சயமயப்படுத்தலையும் பெற்றனர். - (2013)

இ) மாவட்ட மட்டங்களில் மாகாண சபை உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், நகர சபை உறுப்பினர்கள் ஆகியோருக்காக நடத்தப்பட்ட மனித உரிமைகள் மீதான 9 நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக, மனித உரிமைகள் மீதான பயிற்சியை மொத்தமாக 322 ஆண் மற்றும் 52 பெண் உள்ளூராட்சி அரசியல்வாதிகள் பெற்றனர். நுவரெலியா, மாத்தறை, யாழ்ப்பாணம்∴கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், அனுராதபுரம் மற்றும் திருகோணமலையில் இரண்டு. (சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள்). - (2013)

ஈ) வவுனியா, அனுராதபுரம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகியவற்றில் 04 பயிற்சிகளையும் அத்துடன் கலந்தாய்வுகள் ஊடாக மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டம் ஆகியன மீது திருந்திய விழிப்பியலையும் 325 பொலிஸ் மற்றும் ஆயுதப்படை ஆளணியினர் பெற்றனர். - (2013)

உ) கிராமச் சிறுவர் உரிமைகளைக் கண்காணிக்கும் குழுக்களிலிருந்து 92 ஆண்களும், 57 பெண்களும் அத்துடன் சிறுவர் பிரச்சனைகளைக் கையாளும் அரசாங்க அலுவலர்களும் கிளிநொச்சியிலும், மட்டக்களப்பிலும் இரு பயிற்சிகள் ஊடாக திருந்திய விழிப்பியலை பெற்றனர். - (2013)

ஊ) பயிற்சியொன்றின் ஊடாக மனித உரிமைகள் மீது திருந்திய அறிவினையும் அத்துடன் மனித உரிமைகள் பிரச்சனைகள் மீது பின்தொடர் கலந்துரையாடல்களையும் மத்திய மாகாணத்திலுள்ள மாகாண சபையின் உறுப்பினர்களும், அலுவலர்களும் (65) ஈட்டிக்கொண்டனர். - (2014)

எ) சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு அத்துடன் பகுதியில் பிரச்சனைகள் மீது பின்தொடர் கலந்துரையாடல் ஆகியன மீது 06 பயிற்சிகள் ஊடாக மட்டக்களப்பு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகியவற்றில் சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு மீது 500க்கு மேற்பட்ட கிராமச் சிறுவர் உரிமைகள் கண்காணித்தல் குழுவினர், VCRMC உறுப்பினர்கள், பொலிஸார் மற்றும் தொடர்பான அரசாங்க அலுவலர்கள் ஆகியோர் திருந்திய அறிவினை ஈட்டினர். - (2014)

ஏ) பயிற்சி ஊடாக சிறுவர் உரிமைகள் பாதுகாப்பினதும், கண்காணிப்பினதும் மீது திருந்திய அறிவினை மட்டக்களப்பில் DCRMCஇன் 40 உறுப்பினர்கள் பெற்றனர். - (2014)

ஐ) விழிப்பியல் ஒன்றின் ஊடாகவும் அத்துடன் இ.ம.உ.ஆ.கு. பிராந்திய அலுவலகத்துடன் பிரச்சனை மீது பணியாற்றியும் சிறுவர் உரிமைகள் பாதுகாப்பினதும் மற்றும் கண்காணித்தலினதும் மீது திருந்திய அறிவை கல்முனையில் 100 மதத் தலைவர்களும், சிவில் சமூக உறுப்பினர்களும் மற்றும் அரசாங்க அலுவலர்களும் பெற்றனர். - (2014)

ஒ) சிறுவர் உரிமைகளினதும், சிறுவர் உளவியலினதும் மீது இரு நாள் பயிற்சியினதும், கலந்துரையாடலினதும் ஊடாக வழங்கப்பட்ட அவர்களது நாளாந்தப் பணியை நிருவகிப்பதற்கான திருந்திய அறிவினை நுவரெலியாவில் உள்ள 200 முன்-பள்ளி ஆசிரியர்கள் பெற்றனர். - (2014)

ஓ) மூன்று எண்ணிக்கைகளைக் கொண்ட பயிற்சியின் ஊடாக, தமது நாளாந்தப் பணிகளுக்கு ஆதரவளிப்பதற்காக, சிறுவர் உரிமைகளின் பாதுகாப்பு மீதான அறிவினை மொத்தமாக 320 பொலிஸ் அலுவலர்கள் (மட்டக்களப்பு - 40, யாழ்ப்பாணம் - 125 மற்றும் கிளிநொச்சி - 155) மேம்படுத்தினர். - (2014)

ஔ) பொலிஸ் கடமைகளில் இந்த கோட்பாடுகளின் நடைமுறையிலான பயன்பாடு மீது 04 பயிற்சிகளினதும், பின்தொடர் கலந்துரையாடல்களினதும் ஊடாக, மொத்தமாக 242 உயர் பதவிநிலைப் பொலிஸ் அலுவலர்களின் (பொறுப்பதிகாரியின் பதவிநிலைக்கு மேற்பட்ட) மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டம் ஆகியனவற்றின் அறிவு மேம்பட்டது (மத்திய மாகாணம் - 143, அம்பாறை - 89, மட்டக்களப்பு - 60, திருகோணமலை - 100). - (2014)

க) ஒரு தொடரிலான பயிற்சிகள் ஊடாக, முல்லைத்தீவில் மொத்தமாக 256 இராணுவ அலுவலர்களின் மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் ஆகியன மீதான அறிவு மேம்படுத்தப்பட்டது. - (2014)

கா) பகுதியில் மனித உரிமைகள் பிரச்சனைகள் மீது பயிற்சியினதும் மற்றும் பின்தொடர் கலந்துரையாடல்களின் ஊடாக, திருந்திய விழிப்பியலை அம்பாறை மாவட்டத்தில் 100 உள்ஙராட்சி அரசியல்வாதிகளும் மற்றும் அலுவலர்களும் (மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபை) பெற்றனர். - (2014)

கி) அம்பாறையில் 25 அரசாங்க அலுவலர்களுக்கும் மற்றும் 25 சிவில் சமூக செயலார்வலர்களுக்கும் அத்துடன் மாத்தறையில் 30 அரசாங்க அலுவலர்களுக்கும் மற்றும் 30 சிவில் சமூக செயலார்வலர்களுக்கும் 2 நாள் வதிவிடச் செயலமர்வின் ஊடாக, அரசாங்க அலுவலர்களினதும், சிவில் சமூகத்தினதும் ஆற்றலளவைக் கட்டியெழுப்புதலைத் தொடர்ந்து, அம்பாறை, மாத்தறை, கல்முனை மற்றும் யாழ்ப்பாணம் ஆகியவற்றில் உ.அ.அ. பிரிவு மட்டங்களில் தாபிக்கப்பட்ட மனித உரிமைகள் பிரச்சனைகள் மீது அரசாங்க அலுவலகங்களுடனும் மற்றும் சிவில் சமூகத்துடனும் இணைந்து செயல் குழுக்கள் பணியாற்றவுள்ளன. - (2015)

**6.3.3 இ.ம.உ.ஆ.கு.இன் அலுவலரின் பணியாற்றல் ஆற்றலளவுகளும் இ.ம.உ.ஆ.கு. அலுவலகங்களின் தொழிற்பாட்டிலான ஆற்றலளவுகளும் விருத்திசெய்யப்பட்டன:**

அ) இரண்டு நாள் வதிவிடப் பயிற்சியொன்றின் ஊடாக, 60 இ.ம.உ.ஆ.கு. பணியாளருக்காக முகாமைத்துவம், தலைமைத்துவம், குழாமைக் கட்டியெழுப்புதல், திட்டமான எண்ணம், வாடிக்கையாளர் முனைப்பாக்கம் மற்றும் தொடர்பாடல் திறன்கள் ஆகியன விருத்திசெய்யப்பட்டன. - (2013)

ஆ) அரசாங்கப் பயனுரித்தாளர்கள், உள்ஙா் தகுதியீன இயக்கம் மற்றும் தகுதியீன ச.அ.சா.தா.கள்.'.அ.ச.தா.கள் ஆகியவற்றின் மத்தியில், இ.ம.உ.ஆ.கு.இனால் ஒழுங்கு செய்யப்பட்ட தகுதியீனக் கொள்கைகள் மற்றும் சட்டவாக்கங்கள் ஆகியன மீதான தேசிய உசாவுகையையும், கலந்தாய்வையும் பின்தொடர்ந்து, UNCRPDI இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதற்காக தகுதியீனச் சட்டவாக்கங்களுக்கு கொண்டுவருவதற்கு அவசியமான திருத்தங்களில் ஒருப்பாடொன்றை அடைவதற்காக, இ.ம.உ.ஆ.கு.இலிருந்து ஆதரவுடன் கூட்டமொன்றைச் சமூக சேவைகள் அமைச்சு ஆரம்பித்தது. - (2013)

இ) இ.ம.உ.ஆ.கு.க்கு மனித வளக் கொள்கையை விருத்திசெய்வதற்காக உசாவலர் தெரிவுசெய்யப்பட்டதுடன், புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது. உசாவலரின் குழாமுக்கும், இ.ம.உ.ஆ.கு.க்கும் இடையில் நடைபெற்ற பெருமளவு கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, வரைவுக் கொள்கை வகுத்தமைக்கப்பட்டது. - (2013.∵.2014)

ஈ) சட்ட அலுவலர்களின்றி தொழிற்படுகின்ற ம.உ.ஆ.கு. அலுவலகங்களுக்கு சட்ட உசாவலர்களை வழங்குவதன் மூலம், சேவைகளை வழங்குவதற்கு பிராந்திய அலுவலகங்கள் சிறந்த நிலையில் உள்ளன - (அனுராதபுரம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, கல்முனை, வவுனியா). - (2013/2014)

உ) இ.ம.உ.ஆ.கு.இனால் தேவைகள் மதிப்பீட்டினைத் தொடர்ந்து, அவற்றின் தொழிற்பாட்டினை மேம்படுத்துவதற்காக, இ.ம.உ.ஆ.கு.இன் பிராந்திய அலுவலகங்களுக்கும், தலைமை அலுவலகத்திற்கும் மற்றும் நடமாடும் அலுவலகங்களுக்கும் தகவல் தொழில்நுட்பச் சாதனங்களும், மரத்தளபாடங்களும் வழங்கப்பட்டன. - (2013)

ஊ) கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் புத்தளம் ஆகியவற்றில் நடமாடும் அலுவலகங்களையும் மற்றும் ஆதரவுச் செயற்பாடுகளையும் தாபிப்பதன் மூலம், தமது பிராந்திய அலுவலகங்களினால் உள்ளடக்கப்படாத பகுதிகளை அடைவதற்கு இ.ம.உ.ஆ.கு.க்கு ஆதரவளித்தல். - (2013)

எ) தலைமை அலுவலகத்திற்கும், பிராந்திய அலுவகங்களுக்கும் இடையில் நடைமுறையை ஆரம்பிப்பதன் மூலமும், இரு கூட்டங்களுக்கு ஆதரவளிப்பதன் மூலமும் இ.ம.உ.ஆ.கு.இனுள் காலாண்டு மதிப்பாய்வினதும், முன்னேற்றப் பொறிமுறையினதும் நடைமுறையொன்றைத் தாபிப்பதற்கு ஆதரவளித்தல். - (2013)

ஏ) இ.ம.உ.ஆ.கு. ஆணையாளர்களினதும், தலைமை அலுவலகப் பணியாளரினதும் மற்றும் பிராந்தியப் பணியாளரினதும் மத்தியில் கூட்டமொன்றின் ஊடாக 2014 கருத்திட்டச் செயற்பாடுகளும் மற்றும் இ.ம.உ.ஆ.கு. செயற்பாடுகளும் திட்டமிடப்படுகின்றன. - (2014)

ஐ) UNFPAஉடன் ஒன்றுசேர பால்நிலை அடிப்படையிலான வன்முறை மீது பயிற்சிக் கையேட்டினைப் புதுப்பிப்பதற்கும், மொழிபெயர்ப்பதற்கும், தொழில்நுட்பரீதியில் மதிப்பிடுவதற்கும், அத்துடன் அச்சிடுவதற்கும் இ.ம.உ.ஆ.கு.க்கு ஒருங்கிணைப்பு ஆதரவு வழங்கப்படுகின்றது. - (2014)

ஒ) பால்நிலை அடிப்படையிலான வன்முறைக் கையேடானது தொழில்நுட்பரீதியில் மதிப்பிடப்பட்டும், புதுப்பிக்கப்பட்டும், மொழிபெயர்க்கப்பட்டும் அச்சிடப்பட்டது. - (2016)

ஓ) கருத்திட்ட உதவியாளர்களைத் தக்கவைப்பதற்காக இ.ம.உ.ஆ.கு.க்கு ஆதரவளிப்பதன் ஊடாக, பொதுமக்களை அதிகளவில் அடைவதற்காக நடமாடும் அலுவலகங்களின் ஆதரவுச் செயற்பாடுகள் தாபிக்கப்பட்டுள்ளன. - (2014/2015/2016)

**6.3.4 மனித உரிமைகள் பிரச்சனைகளினதும், கரிசனைகளினதும் மீதான கண்காணித்தலுக்கும், அறிக்கையிடலுக்குமான இ.ம.உ.ஆ.கு. ஆற்றலளவு பலப்படுத்தப்பட்டது:**

அ) தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகத்தினால் பங்கிடப்பட்ட அரசாங்க அலுவலர்களுக்கான தேர்தல் நடைமுறை மீதான வழிகாட்டல்களை இ.ம.உ.ஆ.கு. வழங்குதல். வட மத்திய மற்றும் வட மேல் மாகாண சபைத் தேர்தல்களின் போது, வேறு சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களுடன் இ.ம.உ.ஆ.கு.இனால் நடத்தப்பட்ட "தேர்தல்களைக் கண்காணித்தல்" ஊடாக தேர்தல் முறைகேடுகளைக் குறைப்பதை நோக்கி வாக்களிப்புச் சாவடிகளினதும், எண்ணும் நிலையங்களினதும் எழுந்தமானத்திலான கண்காணிப்பு பங்களிக்கின்றது. - (2013)

ஆ) பொலிஸ் நிலையங்களுக்கும், சிறைச்சாலைகளுக்கும் திடீர் கண்காணித்தல் வருகைதரல்கள் ஊடாக, சிறைச்சாலைகளுக்கு அவர்களினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களின் அமுலாக்கத்தை இ.ம.உ.ஆ.கு. கண்காணிக்கின்றது. - (2013)

இ) 2012 வருடாந்த அறிக்கையின் மொழிபெயர்ப்புக்கும், வெளியீட்டுக்கும் மற்றும் பங்கீட்டுக்குமான ஆதரவின் ஊடாக, தகவலைப் பரப்புவதற்கு இ.ம.உ.ஆ.கு.க்கு ஆதரவளிப்பதுடன், இணையதளத்தைப் பராமரிப்பதற்கு வெளிவாரி ஆதரவை வழங்குதல். - (2013)

ஈ) மனித உரிமைகள், வெளிவிவகார அமைச்சினால் பகுதியளவில் விருத்திசெய்யப்பட்ட காணாமல்போதல் தரவுத் தளத்தைப் புதுப்பிப்பதற்காக பொலிஸ் திணைக்களத்துடனும், இராணுவத்துடனுமான உசாவுகைகளை இ.ம.உ.ஆ.கு. ஆதரவளித்தது. - (2013)

உ) அரசியல் கட்சிகளுடனும், தேர்தல்கள் ஆணைக்குழுவுடனும், சிவில் சமூகப் பங்காளிகளுடனும் மற்றும் தேர்தல் கண்காணிப்புடனும் விஸ்தாரமான உசாவுகைகளின் ஊடாக, தென், மேல் மற்றும் ஊவ மாகாண சபைத் தேர்தல்களின் போது வன்முறையையும், முறைகேடுகளையும் கட்டுப்படுத்துவதற்காக, அதன் பங்களிப்புக்காக தமது உத்தியோகபூர்வ அறிக்கையில் இ.ம.உ.ஆ.கு.ஐத் தேர்தல்கள் ஆணையாளரின் அலுவலகம் பாராட்டியுள்ளது. - (2014)

ஊ) தென், மேல் மற்றும் ஊவா மாகாணத் தேர்தல்களின் அவதானிப்புக்கள் மீதான அடிப்படையில் முன்னைய மாகாண சபைத் தேர்தலுக்காக இ.ம.உ.ஆ.கு.இனால் வழங்கப்பட்ட "தேர்தல் தொகுதி வழிகாட்டல்கள்" மீளவாயப்பட்டதுடன், அலுவலர்களுக்கும், தேர்தல் கடமைக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வழிகாட்டல்களாக விளங்கிய வழிகாட்டல் சிற்றேடுகள் கருத்திட்டத்தின் ஆதரவுடன் அச்சிடப்பட்டது. - (2014)

எ) அரசாங்க அலுவலர்களினால் நடவடிக்கைகளின்/நடவடிக்கையின்மைகளின் விளைவொன்றாக உருவாக்கப்பட்ட தேர்தல் தொடர்பான பிரச்சனைகளை மத்தியஸ்தம் செய்வதற்கு தேர்தல் ஆணையாளரினால் இ.ம.உ.ஆ.கு. உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, வரவழைக்கப்பட்டது. - (2014)

ஏ) உளவியலாளர்களையும் மற்றும் சமூகப் பராமரிப்பு ஊழியர்களையும் கொண்ட உசாவலர்களின் குழாமொன்றினால் ஐந்து மாகாணங்களை உள்ளடக்கி, சுதந்திரத்தை இழக்கின்ற சிறுவர்கள் உள்ள பதினெட்டு நிறுவனங்களின் ஆய்வொன்றின் மீதான அடிப்படையில், 'மாற்றமொன்றுக்காக பரிந்துரைகளுடன் சட்டத்தின் மோதலின் விளைவொன்றாக சுதந்திரத்தை இழந்த சிறுவர்களின் சூழ்நிலை மீதான இ.ம.உ.ஆ.கு. ஆய்வு அறிக்கை'. - (2016)

**6.3.5 பிராந்திய மற்றும் தேசிய மட்டங்களில் ஆதரவளிக்கப்பட்ட சிவில் சமூகத்துடன் இ.ம.உ.ஆ.கு.இன் விருத்தியடைகின்ற ஈடுபாடு:**

அ) பின்வரும் இடங்களில் மனித உரிமைகள் பிரச்சனைகளுக்கு தீர்வுகளைக் கண்டறிவது மீதான கலந்தாய்வுடன் இணைந்து சிவில் சமூகச் செயலார்வலர்களுக்காக/அவர்களுடன் 29 கூட்டங்கள்/பயிற்சிகள்/விழிப்பியலை உயர்த்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியன நடத்தப்பட்டன. யாழ்ப்பாணம் - 2, கிளிநொச்சி - 1, வவுனியா - 1, முல்லைத்தீவு - 1, மன்னார் - 1, அனுராதபுரம் - 2, பொலன்னறுவை - 1, ஹிங்கிராக்கொடை - 1, திருகோணமலை - 2, அம்பாறை - 3, கண்டி - 3, பதுளை - 3, கல்முனை - 3, மட்டக்களப்பு – 3, கிழக்குப் பிராந்தியம் - மனித உரிமை மீது 3 நாள் செயலமர்வு மற்றும் கலந்தாய்வு: புத்தளம் - 1. - (2013)

ஆ) யாழ்ப்பாணத்தில் இ.ம.உ.ஆ.கு.இனால் மத்தியஸ்தம் செய்யப்பட்ட மொழி உரிமைகள் பிரச்சனைகளுக்கு தீர்வுகளைக் கலந்துரையாடுவதற்கும், நாடுவதற்கும் 148 அரசாங்க அலுவலர்களும் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்களும் ஒன்றுசேர வருகின்றனர். - (2014)

இ) மொழி உரிமைகள் மீது திருந்திய அறிவினை யாழ்ப்பாணத்திலுள்ள 60 அரசாங்க அலுவலர்களும், சிவில் சமூக உறுப்பினர்களும் வழங்கினர். - (2014)

ஈ) எண்பது சிவில் சமூக உறுப்பினர்களினதும் மற்றும் கடமையாற்றுவோர்களினதும் மத்தியில் நடைபெற்ற மாவட்டத்திலுள்ள மனித உரிமைப் பிரச்சனை மீதான கலந்துரையாடல் ஒன்றின் ஊடாக, மன்னாரில் ஆகக்கூடுதலான எண்ணிக்கையைக் கொண்ட பிரச்சனைகளுக்கு தீர்வுகளை மத்தியஸ்தம் செய்வதற்காக இ.ம.உ.ஆ.கு. நாடி நிற்கின்றது. - (2014)

உ) ஒரு நாள் பயிற்சி ஊடாக, மொழி உரிமைகள் மீது திருந்திய விழிப்பியலை கல்முனையிலுள்ள 125 சிவில் சமூக மற்றும் அரசாங்க அலுவலர்கள் பெற்றனர். - (2104)

ஊ) பால்நிலை அடிப்படையிலான வன்முறை மீது தமது அறிவை கல்முனையில் 120 சிவில் சமூக உறுப்பினர்களும், அரசாங்க அலுவலர்களும் மேம்படுத்தியதுடன், பிரச்சனை மீது கிரமமான ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படுவதற்கான வலைப்பின்னலொன்றை அமைத்து, இ.ம.உ.ஆ.கு.இனால் வசதிப்படுத்தப்பட்ட பகுதியில் தொடர்பான பிரச்சனைகளையும் கலந்துரையாடினர். - (2014)

எ) சிவில் சமூக உறுப்பினர்கள், பொலிஸார், இராணுவததினர் மற்றும் அரசாங்கச் சேவையாளர் ஆகியோருடனும் அத்துடன் ஊடகங்களுடனும் களுத்துறை அரசாங்க அதிபரின் அலுவலகத்தில் கூட்டமொன்றின் ஊடாகவும்; பேருவளை/அளுத்கமையில் சிவில் சமூகத்தினர், சனசமூகப் பிரதிநிதிகள், பௌத்த மற்றும் முஸ்லிம் மதத் தலைவர்கள் மற்றும் உள்ஈராட்சி அரசியல்வாதிகள் ஆகியோருடன் கூட்டமொன்றின் ஊடாகவும் இனத்துவச் சமூகங்களுக்கு இடையில் பகுதியில் இடம்பெற்ற கலகங்களைத் தொடர்ந்து, பேருவளையிலும், அளுத்கமையிலும் பிரச்சனைகளுக்கான தீர்வுகளை மத்தியஸ்தம் செய்வதற்கான இ.ம.உ.ஆ.கு.இன் முன்னெடுப்புகள். - (2014)

ஏ) மனித உரிமைகள் மீது திருந்திய விழிப்பியலை பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள 89 சிவில் சமூக உறுப்பினர்களும், மதத் தலைவர்களும் பெற்றதுடன், மனித உரிமைகளை மேம்படுத்துவதிலும், பகுதியைப் பாதுகாப்பிலும் சிவில் சமூகத்தின் (குறிப்பாக மதத் தலைவர்கள்) பொறுப்புக்கள் மீது கலந்துரையாடினர். - (2014)

ஐ) வவுனியாவில் இ.ம.உ.ஆ.கு.இனால் வசதிப்படுத்தப்பட்ட பகுதியில் நடைமுறையிலான மனித உரிமைகள் பிரச்சனைகளைத் தீர்க்கும் வழிவகைகள் மீது கலந்துரையாடல் ஒன்றை 90 சிவில் சமூக உறுப்பினர்கள் நடத்தினர். - (2014)

ஒ) இரண்டு நாள் வதிவிடப் பயிற்சிகள் ஊடாக, மனித உரிமைகளின் புரிந்துணர்வை நுவரெலியாவில் 200 இளைஞரும், பதுளையில் 40 இளைஞரும் மேம்படுத்தினர். - (2014)

ஓ) இரண்டு நாள் பயிற்சியொன்றின் ஊடாக, மனித உரிமைகளினதும், சிறுவர் உரிமைகளினதும் மீதான அறிவை வலப்பனையில் 125 முன்-பள்ளி ஆசிரியர்கள் மேம்படுத்தினர். - (2014)

ஔ) இரண்டு நாள் வதிவிடப் பயிற்சியினதும், கலந்துரையாடலினதும் ஊடாக, மனித உரிமைகளினதும், சிறுவர் உரிமைகளினதும் மீதான திருந்திய விழிப்பியலை அம்பாறையிலுள்ள 100 பாடசாலை அதிபர்கள் பெற்றனர். - (2014)

க) ஒரு நாள் பயிற்சியின் ஊடாக, பால்நிலை அடிப்படையிலான வன்முறை மீதான அறிவை புத்தளத்திலுள்ள 100 மதத் தலைவர்களும், பெண் தலைவர்களும் மேம்படுத்தினர். - (2014)

கா) மத்தியஸ்தம் ஊடாக, பகுதியில் முக்கியமான மனித உரிமைப் பிரச்சனைகளுக்கு தீர்வுகளைக் கண்டறிவதற்காக, இ.ம.உ.ஆ.கு.இனாலும், சிவில் சமூகத்தினாலும் இணைந்து ஒழுங்குபடுத்தப்பட்ட கலந்துரையாடலொன்றை, பதுளையில் 90 சிவில் சமூக உறுப்பினர்களும், அரசாங்க அலுவலர்களும் மற்றும் ஊடகத்தினரும் நடத்தினர். - (2014)

கி) முக்கியமான மனித உரிமைகள் பிரச்சனைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கும் அத்துடன் நடவடிக்கைகள் மீது அரசாங்க அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கும் பொலன்னறுவையில் இ.ம.உ.ஆ.கு.இனால் வசதிப்படுத்தப்பட்ட இணைந்த கலந்துரையாடலொன்றை 150 சிவில் சமூக உறுப்பினர்களும், அரசாங்க அலுவலர்களும் நடத்தினர். - (2014)

கீ) இ.ம.உ.ஆ.கு.இனாலும், தேர்தல்கள் ஆணையாளரினாலும் இணைந்து வசதிப்படுத்தப்பட்ட இ.ம.உ.ஆ.கு.இனால் வழங்கப்பட்ட தேர்தல் தொகுதி வழிகாட்டல்களினதும், பரிந்துரைகளினதும் அமுலாக்கத்தின் முன்னேற்றத்தையும், நடைமுறையிலான சவால்களையும் பொலன்னறுவையில் 200 பொலிஸ் அலுவலர்களும், அரசாங்க அலுவலர்களும் மற்றும் சிவில் சமூகத்தினரும் ஒன்றுசேர வந்து கலந்துரையாடினர். - (2014)

கு) பிராந்திய மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட சிவில் சமூக உள்மையக் குழு உறுப்பினர்களுடன் ஒருங்கிணைப்புக் கூட்டங்களின் ஊடாக கலந்துரையாடப்பட்ட மனித உரிமைகள் பிரச்சனைகளைக் கவனத்திற்கெடுப்பதில் சிவில் சமூகத்துடனான கூட்டுமுயற்சியிலான நடவடிக்கை. - (2014)

**6.3.6 மனித உரிமைகள் அடிப்படையிலான கொள்கையையும், நிகழ்ச்சித் திட்டமிடலையும் மேம்படுத்துவதற்காக சட்ட மன்ற உறுப்பினர்களுடனும், அரசாங்க அலுவலர்களுடனும் மற்றும் நியதியாக்க உறுப்புக்களுடனும் பணியாற்றுதல்:**

அ) பொதுவான பாடசாலைப் பாடவிதானத்தில் மனித உரிமைகள் கல்வியை உள்ளடக்குவது மீதான பணியை முடிப்பதற்காக கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவனம் மற்றும் கல்வி வாழ்க்கைத்தொழில்புரிவோர் சங்கம் ஆகியவற்றுடனான இ.ம.உ.ஆ.கு.இன் பணியின் ஊடாக, பாடசாலைப் பாடவிதானத்தில் மனித உரிமைகள் கல்வியை உள்ளடக்குவதற்கு அரசாங்கப் பங்காளர்களுடன் இணைவதற்கு இ.ம.உ.ஆ.கு.க்கு ஆதரவைக் கருத்திட்டம் வழங்கியது. பிரதான நீரோட்டப் பாடசாலைப் பாடவிதானத்தினுள் மனித உரிமைகள் கல்வியை ஒன்றிணைப்பதற்கு கல்வி அமைச்சுடனும், தேசிய கல்வி நிறுவனத்துடனும் ஒன்றுசேர பணியாற்றுகின்ற இ.ம.உ.ஆ.கு.இனால் ஒரு வரைவு பாடவிதான வரைச்சட்டம் விருத்திசெய்யப்பட்டது. - (2013.˙.2015)

ஆ) அரசாங்க முகாமைத்துவச் சீர்திருத்தங்கள் அமைச்சுடன் ஒழுங்குபடுத்தப்பட்ட பயிற்சியின் ஊடாக, மனித உரிமைகளினதும், நிருவாகச் சட்டங்களினதும் மீதான திருந்திய அறிவினை 25 அமைச்சுச் செயலகப் பணியாளர் பெற்றனர். - (2014)

இ) 2016இல் பாராளுமன்றத்தில் இயற்றப்படுவதற்குள்ள தகுதியீன சட்டமூலம் மீது அரசாங்கத்திற்கு அவற்றின் பரிந்துரைகளை வழங்குமுகமாக தகுதியீனச் சட்டவாக்கங்கள் மீது பல்-எண்ணிக்கையிலான பயனுரித்தாளர்களுடன் இ.ம.உ.ஆ.கு. இனால் உசாவுகைகளின் திட்டமிடப்பட்ட தொடரொன்றுக்கு ஆதரவளிக்குமுகமாக வெளிவாரி உசாவலர் ஒருவர் ஊடாக “தகுதியீனம் மீது தேசியக் கொள்கைகளினதும், சட்டவாக்கங்களினதும் முன்னேற்றம், அங்கீகாரங்களிலும், அமுலாக்கத்திலும் அவற்றின் நிலை; தகுதியீனம் மீதான தேசிய செயல் திட்டம் மற்றும் ஏற்றுக்கொள்ளலுக்கான அவசியம் அத்துடன் இலங்கையில் ருஹேசீனுஇன் அமுலாக்கம் மற்றும் அதற்கான முன்னோக்கிய வழி” ஆகியவற்றைக் குறித்துரைக்கின்ற சாராம்சத்திலான ஆதரித்துவாதாடுதல் ஆவணமொன்றைத் தயாரிப்பதற்கு 2015ஆம் ஆண்டில் இ.ம.உ.ஆ.கு.க்கு கருத்திட்டம் ஆதரவளித்தது.


தகுதியீனச் சமூகத்துடனும், சிவில் சமூகத்துடனும் மற்றும் நூற்கல்வியாளருடனும் இதன் மீதான ஒரு தொடரிலான உசாவுகைகளைத் தொடர்ந்து, தொகுக்கப்பட்ட தகுதியீன உரிமைகள் சட்டமூலத்திற்கான சுட்டிச்சொல்லப்பட்ட திருத்தங்களுடன் ஒன்றுசேர இ.ம.உ.ஆ.கு.இனால் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் மற்றும் பாராளுமன்றத்திற்கும் ஆலோசனைகள்/பரிந்துரைகள் அனுப்பப்படும். - (2016)

ஈ) மனித உரிமைகளில் தமது புரிந்துணர்வைப் பலப்படுத்துவதற்காக, நிகழ்ச்சித் திட்டமொன்றில் 29 பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கெடுத்ததுடன், இரு விடயங்களிலும் அதிகளவு அக்கறையை எடுத்துக்காட்டியதுடன், இ.ம.உ.ஆ.கு. தலைவரினாலும், பாராளுமன்றப் பிரதிச் சபாநாயகரினாலும் இணைந்து தலைமை தாங்கப்பட்ட நுவரெலியாவில் நடைபெற்ற வதிவிட ஆய்வு மகாநாட்டைத் தொடர்ந்து, இ.ம.உ.ஆ.கு.உடன் கூட்டுமுயற்சியைத் தொடர்ந்தனர். - (2016)

## அத்தியாயம் ஒன்றுக்கான பிற்சேர்க்கைகள்

பிற்சேர்க்கை 1அ –

**தீவகம் பூராகவும் உள்ள இ.ம.உ.ஆ.கு. தலைமை அலுவலகத்தையும், பிராந்திய அலுவலகங்களையும் சித்தரிக்கும் இலங்கையின் தேசப்படம்**



பிற்சேர்க்கை: 1ஆ -

2015இல் இ.ம.உ.ஆ.கு.இன் ஆணையாளர்களினாலும், சிரேஷ்ட அலுவலர்களினாலும் பங்கெடுக்கப்பட்ட கூட்டங்கள்

| | திகதி | விவரணம் | இடம் | யார் பங்கெடுத்தது | நோக்கம் |
|---|---|---|---|---|---|
| 1 | 27.01.2015 | திரு.றொபர்ட் சின்கிளேயர், பிரதிப் பணிப்பாளர்.்.கனடா தென் ஆசிய வெளிநாட்டு அலுவல்கள், வர்த்தக மற்றும் அபிவிருத்தித் திணைக்களம் | ம.உ.ஆ.கு. | தலைவர், ஆணையாளர் திருமதி ஜெஸீமா இஸ்மெயில் மற்றும் திரு.ரி.இ.ஆனந்தராஜா | |
| 2 | 30.01.2015 | நேஸ்பை பிரபு, PC, Baron of Sandy மற்றும் சர்வ கட்சி பாராளுமன்ற குழுவின் உப தலைவர் | ம.உ.ஆ.கு. | தவிசாளர் செயலாளர் | மரியாதையிலான வருகைதரல் |
| 3 | 11.02.2015 | USAID | ம.உ.ஆ.கு. | தவிசாளர் ஆணையாளர்கள் மற்றும் செயலாளர் | இலங்கையின் அபிவிருத்தி சூழமைவினை மதிப்பாய்வதற்கான மதிப்பீடொன்றை நடத்துதல் |
| 4 | 04.03.2015 | Rights Now | யாழ்ப்பாணம் பி.அ. | பிராந்திய ஒருங்கிணைப்பாளர் மற்றும் பங்கெடுப்பாளர்கள் | இ.ம.உ.ஆ.கு. ஆணை மற்றும் பணி |
| 5 | 12.03.2015 | PAFFREL | ப.ஞா.ச.ம.ம | செயலாளர், பதில் பணிபபாளர் - I&I | இலங்கையின் பிரஜைகளுடன் நடத்தப்பட்ட ஒரு தொடரிலான கலந்தாய்வு மீதான அடிப்படையில், மக்களைப் பிரதிநிதிப்படுத்து வதற்கான மூலப்பிரமாணத்தை முன்வைத்தல் |
| 6 | 12.03.2015 | சட்டம் மற்றும் சமூக நம்பிக்கைப்பொறுப்பு | ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் | செயலாளர், ஆராய்ச்சி அலுவலர் | அளுத்தகம கலவரங்களினதும், அதன் பின்னரினதும் மீதான பகிரங்க கலந்துரையாடல் |
| 7 | 16.03.2015 | HELVETAS Swiss Inter Co-operation | இ.ம.உ.ஆ.கு. | | |
| 8 | 23.03.2015 | ICES | ICES கேட்போர் கூடம் | செயலாளர் மற்றும் ரோஷினி ஹெட்டிகே | “மனித உரிமை வரலாற்றில் சமகால விவாதங்கள்” மீதான கருத்தரங்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | 27.03.2014 | இணையதளத்தின் மீது வெளியிடப்பட்ட வருடாந்த அறிக்கை | | | |
| 10 | 28.03.2015 | CPA | ஹொட்டேல் ஜானகி | செயலாளர் மற்றும் ரோஷினி ஹெட்டிகே | HIV/AIDS மற்றும் தொடர்பான பிரச்சனைகள் மீது சட்ட மற்றும் கொள்கை வரைச்சட்டம் |
| 11 | 07.04.2015 | பெண்கள் மீதான தேசியக் குழு | SLFI | செயலாளர் | "இணக்கத்தின் வயது" மீதான கலந்துரையாடல் |
| 12 | 24.04.2015 | ரோட்டரிக் கழகம் | | வியாபாரச் சமூகம் | "நல்லாட்சி" |
| 13 | 12.05.2015 | பாடசாலைச் சிறுமிகள் | ம.உ..ஆ.கு. | செயலாளர் மற்றும் ஆணையாளர் திருமதி ஜெஸீமா இஸ்மெயில் | பால்நிலை மீதான கலந்துரையாடல் |
| 14 | 14.05.2015 | மனித உரிமைகளின் ஆய்வுக்கான நிலையம் | ம.உ..ஆ.கு. | செயலாளர் | |
| 15 | 14.05.2015 | ஐரோப்பிய ஒன்றியத்தின் பேராளர் குழு | ம.உ..ஆ.கு. | செயலாளர், ஆணையாளர் திருமதி ஜெஸீமா இஸ்மெயில், சட்ட உசாவலர், பதில் பணிபபாளர் - ஐரூஜ | |
| 16 | 15.05.2015 | சமூகத்திற்கும், மதத்திற்குமான நிலையம் | சட்ட உதவி அலுவலகம் | பதில் பணிபபாளர் - யூரூகு | |
| 17 | 21.05.2015 | ஊடக ஆளணியினர் மற்றும் அரசாங்க அலுவலர்கள் | ம.உ..ஆ.கு. | தவிசாளர், ஆணையாளர்கள், செயலாளர், சட்ட உசாவலர், தேர்தல் ஆணையாளர் மற்றும் ஊடக ஆளணியினர் | தேர்தல் - பொது இடங்களின் துஷ்பிரயோகம் |
| 18 | 25.05.2015 | ஹொல்சிம் லங்கா | ம.உ..ஆ.கு. | பதில் பணிப்பாளர் - A&F | வியாபாரம் தொடர்பான மனித உரிமைகள் தாக்கம் |
| 19 | 26.05.2015 | சிறுவர் விவகாரங்கள் ராஜாங்க அமைச்சர் | ICES | திருமதி சுஜீவா, திருமதி கனகராஜ், திருமதி சிறியாணி, திருமதி ஷிரோமி | "யுத்தத்திற்குப் பிந்திய போக்குகள்: இலங்கையில் சிறுவர் திருமணம்" மீதான ஆராய்ச்சி ஆய்வு |
| 20 | 28.05.2015 | ஊடக ஆளணியினர் ஊடக சுருக்கப்படுத்தல் | ம.உ..ஆ.கு. | தவிசாளர், ஆணையாளர்கள், செயலாளர், சட்ட உசாவலர், தேர்தல் ஆணையாளர் மற்றும் ஊடக ஆளணியினர் | ஊடகத் துஷ்பிரயோகம் |
| 21 | 12.06.2015 | USAID | ம.உ..ஆ.கு. | தலைவர், ஆணையாளர் திரு.ஆனந்தராஜா, செயலாளர் | |
| 22 | 19.06.2015 | சமூக சேவைகள் | செத்சிறிபாய | செயலாளர், பதில் | பதிவுசெய்யப்பட்ட மெத்செவன தடுத்து |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | திணைக்களம் | | பணிப்பாளர் - ஆசு | வைத்தல் நிலையம் |
| 23 | 25.06.2015 | MSM மற்றும் TGஐப் பாதிக்கும் விடயங்கள் மீதான செயலமர்வு | குடும்பக் கட்டுப்பாட்டுச் சங்க கேட்போர் கூடம் | திருமதி டிலிஷி, திரு.அஹமட், நிஹால் மற்றும் திரு.ரூபசிங்க | |
| 24 | 30.06.2015 | தேர்தல் ஆணையாளர் | ம.உ.ஆ.கு. | தலைவர், செயலாளர், சட்ட உசாவலர் | பொதுத் தேர்தல் - 2015 |
| 25 | 06.07.2015 | தேர்தல் ஆணையாளர், ஊடக அமைச்சு, TRC, ஊடகம் | ம.உ.ஆ.கு. | தவிசாளர், ஆணையாளர் | தேர்தல் காலத்தின் போது தனியார் ஊடகங்கள் மீதான கலந்துரையாடல் |
| 26 | 22.07.2015 | மனித உரிமைகளுக்கும், முன்னேற்றத்திற்குமான வழக்கறிஞர்கள் | ப.ஞா.ச.ம.ம. | செயலாளர் | சிறுவர் உரிமைகள் ஆட்சி மீதான தேசிய நிகழ்ச்சிநிரலை ஆரம்பித்தல் |
| 27 | 23.07.2015 | அரசாங்கத் தொழிற்சங்கங்களுடன; PAFFREL கூட்டம் | HARTI | செயலாளர் | பாராளுமன்றத் தேர்தல்களின் முன்னேற்றத்திற்கான பொறுப்புக்கள் மற்றும் பதிலிறுப்புக்கள் |
| 28 | 24.07.2015 | தேசியச் சம்பள ஆணைக்குழு | | செயலாளர், பதில் பணிப்பாளர் - A&F திருமதி குமாரி | |
| 29 | 27.07.2015 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம் | | செயலாளர், பதில் பணிப்பாளர் - A&F திருமதி குமாரி | |
| 30 | 27.07.2015 | ஐக்கிய அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் அலுவலகம் | ம.உ.ஆ.கு. | தலைவர், திருமதி ஜெஸீமா இஸ்மெயில், செயலாளர், சட்ட உசாவலர், பதில் பணிப்பாளர்கள் - M&R, Edu | சட்டத்தின் ஆட்சி மற்றும் ஊழல் எதிர்ப்பு |
| 31 | 30.07.2015 | ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் | ம.உ.ஆ.கு. | செயலாளர் | இனிவரவுள்ள பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான சட்டப் பிரச்சனைகள் |
| 32 | 03.08.2015 | பத்திரிகை மகாநாடு | ம.உ.ஆ.கு. | | |
| 33 | 07.08.2015 | இரட்டை வெளியிடுகளின் வெளியீடு | ப.ஞா.ச.ம.ம. | செயலாளர் | |
| 34 | 15.08.2015 | ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் அவதானிப்பு தூதுக்குழு | ஹொட்டேல் கலதாரி | செயலாளர் | |
| 35 | 18.08.2015 | PAFFREL கூட்டம் | ஹொட்டேல் கலதாரி | திருமதி ஜெஸீமா இஸ்மெயில், ஆணையாளர், செயலாளர், பதில் பணிப்பாளர் - M&R | தேர்தல் மதிப்பாய்வு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36 | 02.09.2015 | இந்தியா, தேசிய தலித் ஆணைக்குழுவுடன் கூட்டம் | இ.ம.உ.ஆ.கு. | திருமதி ஜெஸீமா இஸ்மெயில், ஆணையாளர், செயலாளர், பதில் பணிப்பாளாகள் - M&R, I&I, A&R, Edu. & Spl.Prog. | |
| 37 | 28.09.2015 | கலாநிதி பியிசிற விக்ரமசேகர, ILO | இ.ம.உ.ஆ.கு. | தலைவர், சட்ட உசாவலர், பதில் பணிப்பாளாகள் - I&I மற்றும் M&R | |
| 38 | 29.09.2015 | Right to Life | மகாவலி கேந்தரய | திரு.நிமா புஞ்சிஹேவ, சட்ட உசாவலர் | |
| 39 | 01.10.2015 | FEMBOSA | ஹொட்டேல் கலதாரி | தவிசாளர் | |
| 40 | 06.10.2015 | இலங்கைக்கான APRC தூதுக் குழு | இ.ம.உ.ஆ.கு. | தவிசாளர், திருமதி ஜெஸீமா இஸ்மெயில், ஆணையாளர், செயலாளர், UNDP - திருமதி தனுஜா, பதில் பணிப்பாளர்கள் - M&R, மற்றும் நிருவாகம் மற்றும் நிதி | |
| 41 | 16.10.2015 | USA தூதுவராலயம் - அரசியல் அலுவலர் | இ.ம.உ.ஆ.கு. | தவிசாளர் மற்றும் செயலாளர் | |
| 42 | 20.10.2015 | உலக புள்ளிவபர தினம் 2015 | ஹில்டன் கொழும்பு ரெஸிடென்ஸ் | செயலாளர் | |
| 43 | 03.11.2015 | திரு.ஜோன் வொட்ச், கலாநிதி சாந்தனி லியனகே பத்திாகை மகாநாடு மற்றும் புதிய ஆணைக்குழுவினால் சிவில் சமூகத்துடன் கூட்டம் | இ.ம.உ.ஆ.கு. | திருமதி அம்பிகா சற்குணநாதன் ஆணையாளர் | |
| 44 | 06.11.2015 | சகல பணியாட் உறுப்பினர்களுடன் கூட்டம் | இ.ம.உ.ஆ.கு. | தவிசாளர், ஆணையாளர்கள் | |
| 45 | 13.11.2015 | பிராந்திய ஒருங்கிணைப்பாளர்களின் கூட்டம் | இ.ம.உ.ஆ.கு. | தவிசாளர், ஆணையாளர்கள், செயலாளர் மற்றும் பணிப்பாளர்கள் | |
| 46 | 17.11.2015 | திரு.சுபினேய நன்டி, வதிவிட ஒருங்கிணைப்பாளர் மற்றும் திரு. ஜோர்ன் சொரன்சென், நாட்டுப் பணிப்பாளர் | இ.ம.உ.ஆ.கு. | தவிசாளர், ஆணையாளர்கள் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 47 | 17.11.2015 | திரு.யுவராஜ் ஜோஷி, மனித உரிமைகள் கண்காணிப்பகம் | இ.ம.உ.ஆ.கு. | திருமதி மேனகா ஹேரத், பதில் பணிப்பாளர் - கல்வி மற்றும் விசேட நிகழச்சித்திட்டங்கள் மற்றும் திரு.கபிலன், கல்வி அலுவலர் | |
| 48 | 19.11.2015 | திரு.ஐகோர் சிவெடகோஸி, IOM | இ.ம.உ.ஆ.கு. | திருமதி அம்பிகா சற்குணநாதன் ஆணையாளர் | |
| 49 | 23.11.2015 | ஐ.அ. ராஜாங்க அமைச்சின் ஜனநாயகம், உரிமைகள், தொழில் பணியகத்தினால் அனுசரணை செய்யப்பட்ட மதிப்பீட்டுப் பேராளர் குழு | இ.ம.உ.ஆ.கு. | திருமதி அம்பிகா சற்குணநாதன் ஆணையாளர் | |
| 50 | | சுவிஸ் தூதுவராலயம் | இ.ம.உ.ஆ.கு. | திருமதி அம்பிகா சற்குணநாதன் ஆணையாளர் | |
| 51 | 24.11.2015 | சாட்சி மற்றும் பாதிக்கப்பட்டோர் மீதான ஐ.நா. குழாம் | இ.ம.உ.ஆ.கு. | தலைவர், திருமதி அம்பிகா சற்குணநாதன் ஆணையாளர் | |
| 52 | 24.11.2015 | கலாநிதி பத்மினி மென்டிஸ் | இ.ம.உ.ஆ.கு. | திருமதி அம்பிகா சற்குணநாதன் ஆணையாளர் திருமதி தனுஜா நவரத்ன, ருனேீ | |
| 53 | 24.11.2015 | அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் | இ.ம.உ.ஆ.கு. | தலைவர், ஆணையாளர்கள், திருமதி அம்பிகா சற்குணநாதன் மற்றும் கலாநிதி A.விதானபத்திரன | |
| 54 | 27.11.2015 | மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளரின் அலுவலகம் | இ.ம.உ.ஆ.கு. | தவிசாளர், திருமதி அம்பிகா சற்குணநாதன் ஆணையாளர் | |
| 55 | 27.11.2015 | சாட்சி மற்றும் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்புச் சட்டத்தின் மதிப்பாய்வு மீதான கலந்துரையாடல் | வெளிநாட்டு அமைச்சு | திரு.கஸாலி ஹுசேயின், ஆணையாளர் | |
| 56 | 01.12.2015 | ஐ.நா. கருத்திட்டக் கூட்டம் | இ.ம.உ.ஆ.கு. | திருமதி அம்பிகா சற்குணநாதன் ஆணையாளர் | |
| 57 | 02.12.2015 | பெண்கள் மீதான தேசியக் குழு | களனி பல்கலைக் கழகம் | தவிசாளர் | |
| 58 | 03.12.205 | சிரேஷ்ட ஐ.நா. மனித | இ.ம.உ.ஆ.கு. | தலைவர், | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | உரிமைகள் ஆலோசகர் | | ஆணையாளர் திருமதி அம்பிகா சற்குணநாதன் | |
| 59 | 03.12.2015 | ஐக்கிய அரபு எமிரேட்ஸின் 44ஆவது தேசிய தினம் | ஹில்டன் கொழும்பு | திரு.கஸாலி ஹுசேயின், ஆணையாளர் | |
| 60 | 04.12.2015 | சித்தரவதைக்கு எதிரான குழுவுக்கு இலங்கையின் 5ஆவது ஆவர்த்தன அறிக்கையைக் கலந்துரையாடுவதற்கான கூட்டம் | வெளிநாட்டு அமைச்சு | திரு.கபிலன் வில்லவராஜன், கல்வி அலுவலர் | |
| 61 | 07.12.2015 | அகதி ஆதரித்து வாதாடுதல் குழு | இ.ம.உ.ஆ.கு. | திருமதி அம்பிகா சற்குணநாதன் ஆணையாளர் | |
| 62 | 10.12.2015 | பத்திகட | சிரச | திரு.கஸாலி ஹுசேயின், ஆணையாளர் | |
| | | நியூஸ்லைன் | எம்.ரி.வி. | திருமதி அம்பிகா சற்குணநாதன் ஆணையாளர் | |
| | | நிஸ்கலங்க ஹதஹமர | ஐ.ரி.என். | தவிசாளர் | |
| | | நுகசெவன | ரூபவாஹினி | தவிசாளர் | |
| 63 | 11.12.2015 | சர்வதேச நெருக்கடிநிலைக் குழு | இ.ம.உ.ஆ.கு. | தவிசாளர் | |
| 64 | 11.12.2015 | சட்டத்தின் ஆட்சி அலகிலிருந்து ஐ.நா. குழாம் | இ.ம.உ.ஆ.கு. | தவிசாளர், ஆணையாளர் திருமதி அம்பிகா சற்குணநாதன் | |
| 65 | 18-16.12.2015 | யாழ்ப்பாணத்திற்கு வெளிக்கள வருகைதரல் | | தவிசாளர், ஆணையாளர் திருமதி அம்பிகா சற்குணநாதன் | |
| 66 | 21.12.2015 | பெண்கள் சமாதான தூதுக்குழு | இ.ம.உ.ஆ.கு. | தவிசாளர், ஆணையாளர் திருமதி அம்பிகா சற்குணநாதன் | |

## பிற்சேர்க்கை: 1இ - 2015ஆம் ஆண்டுக்கு செலவினக் கூற்று

அமைச்சின்/திணைக்களத்தின் /மாவட்டச் செலலகத்தின் பெயர்: இலங்கை உரிமைகள் ஆணைக்குழு

செலவினத் தலைப்ப இல. 013

| | | (1) | (2) | (3) | (4) | (5) | (6) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நோக்க குறியீடு | விவரணம் | வரவு-செலவுத் திட்டத்தில் ஏற்பாடு | குறை நிரப்பு ஏறபாடு | கு.சு. 66 மற்றும் 69 தொடர்பில் கைமாற்றங்கள் | மொத்த நிகர ஏற்பாடு (1+2+3) | மொத்தச் செலவினம் | நிகர விளைவிலான சேமிப்பு/ (மேன்மிகை) | திரண்ட | மீதி |
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | | |
| | மீளவரும் | | | | | | | | |
| | ஆளணியினர் வேதனாதிகள் | | | | | | | | |
| 1001 | சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் | 45,500,000 | | | 45,500,000 | 41,320,034 | 4,179,966 | | 4,179,966 |
| 1002 | மேலதிக நேர வேலை மற்றும் விடுமுறைச் சம்பளம் | 2,000,000 | | | 2,000,000 | 1,365,400 | 634,600 | 93,226 | 541,374 |
| 1003 | வேறு படிகள் | 51,900,000 | | | 51,900,000 | 51,287,872 | 612,128 | 16,839 | 595,289 |
| | பிரயாணச் செலவினங்கள் | | | | | | | | |
| 1101 | உள்நாடு | 800,,000 | | | 800,,000 | 611,035 | 188,965 | 36,682 | 150,284 |
| 1102 | வெளிநாடு | 1,100,000 | | | 1,100,000 | 433,441 | 666,559 | | 666,559 |
| | விநியோகங்கள் | | | | | | | | |
| 1201 | காகிதாதி மற்றும் வேறு தேவைப்பாடுகள் | 2,000,000 | | | 2,000,000 | 1,330,218 | 669,782 | 9,501 | 660,281 |
| 1202 | எரிபொருள் | 3,700,000 | | | 3,700,000 | 2,800,734 | 899,266 | 44,117 | 855,149 |
| 1205 | பாவனைக்குரியவை | 300,000 | | | 300,000 | 173,424 | 126,576 | | 126,576 |
| | பராமரிப்புச் செலவினங்கள் | | | | | | | | |
| 1301 | வாகனங்கள் | 2,600,000 | | | 2,600,000 | 2,007,897 | 592,103 | 50,110 | 541,993 |
| 1302 | பொறி, இயந்திராதி மற்றும் சாதனங்கள் | 800,000 | | | 800,000 | 581,584 | 218,416 | | 218,416 |
| 1303 | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | 150,000 | | | 150,000 | 23,850 | 126,150 | | 126,150 |
| | சேவைகள் | | | | | | | | |
| 1401 | போக்குவரத்து மற்றும் வாகன வாடகை | 3,250,000 | | -1,000,000 | 2,150,000 | 1,117,429 | 1,032,571 | 55,000 | 977,571 |
| 1402 | தபால் மற்றும் தொடர்பாடல் | 4,000,000 | | | 4,000,000 | 3,188,396 | 811,604 | 164,064 | 647,540 |
| 1403 | மின்சாரம் மற்றும் நீர் | 9,500,000 | | -880,000 | 8,620,000 | 7,538,935 | 1,081,065 | 603,366 | 477,699 |
| 1404 | வாடகைகள் மற்றும் உள்ஙர் வரிகள் (குறிப்பு 02) | 37,000,000 | | 880,000 | 37,880,000 | 37,878,389 | 1,611 | | 1,611 |
| 1405 | வேறு | 6,000,000 | | 660,000 | 6,600,000 | 6,231,132 | 368,868 | 221,231 | 147,637 |
| | கைமாற்றங்கள் | | | | | | | | |
| 1502 | இளைப்பாற்று நன்மை (பணிக்கொடை) | 1,350,000 | | 500,000 | 1,850,000 | 1,810,611 | 39,389 | | 39,389 |
| 1505 | சந்தா மற்றும் உதவுதொகைக் கட்டணங்கள் | 250,000 | | | 250,,000 | 207,348 | 42,652 | | 42,652 |
| | உப மொத்தம் (மீளவரும்) | 172,200,000 | 0 | 0 | 172,200,000 | 159,907,729 | 12,292,271 | 1,296,137 | 10,996,134 |
| | மூலதனம் | | | | | | | | |
| | மூலதனச் சொத்துக்களை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல் | | | | | | | | |
| 2001 | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | 500,,000 | | | 500,,000 | 249,849 | 250,151 | | 250,151 |
| 2002 | பொறி, இயந்திராதி, சாதனங்கள் | 150,000 | | | 150,000 | 460 | 149,540 | | 149,540 |
| | மூலதனச் சொத்துக்களின் கையடக்கம் | | | | | | | | |
| 2102 | மரத்தளபாடங்கள் மற்றும் அலுவலகச் சாதனங்கள் | 5,000,000 | | | 5,000,000 | 1,334,724 | 3,665,276 | | 3,665,276 |
| 2103 | பொறி, இயந்திராதி மற்றும் சாதனங்கள் | 150,000 | | | 150,000 | 87,249 | 62,751 | | 62,751 |
| | ஆற்றலளவைக் கட்டியெழுப்புதல் | | | | | | | | |
| 2401 | பயிற்சி மற்றும் ஆற்றலளவைக் கட்டியெழுப்புதல் | 3,500,000 | | | 3,500,000 | 2,346,400 | 1,153,600 | | 1,153,600 |
| | வேறு மூலதனச் செலவினம் | | | | | | | | |
| 2502 | வேறு மூலதனங்கள் | 5,000,000 | | | 5,000,000 | 4,712,018 | 287,982 | | 287,982 |
| | மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ஆதரவு | | | | | | | | |
| 2502 | | | | | | | | | |
| | உப மொத்தம் | 14,300,000 | 0 | 0 | 14,300,000 | 8,730,700 | 5,569,300 | 0 | 5,569,300 |
| | கூட்டி மொத்தம் | 186,500,000 | 0 | 0 | 186,500,000 | 168,638,429 | 17,861,571 | 1,296,137 | 16,565,434 |

## அத்தியாயம் இரண்டுக்கான பிற்சேர்க்கைகள்

**பிற்சேர்க்கை 2அ -**

### இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

### பிராந்தியங்களினாலும், தலைமை அலுவலகத்தினாலும் பெறப்பட்ட முறைப்பாடுகள் - 2015

| முறைப்பாட்டின் வகை | பிராந்தியம் | | | | | | | | | | | பிராந்திய மொத்தம் | தலைமை அலுவலகம் | கூட்டி மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அம்பாறை | அனுராதபுரம் | பதுளை | மட்டக்களப்பு | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி உப அலுவலகம் | கல்முனை | கண்டி | மாத்தறை | திருகோணமலை | வவுனியா | | | |
| **தனிப்பட்ட சுதந்திரம்** | **13** | **114** | **50** | **122** | **65** | **23** | **40** | **93** | **148** | **22** | **112** | **802** | **965** | **1,767** |
| சித்திரவதை (உடல்ரீதியான மற்றும் உளவியல் ரீதியான) | 2 | 38 | - | 7 | 3 | 1 | - | 18 | 22 | 2 | 10 | 103 | 312 | 415 |
| தொந்தரவுகள் | | | | | | | | | | | | | | |
| பொதுவான தொந்தரவுகள் | 3 | 37 | 2 | 57 | 49 | 20 | 29 | 28 | - | 13 | 40 | 278 | 375 | 653 |
| பாலியல் தொந்தரவுகள் | - | - | - | - | - | | - | - | - | - | - | - | 4 | 4 |
| அச்சுறுத்தல்கள் | - | - | 37 | - | - | | - | - | 64 | - | 27 | 128 | - | 128 |
| தரம் குறைவாக நடத்துதல் | | | | | | | | | | | | - | | - |
| தன்னிச்சையான கைது.்.தடுத்து வைத்தல் | 8 | 36 | 11 | 48 | 7 | 2 | 8 | 42 | 57 | 6 | 18 | 243 | 247 | 490 |
| தடுத்து வைத்தல் நிலைமைகள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 8 | 8 |
| பாதுகாவலில் மரணம் | - | 2 | - | - | - | | - | - | 1 | - | - | 3 | 4 | 7 |
| வினைப்படுத்தப் பட்ட அல்லது தன்னிச்சையான காணாமல் போதல்கள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| ஆட்கடத்தல்கள் | - | - | - | - | - | | - | 1 | - | - | 1 | 2 | 2 | 4 |
| நீதிக்குப் புறம்பான கொலைகள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 'என்கவுண்டர்' மரணங்கள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| கைதிகளின் உரிமைகள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| காணாமல் போனோர்* | - | 1 | - | 10 | 6 | | 3 | 4 | 4 | 1 | 16 | 45 | 13 | 58 |
| வேறு சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் | - | - | - | - | - | - | - | 2 | - | - | - | 2 | 7 | 9 |
| கருத்துச் சுதந்திரம் | - | - | - | - | - | | - | 1 | - | - | - | 1 | 3 | 4 |
| ஒன்றுகூடுதலின் சுதந்திரம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| இணைவதன் சுதந்திரம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| மதத்தின் சுதந்திரம் | - | - | - | - | - | | - | 1 | - | - | - | 1 | 4 | 5 |
| நடமாட்டத்தின் சுதந்திரம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| தகவலுக்கான உரிமை | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தொழில் | 52 | 141 | 90 | 51 | 47 | 11 | 74 | 191 | 149 | 34 | 39 | 879 | 1,084 | 1,963 |
| கல்வி | 3 | 45 | 17 | 23 | 18 | 12 | 13 | 73 | 67 | 2 | 2 | 275 | 272 | 547 |
| அரசாங்க நலன்புரி சேவைகள் | 18 | 15 | 2 | 29 | 65 | 7 | 18 | 18 | 10 | 2 | 10 | 194 | 30 | 224 |
| உட்கட்டமைப்பு வசதிகள் | 5 | 21 | 12 | 1 | - | - | 1 | 15 | 24 | - | 9 | 88 | 79 | 167 |
| வாக்குப் பதிவு தொடர்பிலான முறைப்பாடுகள் | - | 4 | - | 2 | - | - | - | 1 | 2 | - | - | 9 | 25 | 34 |
| அரசாங்க தாபனங்களின் செயலின்மைகள் பற்றிய முறைப்பாடுகள் | 6 | 119 | 18 | 136 | 74 | 8 | 48 | 204 | 46 | 52 | 37 | 748 | 644 | 1,392 |
| சிறுவர் உரிமைகள் | - | 2 | - | 3 | 2 | - | 4 | 2 | 2 | - | 1 | 16 | 12 | 28 |
| மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 2 | 2 |
| மொழி உரிமைகள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 3 | 3 |
| புலம்பெயர் ஊழியர்களின் உரிமைகள் | - | 3 | - | 19 | - | - | 3 | 6 | 2 | - | - | 33 | 18 | 51 |
| LGBT உரிமைகள் (பெண் தன்னினச் சேர்க்கையாளர், ஆண் தன்னினச் சேர்க்கையாளர், இரு பால் சேர்க்கையாளர் மற்றும் மாற்றுபாலினத் தவர்) | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 1 | 1 |
| சுகாதாரம் | 1 | 6 | 1 | 5 | 2 | 2 | 6 | 1 | 2 | 1 | - | 27 | 6 | 33 |
| காணி மற்றும் ஆதன உரிமைகள் | 36 | 148 | 52 | 33 | 17 | 30 | 33 | 61 | 103 | 20 | 64 | 597 | 266 | 863 |
| உ.இ.பெ./மீளத் திரும்பும் அகதிகள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| சூழல் | 4 | 1 | - | 8 | 1 | - | 2 | 14 | 17 | 1 | 3 | 51 | 19 | 70 |
| நிருவாக விடயங்கள் | 3 | 23 | - | 1 | - | - | 3 | 29 | 61 | - | - | 120 | 54 | 174 |
| பெண்களின் உரிமைகள் | - | - | - | - | - | - | 1 | - | - | - | - | 1 | - | 1 |
| வயது மூத்தோரின் உரிமைகள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 2 | 2 |
| ஆணையினுள் இல்லாதவை*. ஏற்றுக்கொள்ளப் படாதவை | - | 11 | 31 | - | 24 | - | 4 | 168 | 17 | 17 | 7 | 279 | 1,235 | 1,514 |
| மொத்தம் | **242** | **653** | **273** | **433** | **315** | **93** | **250** | **878** | **650** | **151** | **284** | **4,222** | **4,724** | **8,946** |

மூலம்: இ.ம.உ.ஆ.கு. தரவுத்தளம் 2015 மற்றும் இ.ம.உ.ஆ.கு.இன் பிராந்திய மட்ட வருடாந்த அறிக்கைகள் 2015

* இந்த வகுதியின் கீழ் ஆரம்பத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் பின்னர் தன்னிச்சையாக காணாமல்போனதாகக் கண்டறியப்பட்ட சார்த்துரைக்கப்பட்ட பாதிக்கப்பட்டவர்களாக (உதாரணம்: குடும்பப் பிணக்குகளின், களவிலோடுதலின் காரணங்கள்) அல்லது அரசாங்க அதிகாரவர்க்கத்தின் சம்பந்தம் இருக்கவில்லை என்றவாறு இ.ம.உ.ஆ.கு. ஆணையினுள் இருக்கவில்லை என முடிக்கப்பட்டது.

பிற்சேர்க்கை 2 ஆ -

முறைப்பாடுகளின் வகைக்கும், முறைப்பாட்டு வகுதிக்கும் மற்றும் கூட்டிமொத்தத்தில் அவற்றின் சதவீதங்களுக்கும் ஏற்ப கிடைத்த முறைப்பாடுகளின் தொகுப்பு - 2015

| முறைப்பாட்டின் வகை | முறைப்பாட்டின் வகுதி | பிராந்திய அலுவலகம் மொத்தம் | | தலைமை அலுவலகம் | | கூட்டி மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண். | % | எண். | % | எண். | % |
| தனிப்பட்ட சுதந்திரம் | சித்திரவதை | 102 | 2.53 | 311 | 6.58 | 413 | 4.72 |
| | அச்சுறுத்தல்கள் | 128 | 3.18 | - | - | 128 | 1.46 |
| | உளவியல் தொந்தரவு | 42 | 1.04 | - | - | 42 | 0.48 |
| | பாலியல் தொந்தரவு | - | - | 04 | 0.08 | 04 | 0.04 |
| | தொந்தரவு | 216 | 5.37 | 375 | 7.93 | 591 | 6.75 |
| | கைது.·.தடுத்துவைத்தல் | 241 | 5.99 | 247 | 5.22 | 488 | 5.57 |
| | பாதுகாவல் நிலைமைகள் | - | - | 08 | 0.16 | 08 | 0.09 |
| | பாதுகாவலில் மரணம் | 03 | 0.07 | 04 | 0.08 | 07 | 0.08 |
| | காணாமல்போனோர் | 45 | 1.11 | 13 | 0.27 | 58 | 0.66 |
| | ஆட்கடத்தல் | 02 | 0.04 | 02 | 0.04 | 04 | 0.04 |
| | துப்பாக்கிச்சூடு | - | - | 01 | 0.02 | 01 | 0.01 |
| செயலற்ற முறைப்பாடுகள் | செயலற்ற முறைப்பாடுகள் | 740 | 18.39 | 644 | 13.62 | 1384 | 15.82 |
| தொழில் | தொழில் | 867 | 21.55 | 1084 | 22.94 | 1951 | 22.30 |
| கல்வி | கல்வி | 259 | 6.43 | 272 | 5.75 | 531 | 6.07 |
| சுகாதாரம் | சுகாதாரம் | 25 | 0.62 | 06 | 0.12 | 31 | 0.35 |
| காணி மற்றும் ஆதன உரிமைகள் | காணி மற்றும் ஆதன உரிமைகள் | 606 | 15.06 | 266 | 5.63 | 831 | 9.50 |
| சமூக சேவை மற்றும் அரசாங்க சேமநலன் | சமூக சேவை மற்றும் அரசாங்கச் சேமநலன் | 182 | 4.52 | 30 | 0.63 | 212 | 2.42 |
| உட்கட்டமைப்புப் பயன்பாடுகள் | உட்கட்டமைப்புப் பயன்பாடுகள் | 87 | 2.16 | 79 | 1.67 | 166 | 1.89 |
| சூழல் | சூழல் | 46 | 1.14 | 19 | 0.40 | 65 | 0.74 |
| கருத்துச் சுதந்திரம் | கருத்துச் சுதந்திரம் | 01 | 0.02 | 03 | 0.06 | 04 | 0.04 |
| தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் | தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் | 09 | 0.22 | 25 | 0.52 | 34 | 0.38 |
| சிறுவர் உரிமைகள் | சிறுவர் உரிமைகள் | 16 | 0.39 | 12 | 0.25 | 28 | 0.32 |
| பெண்களின் உரிமைகள் | பெண்களின் உரிமைகள் | 01 | 0.02 | - | - | 01 | 0.01 |
| அங்கவீனர்களின் உரிமைகள் | அங்கவீனர்களின் உரிமைகள் | - | - | 02 | 0.04 | 02 | 0.02 |
| வயது மூத்தோரின் உரிமைகள் | வயது மூத்தோரின் உரிமைகள் | - | - | 02 | 0.04 | 02 | 0.02 |
| மொழி உரிமைகள் | மொழி உரிமைகள் | - | - | 03 | 0.06 | 03 | 0.03 |
| மதத்திற்கான உரிமை | மதத்திற்கான உரிமை | 01 | 0.02 | 04 | 0.08 | 05 | 0.05 |
| புலம்பெயர் ஊழியர்களின் உரிமைகள் | புலம்பெயர் ஊழியர்களின் உரிமைகள் | 30 | 0.74 | 18 | 0.38 | 48 | 0.54 |
| LGBT உரிமைகள் | LGBT உரிமைகள் | - | - | 01 | 0.02 | 01 | 0.01 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| நிருவாக விடயங்கள் | நிருவாக விடயங்கள் | 117 | 2.90 | 54 | 1.14 | 171 | 1.94 |
| ஏனையவை | ஏனையவை | 82 | 2.03 | - | - | 71 | 0.81 |
| மேலும் தகவலுக்கு விசாரணையிலுள்ள முறைப்பாடுகள் | மேலும் தகவலுக்கு விசாரணையிலுள்ள முறைப்பாடுகள் | - | - | 479 | 10.13 | 479 | 5.47 |
| இ.ம.உ..ஆ.கு. ஆணையினுள் இல்லாதவை | | 222 | 5.51 | 756 | 16.00 | 978 | 11.18 |
| கிடைத்த முறைப்பாடு களின் மொத்த எண். | | **4022** | **100.0** | **4724** | **100.0** | **8746** | **100.0** |

பிற்சேர்க்கை 2/இ -

முறைப்பாடுகள் இல: **HRC/4429/09, HRC/1188/10**

01. சிராஸ்தபதி பண்டித
ஆதிபூஜ்ய இனமளுவே ஸ்ரீ
சுமங்கல மகா நாயக்க தேரோ
ரங்கிரி தம்புள்ள ரஜமக விகாரை
சங்க சபா, தம்புள்ள

02. முல்கிரிகல சிலபிரிய மனிந்த சில்
மாதா
சீலவதி ஆரம்ய
பொன்சேகா வீதி, வலப்பல
பாணந்துறை

மனுதாரர்கள்

எதிர்

01. செயலளர்
பௌத்த சாசன அமைச்சு
115, விஜேராம வீதி
கொழும்பு 07

02. ஆணையாளர் நாயகம்
பௌத்த அலுவல்கள் திணைக்களம்
135, சஹதம்பாய
தர்மபால மாவத்தை
கொழும்பு 07

பிரதிவாதிகள்

அறிமுகம்

2015ஆம் ஆண்டில் அகஸ்டின் 05ஆம் நாள் அன்று,

பிக்குனிகளின் அடிப்படை உரிமைகளின் மீறலொன்று பெயரிடப்பட்ட பிரதிவாதிகளினால் இழைக்கப்பட்டு, அவ்வாறாக இலங்கையின் அரசியலமைப்பின் அத்தியாயம் 3இன் உறுப்புரைகள் 12(1) மற்றும் 14 ஆகியவற்றை மீறுவதாகக் குறிப்பிட்டு, சியாம் நிகாயவின் ரங்கிரி தம்புளு பிரிவின்

மகாநாயக்கர் அதி.வண. இனமளுவே ஸ்ரீ சுமங்கல தேரோவினால் 20.10.2009 அன்று முறைப்பாடொன்று (மேற்கோள் இலக்கம் HRC 4429/09) தாக்கல் செய்யப்பட்டது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முல்கிரிகல சிலபிரிய மனிந்த சில் மாதாவினால் தாக்கல் செய்யப்பட்ட இல.**1188/10** கொண்ட முறைப்பாடானது இல.**HRC/4429/09** முறைப்பாட்டின் விடயத்துடன் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டிருந்ததினால், ஒரே நேரத்தில் இரு விண்ணப்பங்களின் விசாரணையை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

மனுதாரர்களின் தகவல்கள்

நான்மடி ஒன்றுகூடுதலின் கருத்துரு மீது பௌத்த மதம் கட்டியெழுப்பப்பட்டுள்ளதுடன், இது பிக்குகள் (சந்நியாசிகள்), பிக்குனிகள் (சந்நியாசினிகள்), உபசகஸ் (பாமரர்கள்) மற்றும் உபாசிகஸ் (பாமரப் பெண்கள்) என புத்தரின் சீடர்களை உள்ளடக்குகின்றது.

ஆக்கிரமிப்பாளர்களுக்கு அனுராதபுரத்தின் வீழ்ச்சியுடன், பிராந்தியத்திற்கான சொத்தொன்றை நிரூபிக்கின்றவாறு, இலங்கையின் வரலாற்றில் பிக்குனி ஒழுங்கு நிலவிய போதும், பிக்குனி ஒழுங்கு தற்காலிகமாக செயல்படாமல் இருந்தது.

பெருமளவு பெண்களை நிலைப்படுத்துவதன் மூலம், பிக்குனி சங்கவை மீட்டுயிர்ப்பதற்காக வண. இனமளுவே சுமங்கல மகாநாயக்க தேரோவினால் ஒழுங்குகள் செய்யப்பட்டன.

நிலைப்படுத்துவதற்கும், பிக்குனிகளின் உரிமைகளையும் மற்றும் சிறப்புரிமைகளையும் அங்கீகரிப்பதற்கும், ஏற்றுக்கொள்வதற்குமான வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக இல. **HRC/4429/09** என்ற விடயத்தில் மனுதாரர் வலியுறுத்துகின்றார்.

பதிவுசெய்யப்பட்டதும், அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மதத் தாபனமொன்றுமான ரங்கிரி தம்புள்ள ரஜமக விகார சங்க சபாயிஸ் என்பதைப் பிரகடனப்படுத்துவதற்கு சத்தியக்கடதாசி ஒன்றை மனுதாரர் முன்வைத்த அதேவேளை, பிக்குவையும், பிக்குனிகளையும் “சங்க” என்ற பதம் உள்ளடக்குகின்றது என விவரிக்கின்றார்.

ஆரம்யாக்கள் பதிவுசெய்யப்படுவதை இழக்கச்செய்வதன் மூலமும், அவர்களது ஆளடையாள அட்டைகளில் பிக்குனி என்ற பதத்தைக் குறிப்பிடுவதற்கு மறுப்பதன் மூலமும் அவர்களது சிவில் மற்றும் மத உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். தீவகத்தில் அண்ணளவாக 2,500 பிக்குனிகளும் மற்றும் சுமார் 450 பிக்குனி ஆரம்யாக்களும் உள்ள போதிலும், பிக்குனிகளின் அத்தகைய உரிமைகளையும், சிறப்புரிமைகளையும் அங்கீகரிக்கின்ற அதேவேளை, பிக்குனிகளின் மத உரிமைகளையும், சிறப்புரிமைகளையும் மறுப்பதில் நீதியின் சட்டங்களுக்கு எதிராக பிரதிவாதிகள் செயற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரங்கிரி தம்புள்ள ரஜமக விகார சங்க சபாவின் கீழ், ஒரு தொகையைக் கொண்ட பிக்குனி ஆரம்யாக்கள் அல்லது துறவிமடங்கள் உள்ளதாகவும், அவற்றின் பதிவுக்கான விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் மேலும் குறிப்பிடுகின்றார்.

இல.**HRC/1188/10** விண்ணப்பத்தின் கீழ், இலங்கையில் பின்பற்றப்படும் தேரவாத பாரம்பரியத்திற்கு தாம் பின்பற்றுகின்ற நடைமுறைகள் சில வேளைகளில் ஒழுகவில்லை எனத் தெரிவித்து பிக்குனிகளினதும், பிக்குனி ஆரம்யவினதும் அங்கீகாரத்திற்கு தனது எதிர்ப்புக்களை முல்கிரிகல சிலபிரிய மனிந்திரசில் மாதா சுட்டிக்காட்டுகின்றார்.

பிரதிவாதிகளின் உண்மைகள்

பௌத்த விவகாரங்களுக்கான ஆணையாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டு, 24 பெப்ரவரி 2010 திகதியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம், பிக்குனிகளைக் குறிப்பிடாத 1931இன் இல.19 பௌத்த காலச்சார்புநிலை கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அவர் செயற்படுவதாகவும், எனவே, சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தில் அத்தகைய நிபந்தனைகள் இல்லாததினால் மனுதாரர்களின் வேண்டுகோள்களுக்கு அவரால் செவிசாய்க்க முடியாதுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதி.வண.மகாநாயக்க தேரோக்களின் உசாவுகைகள் இன்றி இந்த விடயம் தொடர்பில் சுதந்திரமான தீர்மானங்களை தன்னால் எடுக்க முடியாதுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பௌத்த சாசனத்தின் தேரவாத நடைமுறையின் முன்னேற்றத்திற்கும், நிருவாகத்திற்கும் தடையொன்றாக பிக்குனி கட்டளையின் மீள்-தாபிப்பு விளங்கும் என்ற கருத்தினையும் பிரதிவாதிகள் கொண்டுள்ளனர்.

ம.உ.ஆ.கு.இனால் இவை கண்டுகொள்ளப்பட்டவை.

1. இலக்கங்கள; **HRC/4429/09** மற்றும் **HRC/1188/10** ஆகியவற்றைக் கொண்ட இரு விண்ணப்பங்களின் உண்மைகள் ஒன்றுசேர கரிசனைக்கெடுக்கப்பட்டன.

2. **HRC/4429/09**இல், முன்னணிவாய்ந்த துறவிகளினால் பிக்குனி என்ற பதம் குறிப்பிடப்பட்டு, கல்விசார் சான்றுப்பத்திரங்கள் மற்றும் வேறு ஆவணங்கள் போன்ற பெருமளவு ஆவணங்களில் காணப்பட்டுள்ளவாறும், அவை கடந்த காலத்தில் வழங்கப்பட்டு, இந் நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பதமொன்றாக பிக்குனிகளின் நிலை நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் பூஜ்ய இனாமளுவே ஸ்ரீ சுமங்கல தேரோவினால் வெளிப்படையாகக் கொண்டுவரப்பட்டுள்ளது.

3. பிக்குனி கட்டளை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட போதிலும், 1998இல் அல்லது அதற்கு அண்ணளவாக அது தெளிவாக மீட்டுரைக்கப்பட்டுள்ளதுடன், 2,500க்கு மேற்பட்ட பிக்குனிகளும், 450 பிக்குனி ஆரம்யாக்களும், உபசம்பாதவை பெற்றுக்கொண்டதாக நிலைப்படுத்தப்பட்ட 600க்கு மேற்பட்ட பிக்குனிகளும் தற்போது உள்ளனர்.

4. பிக்குனி ஆளடையாள அட்டைகளை வழங்குவதைத் தவிர்க்குமாறு ஆட்கள் பதிவுத் திணைக்களத்திற்கு எழுத்துமூல அறிவுறுத்தல்களைப் பௌத்த விவகாரங்கள்

ஆணையாளர் வழங்கியுள்ளார். மேலும் பிக்குனி ஆரம்யாக்களின் பதிவினையும் அவர் மறுத்துள்ளார்.

5. உண்மையில் 31 முக்கோண வழி சமூகங்களையும், 31 மகாநாயக்க தேரோக்களையும் இலங்கை கொண்டுள்ளது. தேசிய முக்கியத்துவத்தைக் கொண்ட இப் பிணக்கினை இணக்குவதற்கு, நான்கு மகாநாயக்க தேரோக்களை மட்டுமே பிரதிவாதிகள் ஆலோசனைக்காக நாடியுள்ளனர்.

6. பெருமளவு எதிர்ப்புகளுக்கு மத்தியில் பிக்குனிகளின் நிலைப்படுதலுக்கான அவசியம் நீண்ட காலப் போராட்டமொன்றாகும்.

7. இல.**HRC/1188/10** முறைப்பாட்டின் பிரகாரம், பிக்குனி சங்கவின் ஏற்றுக்கொள்ளலை நாடுகின்றவர்கள், பிக்குனிகளாக அவர்களும் நிலைப்படுத்தப்பட முடியும் என்றும், பெண் ஒருவருக்கான சாத்தியமான மதத்தின் ஆகக்கூடுதலான நிலைபெற முடியும் என்றும் அறிவித்துள்ள போதிலும், பிக்குனி சமூகம் தொடருவதில் சில் மாதாக்கள் சாதகமாக விளங்கவில்லை.

8. பிக்குனிகளினதும், சில் மாதாக்களினதும் தொடர்பில் தீர்மானமொன்றை எடுப்பதில் பிரதிவாதிகளுடன் பணியாற்றுவதற்கு ஒரு பொருத்தமான மதச் சபையின்.:.குழுவின் நியமனத்திற்கான அவசியமொன்று எழுந்துள்ளது.

9. மனுதாரரின் விண்ணப்பத்தை இரத்துச் செய்யுமாறு ம.உ.ஆ.கு.க்கு எழுத்துமூல அறிக்கையொன்றை அஸ்கிரிய மகாநாயக்கர், மல்வத்து மகாநாயக்கர், ராமனய மகா நிகாய மகாநாயக்கர் ஆகியோர் விடுத்துள்ளனர். இலங்கை தேரவாதப் பாரம்பரியத்தைக் கொண்ட நாடு என்றும், பிக்குனி சங்கவின் மீள்-அறிமுகம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும் அவர்கள் கருத்தினைக் கொண்டிருந்தனர். மேலதிகமாக, தேசிய அக்கறையின் காரணமாக, தேரவாதப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கு அரசாங்கத் தலைவர்கள் கட்டுப்பட்டுள்ளனர்.

10. இந்நாட்டின் அரசாங்க மதமாக சகல தலைவர்களினாலும் பௌத்த மதம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பாதுகாக்கப்படுகின்றது. எனவே, பிக்குனி சங்க தொடர்பில் விடயங்களைத் தீர்மானிப்பதில் ஒரு பொருத்தமான பொறிமுறை இருக்க வேண்டும்.

11. வரலாறு முழுவதும் பெண்கள் நிலைப்படுத்தப்பட்டு, சாத்தியமான விதத்தில் மிக உயர்வான மத நிலையை அடைந்துள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

12. பிரதிவாதிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள 2002இன் பௌத்த சாசனத்தின் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையொன்று சில் மாதாக்கள் தொடர்பில் ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது. எனினும், பிக்குனிகள் தொடர்பில் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை பற்றி இந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

13. பெண்களினதும், மதத்தினதும் அடிப்படை உரிமைகளை வழங்குகின்ற இலங்கையின் 1978 அரசியலமைப்பில் உள்ள உறுப்புரைகளையும் அத்துடன் உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தையும் கரிசனைக்கு எடுத்து, இவ் விடயம் பரிசீலிக்கப்படும் என இரு தரப்புகளுக்கும் அறிவிக்கப்பட்டது.

ம.உ.ஆ.கு.இன் அவதானிப்புகள்

1. 1978 அரசியலமைப்பின் உறுப்புரை 9, அத்தியாயம் II மற்றும் 1931இன் பௌத்த காலநிலைசார்புநிலைக் கட்டளைச்சட்டம் இல.19 ஆகியவற்றின் பிரகாரம், பௌத்த சாசனத்தைப் பாதுகாப்பதற்கும், பேணுவதற்கும் சகலரும் சமவளவில் கட்டுப்பட்டவர்களாவர்.

2. மேலும், அரசியலமைப்பின் உறுப்புரை 10இன் பிரகாரம், ஒருவரின் விருப்புக்கேற்ப மதமொன்றை அல்லது நம்பிக்கையொன்றை ஏற்றுக்கொள்வதற்கான சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

3. மேலதிகமாக, சட்டத்தின் முன் சகலரும் சமம் என்றும், ஒருவரின் பால்நிலைக்கு எதிராக ஒருவர் மீது பாரபட்சம் காட்டப்படாது என்றும் உறுப்புரைகள் 12(1) மற்றும் 12(2) ஆகியன உத்தரவாதமளிக்கின்றன.

4. வணங்குவதில், அனுஷ்டிப்பதில், நடைமுறையில் அல்லது கற்பித்தலில் தனது மதத்தை அல்லது நம்பிக்கையை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தைச் சகலரும் கொண்டுள்ளனர் என அரசியலமைப்பின் உறுப்புரை 14(உ) மேலும் குறிப்பிடுகின்றது.

5. இப் பிணக்கினை இணக்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதில், அரசியலமைப்பின் இந்த உறுப்புரைகளைக் கவனத்திற்கெடுப்பதற்கான கடப்பாடொன்றைப் பிரதிவாதிகள் கொண்டுள்ளனர் என ம.உ.ஆ.கு. குறித்துக்கொள்கின்றது.

6. இலங்கையின் பெண்கள் பட்டயத்தின் பிரிவு 14 பின்வருமாறு குறிப்பிடுகின்றது: “ஒன்றில் பால்நிலைத்தன்மையின் அல்லது ஆண்களுக்கும், பெண்களுக்கும் மாறாத்தன்மையிலான வகையைக் கொண்ட வகிபங்குகளின் தாழ்வுமனப்பான்மையின் அல்லது மேலாண்மைதன்மையின் கருத்தின் மீதான அடிப்படையாக விளங்குகின்ற தப்பெண்ணங்களையும், வழக்கங்களையும் மற்றும் சகல வேறு நடைமுறைகளையும் ஒழிப்பதைச் சாதிக்கும் கருத்தொன்றுடன், சமூக மற்றும் கலாசார உளப்பாங்குகளை முன்னேற்றுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும்.”

7. தேசியச் சட்டங்களும், நிருவாக நடைமுறைகளும் சர்வதேச மனித உரிமைகள் மாதிரிகளுக்கும், தரங்களுக்கும் அமைய விளங்குவதை உறுதிப்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு பரிந்துரைகளைச்

செய்வதே அதன் பணிகளில் ஒன்றாகும் என 1996இன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரிவு 10(உ), இல.21 குறிப்பிடுகின்றது.

8. பெண்களுக்கு எதிரான பாரபட்சத்தின் சகல வடிவங்களையும் ஒழிப்பது மீதான சமவாயம் உட்பட இலங்கையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பெருமளவு ஐக்கிய நாடுகள் சமவாயத்தை பொறுப்புக்கு எடுத்து, அதன் பரிந்துரைகளை ம.உ.ஆ.கு. பதிவுசெய்கின்றது.

பரிந்துரைகள்

1. ரங்கிரி தம்புள்ள ரஜமக விகாரை சங்க சபாவின் விண்ணப்பத்தின் விடயம் தொடர்பில் தோதான நடவடிக்கைகளை எடுக்காமல் அல்லது தோதான பொறிமுறையொன்றைப் பின்பற்றாமல் அத்துடன் உடன்பாடொன்றிலான இணக்கத்தை அடைவதில் ஆழமான கலந்துரையாடலொன்றுக்காக ஒன்றில் குழுவொன்றின் அல்லது சபையொன்றின் அமைப்பில் மரியாதைக்குரியதும், தொடர்பானதும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்டதுமான ஆளணியினரின் பங்கெடுப்பின்றி அதை முழுவதுமாக நிராகரிப்பதனால், இலங்கையின் அரசியலமைப்பின் உறுப்புரைகள் 12 (1 மற்றும் 2) அத்துடன் 14 ஆகியவற்றைப் பிரதிவாதிகள் மீறியுள்ளனர்.

2. அரசியலமைப்பின் உறுப்புரை 9இல் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள விடயத்தை, அதாவது பௌத்த சாசனத்தின் பாதுகாப்பினையும், பேணலையும் அமுல்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு, பிரதிவாதிகளுக்கு ஆலோசனை கூறப்படுகின்றது.

3. இலங்கையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாட்டின் சட்டங்களினதும், சர்வதேசச் சமவாயங்களினதும் மீறல்களில் சில செயற்பாடுகள் விளைந்துள்ளன என்பதை அவதானிக்க முடிகின்ற அதேவேளை, கலந்துரையாடலின் ஊடாக தீர்த்து வைக்கப்படுவதற்கு அவசியமாகவுள்ள இந் நாட்டின் மத அலுவல்களில் ஏதேனும் நேரடியிலான தலையீட்டினைக் கொண்டிருப்பதில்லை என ம.உ.ஆ.கு. தீர்மானிக்கின்றது.

| | |
|---|---|
| தலைவர் | ஆணையாளர் |
| இ.ம.உ.ஆ.கு. | இ.ம.உ.ஆ.கு. |

பிற்சேர்க்கை 2ஈ -

முறைப்பாடு இல. **HRC/630/15/1-14**

எ.கே.டி.சி.சுபாஷினி,
9/1, கோமஸ் பாதை,
பம்பலப்பிட்டி,
கொழும்பு 05.
முறைப்பாட்டளர்

எதிர்

அதிபர்,
விசாகா வித்தியாலய,
வஜிரா வீதி,
கொழும்பு 05.
பிரதிவாதி

தனது பிள்ளையான டபிள்யு.பிரசன்ன லக்மினி மாற்றுத்திறனாளிச் சிறுமி ஒருவர் என்பதுடன், விசாகா வித்தியாலயத்தில் தரம் 8இல் கற்கின்றார் எனத் தெரிவித்து 23 பெப்ரவரி 2015 அன்று இ.ம.உ.ஆ.கு. முன்னிலையில் இந்த முறைப்பாட்டினை மேற்படி முறைப்பாட்டாளர் செய்தார்.

அதன் உடல்ரீதியிலான நிலைமையின் காரணமாக சிறுமியினால் படிக்கட்டுக்களில் ஏற முடியாதிருப்பதாக அவர் குறிப்பிட்டிருந்தார். தரம் 8இன் வகுப்பறைக் கட்டிடமொன்றில் 3ஆவது தளத்தில் இருந்ததுடன், இதை அடைவதற்கு அதிகளவு கஷ்டத்தை சிறுமி கண்டறிந்தது. சிறுமி துரிதகதியில் வளர்ந்ததினாலும், காவுவதற்கு அதிகளவு பாரத்தைக் கொண்டிருந்ததினாலும் அவரை 3ஆவது தளத்திற்கு தாயினால் காவிச்செல்ல முடியவில்லை.

பெருமளவு தருணங்களில் பாடசாலை அதிபருடன் இப் பிரச்சனையை அவர் எழுப்பினார் எனவும், ஆனால் தனது கல்வியை சிறுமி தொடர்வதை வசதிப்படுத்துவதற்காக நிலமட்டத் தளத்தின் மீது வகுப்பறையொன்றை ஒழுங்குசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் மீது 21 ஏப்ரல் 2015 அன்று விசாரணையொன்றை ஆணைக்குழு நடத்தியது.

விசாரணையில் அதே பிரச்சனையை முறைப்பாட்டாளர் மீண்டும் எழுப்பினார்.

பிரதிவாதியினால் இவ்வகையைக் கொண்ட செயலின்மையானது குறிப்பிட்ட சிறுமியின் கல்விக்கான உரிமையின் வெளிப்படையான மீறலொன்று என ஆணைக்குழு கண்டறிந்ததுடன், வகுப்பில் சிறுமி பங்கெடுக்கக்கூடியதாகவும், பிரச்சனையொன்று இன்றி தனது கல்வியை தொடரக்கூடியதாகவும் நிலத்தடி தளம் மீது தரம் 8 வகுப்பறையொன்றை ஒழுங்குசெய்யுமாறு பிரதிவாதிக்கு பணித்தது.

ஆணைக்குழுவின் பணிப்புரையின் பேரில், சிறுமிக்கு நிவாரணத்தை வழங்குவதற்கு பிரதிவாதி ஒழுங்குகளைச் செய்துள்ளதாகவும், தற்போது சிறுமி பாடசாலைக்குச் செல்வதாகவும், தனது கல்வியைத் தொடருவதாகவும் என்ற புரிந்துணர்வுக்கு ஆணைக்குழு வந்துள்ளது.

பிற்சேர்க்கை 2உ -

29 ஒக்ரோபர் 2015 அன்று பொலிஸ் படையினால் கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா **(HNDA)** மாணவர்களின் தாக்குதல் மீது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

01. "ஜாதிக பலய"
(தேசிய சக்தி தாபனம்)
47/A, முதலாவது ஒழுங்கை
ராவத்தவத்த
மொறட்டுவ

02. லாஹிரு வீரசேகர மற்றும் ஏனையோர்
கொத்மலை வீதி
மாவத்துற
கம்பளை

மனுதாரர்கள்

எதிர்

01. பொலிஸ் மா அதிபர்
பொலிஸ் தலைமை அலுவலகம்
கொழும்பு 01

02. பூஜித ஜயசுந்தர
சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர்
(மேல் மாகாணத்திற்கு பொறுப்பு)
பொலிஸ் தலைமை அலுவலகம்
கொழும்பு 01

03. காமினி மதுரட்ட
பிரதிப் பொலிஸ் மாஅதிபர்
(கொழும்புக்கு பொறுப்பு)
இல. 331,
ஒல்கொட் மாவத்தை
கொழும்பு 01

04. சம்பிக சிறிவர்தன
சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்
(மத்தி),
பொலிஸ் தலைமை அலுவலகம
கொழும்பு 01

05. பாலித பணமல்தெனிய
    பொலிஸ் தலைமை அலுவலகம்
    கொழும்பு 01.

06. பொறுப்பதிகாரி
    பொலிஸ் நிலையம்இ
    புறக்கோடடை

07. பொறுப்பதிகாரி
    பொலிஸ் நிலையம்இ
    கோட்டை

08. பொறுப்பதிகாரி
    பொலிஸ் நிலையம்இ
    மருதானை

09. பொறுப்பதிகாரி
    பொலிஸ் நிலையம்இ
    தெமட்டகொடை

10. பொறுப்பதிகாரி
    பொலிஸ் நிலையம்இ
    பொரளை

11. பொறுப்பதிகாரி
    பொலிஸ் நிலையம்இ
    கறுவாத்தோட்டம்

12. செயலாளர்
    செயலாளர்
    உயர் கல்வி, நெடுஞ்சாலைகள்
    அமைச்சு
    வோர்ட் பிளேஸ்
    கொழும்பு 07

பிரதிவாதிகள்

4 டிசம்பர் 2015 அன்று,

HNDA மாணவர்கள் உருவாக்கிய வேலைநிறுத்தம் மற்றும் பொலிஸ் திணைக்களத்தினால் HNDA மாணவர்கள் மீதான தாக்குதல் ஆகியன தொடர்பில் தன்னிச்சையான நடவடிக்கையை எடுப்பதன் மூலம், 1996இன் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் பிரிவு 14, இல.21இனால் அதில் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களை மனித உரிமைகள் ஆணைக்குழு நிறைவேற்றியது. இதனிடையே **HRC/3824/15** என்ற முறைப்பாட்டு இலக்கத்தின் கீழ் "ஜாதிக பலய"வும் (தேசிய சக்தி தாபனம்) மற்றும் **HRC/3827/15** என்ற முறைப்பாட்டு இலக்கத்தின் கீழ் HNDA மாணவர்களும் முறைப்பாடொன்றைத் தாக்கல் செய்தனர்.

ம.உ.ஆ.கு.இனால் விசாரணைகள் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து, 03.11.2015 முதல் 05.11.2015 வரையிலான திகதிகளுக்கு இடையில் இந்த முறைப்பாடு தொடர்பான தரப்புக்கள் முன்னிலைப்படுத்தப்படவிருந்தனர். இப்பிரச்சனை தொடர்பில் பிரதிவாதிகளினால் வழங்கப்பட்ட எழுத்துமூலச் சமர்ப்பணங்களை ம.உ.ஆ.கு. ஏற்றுக்கொண்டது.

சகல தரப்புக்களின் எழுத்துமூலச் சமர்ப்பணங்கள், ஊடக அறிக்கைகள், மருத்துவகூட அறிக்கைகள், தரப்புக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட காணொளி நறுக்குகள், சட்டவிரோத ஒன்றுகூடலைக் கலைப்பது தொடர்பிலான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் சர்வதேசச் சமவாயங்கள் ஆகிய சகலவையும், இந்த அறிக்கையைத் தயாரிப்பதில் ம.உ.ஆ.கு.இனால் கரிசனைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

1. 1ஆவது மனுதாரரின் உண்மைகள்

இப்பிரச்சனை தொடர்பில் எழுத்துமூலத்திலானதும், வாய்மொழியிலானதுமான முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன, அதனால் நிவாரணமாக சார்த்துரைக்கப்பட்ட தன்னிச்சையிலான கொடூரமான தாக்குதலுக்கு பொறுப்பான பொலிஸ் அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை அவர்கள் கோரியுள்ளனர் (மூல அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிற்சேர்க்கை 1). சகல தரப்புக்களை வரவழைப்பதன் மூலம், 05.11.2015 அன்று நடத்தப்பட்ட விசாரணைகளின்படி, கண்ணீர் புகைக்குண்டின் அல்லது நீர் பீச்சியடித்தலின் பயன்பாடு மறுக்கப்படவில்லை, எனினும் பொலிஸ் அலுவலர்களினால் இழைக்கப்பட்ட தன்னிச்சையிலான செயற்பாடுகளுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என 1ஆவது கோரலின் மனுதாரர் தெரிவிக்கின்றார்.

2. 2ஆவது மனுதாரரின் உண்மைகள் (மாணவர்கள்)

தமது மனக்குறைகள் தொடர்பில் கல்வி அமைச்சருடன் நேரடியான கலந்துரையாடலொன்றைக் கொண்டிருக்கும் யோசனையுடன், உயர் கல்வி அமைச்சை நோக்கி கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து அமைதியான பேரணியென்றை சுமார் 1,500 HNDA மாணவர்கள் ஆரம்பித்தனர். அவர்களது பேரணி முன்னோக்கிச் செல்வதைத் தடுப்பதற்காக பொலிஸாரினால் இடப்பட்ட பாதுகாப்பு தடையரண்களையும், வீதித் தடைகளையும் அவர்கள் எதிர்நோக்கினர். தமது நோக்கத்தினைப் பொலிஸ் அலுவலர்களுக்கு அறிவித்ததைத் தொடர்ந்து, அமைச்சரைச் சந்திப்பதை எதிர்பார்த்து, அவர்கள் அந்த முனையில் அமைதியாக ஒன்றுகூடுவதைத் தொடர்ந்தனர்.

அங்கு வந்திறங்கிய பொலிஸ் அலுவலர்களைக் கொண்ட இன்னொரு குழு கூட்டத்தைக் கலைப்பதை ஆரம்பித்தது. அடுத்து அமைச்சரை மாணவர்களினால் சந்திக்க முடியாதென்றும், இடத்தை விட்டு வெளியேறுவதற்கு மாணவர்கள் மறுத்தால் பலம் பயன்படுத்தப்படுமென்றும் பொலிசார் அறிவித்தனர். அமைச்சரைச் சந்திப்பது குறித்து மாணவர்கள் வற்புறுத்திய போது, அறிவித்தலின்றி கண்ணீர் புகைக்குண்டுக்கும், நீர் பீச்சியடித்தலுக்கும் அவர்கள் உட்பட்டனர். வாயுவின் வெளியேற்றத்தின் காரணமாக, தமது கண்களை மாணவர்கள் கழுவிக் கொண்டிருந்த நேரத்தில், உருட்டுக்கட்டைகளால் அவர்களைச் சுமார் 200 பொலிசார் தாக்குவதற்கு ஆரம்பித்தனர். சில மாணவர்கள் தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டனர். அண்ணளவாக 30 மாணவர்கள் பாரதூரமாகத் தாக்கப்பட்டனர். பிணை மீது விடுவிக்கப்படுவதற்கு முன்னதாக, அண்ணளவாக 39 மாணவர்கள் சட்டவிரோதமாகக் கைது செய்யப்பட்டனர்.

மாணவர்கள் மீதான கொடூரமான தாக்குதல் மற்றும் தன்னிச்சையிலான கைதுகள், சிவில் போராட்டங்களைக் கட்டுப்படுத்தல், கருத்துச் சுதந்திரத்தையும், அமைதியான ஒன்று கூடுதலையும் பொலிஸ் படைகளினால் கட்டுப்படுத்தல் ஆகியன அரசியலமைப்பினால் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளின் மீறலக்கு இட்டுச்சென்றுள்ளது (மூல அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிற்சேர்க்கை 2).

முன்கூட்டியே சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்திப்பதற்கு ஒன்றில் முன்கூட்டிய நேர ஒதுக்கீடு அல்லது அங்கீகாரம் பெறப்படவில்லை என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது (மூல அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிற்சேர்க்கை 3).

3. மனுதாரர்களின் முறைப்பாட்டுக்கு ஆதரவளிக்கும் ஒத்துணர்விலான சாட்சியம்

3.1 சட்ட மருத்துவ அறிக்கைகள் [Medico Legal Reports (MLR)]

தாக்குதலின் விளைவொன்றாக, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மாணவர்கள் மீதான சட்ட மருத்துவ அதிகாரியின் மருத்துவ அறிக்கைகள் ம.உ.ஆ.கு.இனால் கோரப்பட்டிருந்தது, நோயாளர்களின் சுருக்கமான வரலாறு மீதான அறிக்கையின் சாராம்சமொன்று ம.உ.ஆ.கு.க்குச் சமர்ப்பிக்கப்பட்டது (மூல ஆவணத்தின் பிற்சேர்க்கை 4)

சுருக்க விசாரணையொன்றாக MLRஇல் பின்வருவோர் உள்ளடக்கப்பட்டிருந்தனர்:

3.1.1 ஜீவ ரூபசிங்க (MLF இல.: 48/15)

நோயாளியினால் வழங்கப்பட்ட குறுகிய வரலாறு

பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவின் முன்புறமாகப் போராடிய வேளையில், 29.10.2015 அன்று பிற்பகல் 2.30 மணியளவில் அவர் தற்செயலாக கீழே நிலத்தின் மீது விழுந்தார்.

காயத்தின் தன்மை, அளவு, உருவம், மனச்சார்பு மற்றும் காயத்தின் இடம்:

1. வலது தோள் மூட்டின் முனைக்கு மேலாக 3 ஓ 3 செ.மீ. அளவிலான ஊமைக்காயம்.
2. இடது முழங்காலுக்கு கீழே இடது காலின் முன்புறத்தில் உருவத்தில் 3 ஓ 2 செ.மீ. நீளவட்ட அளவிலான சிராய்ப்புக்காயம். எக்ஸ்-கதிர் இல. 85271இன் பிரகாரம், கீழ்ப்புற எலும்பில் முறிவு இல்லை.

3.1.2 சந்துனி சந்திரசிறி (MLF இல. : 31/15)

நோயாளியினால் வழங்கப்பட்ட குறுகிய வரலாறு:

29.10.2015 அன்று பிற்பகல் 3.30 மணியளவில், பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவின் முன்புறமாகப் போராட்டம் நடத்திய வேளையில், வாயுவின் வெளியேற்றத்தின் காரணமாக மயக்கமடையும் தாக்குதலையும், சுவாசிப்பதில் கஷ்டத்தையும் அவர் அனுபவித்தார்.

காயத்தின் தன்மை, அளவு, உருவம், மனச்சார்பு மற்றும் காயத்தின் இடம்:

வெளிப்புறக் காயங்கள் இல்லை.

தீவிரமான தொண்டை வீக்கத்தின் காரணமாக தொண்டையில் செந்நிறத்தன்மை உள்ளது.

3.1.3 பாத்திமா ஹனினா ஹுசேயின் (MLF இல. : 32/15)

நோயாளியினால் வழங்கப்பட்ட குறுகிய வரலாறு:

29.10.2015 அன்று பிற்பகல் 3.40 மணியளவில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்புறமாக போராட்டம் நடத்திய வேளையில், பொலிஸ் உருட்டுக்கட்டையினால் பொலிஸ் அலுவலரினால் அவர் தாக்கப்பட்டார்.

காயத்தின் தன்மை, அளவு, உருவம், மனச்சார்பு மற்றும் காயத்தின் இடம்:

1. வலது மண்டைப்பக்க எலும்புப் பகுதிக்கு மேலாக, தலையின் பின்புறத்தில் மண்டையோட்டில் ஊமைக்காயம்.
2. வலது தோள் மூட்டின் பின்புறத்தின் மேலாக இடப்பட்டுள்ள உருவத்தில் 3 x 2 செ.மீ. அளவிலான நீள்வட்டத்திலான ஊமைக்காயம். எக்ஸ்-கதிர் இல. 85219இன் பிரகாரம், கீழ்ப்புற எலும்பில் முறிவு இல்லை.

3.1.4 சாஷினி சந்தீபானி குமாரசிறி (MLF இல. : 33/15)

நோயாளியினால் வழங்கப்பட்ட குறுகிய வரலாறு:

29.10.2015 அன்று பிற்பகல் 3.00 மணியளவில், பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவின் முன்புறமாகப் போராட்டம் நடத்திய வேளையில், அவரது தலைக்கு மேலாகவும், நெஞ்சின் பின்புறத்திலும் பொலிஸ் உருட்டுக்கட்டையினால் பொலிஸ் அலுவலர்களினால் அவர் தாக்கப்பட்டார். தலையின் பின்புறத்தில் இடைக்கிடை வலியினை அவர் கொண்டிருந்தபடியினால், வைத்தியசாலையிலிருந்து விடுவிக்கப்பட்டு, 01.11.2015 அன்று மீளவும் அனுமதிக்கப்பட்டார்.

காயத்தின் தன்மை, அளவு, உருவம், மனச்சார்பு மற்றும் காயத்தின் இடம்:

1. இடதுபுறம் மீதான தலையின் பின்புறத்தில் இடது சுவருக்குரிய மேல்நிலைக்கு மேலாக மண்டையோட்டில் ஊமைக்காயம். மீள்-அனுமதிக்கப்பட்ட பின்னர், மூளை மீதான CT 'ஸ்கான்' மேற்கொள்ளப்பட்டதுடன், இல.6694 CT 'ஸ்கான்' அறிக்கையின் பிரகாரம், கீழ்ப்புற மண்டையோட்டில் முறிவு இருக்கவில்லை என்பதுடன், வெடிப்பிலான குழியினுள் குருதிப்பெருக்கின் சான்றும் இருக்கவில்லை.

2. நீளம் முழுவதும் இரு ஊமைக்காயங்களுக்கு இடையில் 2 x1.5 செ.மீ. மற்றும் 1 செ.மீ. இடையிலான அளவில் வலது தோள்பட்டை எலும்புக்கு மேலாக நெடுங்குத்தாக நீள்வரிசையிலான ஊமைக்காயம் உள்ளது. எக்ஸ்-கதிர் இல. 85226இன் பிரகாரம், கீழ்ப்புற எலும்பில் முறிவு இல்லை.

3. காயம் இல.(2)க்கு சற்று மேற்புறமாக, வலது தோள்பட்டைக்கு மேலாக உருவத்தில் 2 x 1 செ.மீ. அளவைக் கொண்ட நீளவட்டத்திலான ஊமைக்காயம்.

3.1.5 புத்திக உக்வத்த (MLF இல. : 44/15)

நோயாளியினால் வழங்கப்பட்ட குறுகிய வரலாறு:

29.10.2015 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்புறமாகப் போராட்டம் நடத்திய வேளையில், அவர் பொலிஸ் உருட்டுக்கட்டையினால் பொலிஸ் அலுவலரினால் தாக்கப்பட்டதுடன், அவர் கீழே நிலத்தில் விழுந்தார். வாயுவின் வெளியேற்றத்தில் அவர் தொண்டை வலியை அனுபவித்தார்.

காயத்தின் தன்மை, அளவு, உருவம், மனச்சார்பு மற்றும் காயத்தின் இடம்:

1. மணிக்கட்டு மூட்டுக்கு சற்றே தொலைவில், வலது கையின் புறப்பக்க முதுகுப்பக்க (பின்புறம்) அம்சத்தின் மேலாக 0.5 X 0.5 செ.மீ. அளவைக் கொண்ட சிராய்ப்புக் காயம்.
2. வலது தோள் மூட்டின் நுனிக்கு மேலாக நொய்மை எக்ஸ்-கதிர் இல.85263இன் பிரகாரம், முறிவைக் கீழ்ப்புற எலும்பு கொண்டிருக்கவில்லை.
3. நாரிப் பகுதியின் மையப்பகுதிக்கு மேலாக நொய்மை.
4. தீவிரமான தொண்டை அழற்சியின் காரணமாக தொண்டையில் செந்நிறத்தன்மை உள்ளது.

3.1.6 ஆயிஷ் ரத்நாயக்க (MLF இல.: 36/15 )

நோயாளியினால் வழங்கப்பட்ட குறுகிய வரலாறு:

தாக்குதலின் வரலாறு:

29.10.2015 அன்று, பிற்பகல் 4.00 மணியிலிருந்து 4.30 மணி வரையில் பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவின் முன்புறமாக பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தில் உருட்டுக்கட்டைகளினால் பெருமளவு பொலிஸ் அலுவலர்களினால் அவர் தாக்கப்பட்டார்.

காயத்தின் தன்மை, அளவு, உருவம், மனச்சார்பு மற்றும் காயத்தின் இடம்:

1. தலையின் வலது பக்கத்தின் மீது 5 செ.மீ. நீளமான சிராய்ப்பிலான காயம்
2. நெற்றியின் இடது புறத்தின் மீது 1 செ.மீ. x 1 செ.மீ. நீளமான சிராய்ப்பு
3. வலது பக்கத்தின் கால் விரலின் மீது 1.5 செ.மீ. x 0.5 செ.மீ. நீளமான சிராய்ப்பு

3.1.7 சுபுன் ஈஷான் (MLF இல. : 35/15)

நோயாளியினால் வழங்கப்பட்ட குறுகிய வரலாறு:

தாக்குதலின் வரலாறு:

29.10.2015 அன்று, பிற்பகல் 4.00 மணியிலிருந்து 4.30 மணி வரையில் பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவின் முன்புறமாக பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தில் உருட்டுக்கட்டைகளினால் பெருமளவு பொலிஸ் அலுவலர்களினால் அவர் தாக்கப்பட்டார்.

காயத்தின் தன்மை, அளவு, உருவம், மனச்சார்பு மற்றும் காயத்தின் இடம்:

வலது முழங்கைக்கு கீழ் வலது முன்னங்கையின் பின் புறத்தில் 4 செ.மீ. நீளமான சிராய்ப்புக் காயம்

3.1.8 லசிதா பிரதீப் அத்துகோரள (MLF இல.: 46/15)

நோயாளியினால் வழங்கப்பட்ட குறுகிய வரலாறு:

தாக்குதலின் வரலாறு:

29.10.2015 அன்று, பிற்பகல் 4.00 மணியிலிருந்து 4.30 மணி வரையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்புறமாக, பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தில் உருட்டுக்கட்டைகளால் பெருமளவு பொலிஸ் அலுவலர்களினால் அவர் தாக்கப்பட்டார்.

காயத்தின் தன்மை, அளவு, உருவம், மனச்சார்பு மற்றும் காயத்தின் இடம்:

1. வலது முன்னங்கையின் பின்புறத்தின் மீது 3.5 செ.மீ. நீளமான சிராய்ப்புக் காயம்
2. வலது கையின் பின்புறத்தின் மீது 1 செ.மீ. x 2 செ.மீ. பரப்பிலான சிராய்ப்பு
3. முழங்கால் மூட்டுக்களில் ஊமைக்காயங்கள்

3.1.9 ஜெமிலுகா நிலுகா நயனா (MLF இல. : 45/15 )

நோயாளியினால் வழங்கப்பட்ட குறுகிய வரலாறு:

29.10.2015 அன்று, பிற்பகல் 3.00 மணியளவில் பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவின் முன்புறமாகப் போராட்டம் நடத்திய வேளையில், அவர் பொலிஸ் அலுவலரினால் தாக்கப்பட்டதுடன், அதைத் தொடர்ந்து அவர் கீழே நிலத்தில் விழுந்தார்.

காயத்தின் தன்மை, அளவு, உருவம், மனச்சார்பு மற்றும் காயத்தின் இடம்:

1. வலது மணிக்கட்டுப் பொருத்தின நீட்டித்தசையின் மேற்பரப்பு மீது நீள்வட்ட உருவத்தில் 0.5 x 0.5 செ.மீ. அளவிலான சிராய்ப்பு.
2. இடது மணிக்கட்டு பொருத்துக்கு சற்று தொலைவில் இடது உள்ளங்கையின் அம்சத்தின் உட்புற உருவத்தில் 0.5 x 0.5 செ.மீ. அளவிலான நீள்வட்ட சிராய்ப்பு, எக்ஸ்-ரே இல. - 85270இன் பிரகாரம், கீழேயுள்ள எலும்பில் முறிவில்லை.
3. 12 நொவம்பர் 2015 அன்று சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களின் பட்டியலில் உள்ள 10 மாணவர்களில் 9 மாணவர்களின் மருத்துவச் சட்ட அறிக்கைகள் மட்டுமே கிடைத்துள்ளதாகப் பொலிஸ் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியினால் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டது. 10 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர் என அது குறிப்பிடுகின்ற போதிலும், 10ஆவது மாணவராக சித வாடியசூரிய என அறியப்பட்ட மாணவர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவில்லை (பிற்சேர்க்கை 5).

3.2 செய்திப்பத்திரிகை அறிக்கைள்

30 ஒக்ரோபர் 2015இலிருந்து 02 நொவம்பர் 2015 வரையில் திகதியிடப்பட்ட *''லக்பிம''இ ''லங்காதீப''இ ''திவயின''* மற்றும் *''த ஐலண்ட்''* ஆகிய செய்திப்பத்திரிகைகளிலிருந்து இந்தச் சம்பவம் தொடர்பில் கட்டுரைகளை ஆணைக்குழு பெற்றதுடன், இவை மாணவர்கள் மீதான தாக்குதலின் புகைப்படங்களையும் உள்ளடக்கியிருந்தன (பிற்சேர்க்கை 6).

3.3 புகைப்படங்கள் மற்றும் காணொளிகள்

பொலிஸ் படையினால் உருட்டுக்கட்டைகளினால் மாணவர்கள் மீதான தாக்குதலைக் காட்டும் புகைப்படங்களும், காணொளிகளும் ம.உ.ஆ.கு.க்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலதிகமாக, பிரதிவாதிகளினால் ஆணைக்குழுவுக்கு இரு காணொளிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன (பிற்சேர்க்கை 7, மூலத்திலான ஆவணம்).

4. பிரதிவாதிகளின் தகவல்கள்

4.1 இப்பிரச்சனை தொடர்பில், பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர, கொழும்பில் உள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி மதுரட்ட, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பாலித சிறிவர்தன மற்றும் முன்னாள் பேச்சாளர் (தற்போது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்) அஜித் ரோஹண ஆகியோரினால் வாய்மொழியிலான சாட்சியம் 05.11.2015இல் வழங்கப்பட்டுள்ளது.

4.1.1 பொலிஸ் கட்டளைச்சட்டம், தண்டனைச் சட்டக்கோவை மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை ஆகியவற்றின் தொடர்பான பிரிவுகளைக் குறிப்பிட்டு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பின்வருமாறு தெரிவித்திருந்தார்:

- நாட்டில் குற்றங்களையும், குற்றச் செயல்களையும் மற்றும் பொதுவான தொந்தரவுகளையும் தடுப்பதற்கு, பொலிஸ் அலுவலர்களின் கடமையை பொலிஸ் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 56 அங்கீகரிக்கின்றது. மேலும், அமைதியைப் பேணுவது குறித்து பொலிஸின் கடமை தொடர்பான பிரிவு 56(ஆ) குறிப்பிடுகின்றது.

- பொது இடங்களில் ஏதேனும் பேரணி குறித்து நிகழ்வுக்கு குறைந்தபட்சம் ஆறு மணித்தியாலங்களுக்கு முன்னதாக மிகக் கிட்டிய பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரிக்கு அறிவிக்கப்பட வேண்டும் என பொலிஸ் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 77 வேண்டுகின்றது. இப் பிரிவை மீறுதல் பேரணிக்கான தரப்புக்களை குற்றமொன்றுக்கு குற்றவாளியாக்குகின்றது.

தெகிவளையிலிருந்து ஆரம்பமான பேரணி 3 கி.மீ. நீளத்திலான போக்குவரத்து நெரிசலை விளைவித்துள்ளது. பொலிஸ் அலுவலர்கள் எவரும் பேரணி நடக்கவிருப்பது குறித்து அறிந்திருக்கவில்லை என்பதுடன், கட்டளைச்சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், இந்தப் பேரணியைத் தடுப்பதற்கான கடமையை பொலிஸ் படை கொண்டிருந்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்தகையதொரு செயற்பாட்டினைத் தடுப்பதற்கு பொலிஸ் தவறியிருந்தால், அது பொலிஸ் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 55இன் மீறலாக விளங்கியிருக்கும்.

குற்றவியல் நடைமுறையின் நியதியின் பிரிவுகள் 95(1) மற்றும் (2) ஆகியவற்றினால் வழங்கப்பட்டுள்ளவாறு, நியாயமானரீதியில் அவசியமானதாக பலத்தின் உபயோகத்தினால் சட்டவிரோதமான ஒன்றுகூடல் கலைக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். சட்டவிரோதமான ஒன்றுகூடலொன்றின் அமைப்பினைக் குறிப்பிடுகின்ற தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 138ஐ நோக்கி ம.உ.ஆ.கு.இன் கவனத்தை திசைதிருப்பிய அதேவேளை, பொலிஸ் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 80இன் மீறலொன்று இருப்பதாக அவர் தெரிவித்தார்; அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களிடமிருந்து தொடர்பான உறுதிச்சீட்டொன்று இன்றி சாதனங்களைப் பயன்படுத்துவது அத்துடன் ஒலியை வெளிப்படுத்துவது குற்றமொன்றாகும் என அது குறிப்பிடுகின்றது. சட்டவிரோதமான ஒன்றுகூடலின் காரணமாக, பொது வீதிகள்

தடைசெய்யப்படுகின்றன என்பதைக் காட்டுவதன் மூலம், தண்டணைச் சட்டக்கோவையின் பிரிவு 138இன் மீறலை நியாயப்படுத்த முடியும்.

தனது கூற்றுக்களுக்கு ஆதரவாக, பேர்னாட் சொயிஸா மற்றும் ஏனையோர் எதிர் சட்ட மா அதிபர் மீதான மீஉயர் நீதிமன்ற வழக்கின் தீர்ப்பினை அவர் குறிப்பிட்டிருந்தார். இதில் அவற்றின் அமைதியான தன்மைக்கு அக்கறையின்றி, பொது இடங்களில் ஒன்றுகூடல்கள் குழுவாக்கப்பட முடியாது என அது பிரகடனப்படுத்தியுள்ளது. மாணவர்கள் ஒன்றுகூடி இருந்த பகுதியிலேயே பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சு மற்றும் தேசிய வைத்தியசாலை ஆகியன அமைந்திருந்தன எனவும் அவர் அறிக்கையிட்டிருந்தார். இந்த ஒன்றுகூடலைப் பொலிசார் கலைத்திருக்காதிருந்தால், அப்பகுதியில் நாளாந்தம் அண்ணளவாக 100 ‘அம்பியூலன்ஸ்’கள் ஓடித்திரிவதனால், அது பொதுமக்களுக்கு அளப்பரிய கரிசனைகளை விளைவித்திருக்கும்.

மனித உரிமைகள் அனைத்துக்கும் பிரகடனத்தின் உறுப்புரை 30 குறித்து குறிப்பிடுகையில், லிப்டன் சதுக்கம் என்ற கொழும்பில் உள்ள பிரதான வலயங்களின் ஒன்றினைப் பயன்படுத்தி, இலட்சக்கணக்கான மக்களின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் குழப்புவதற்கு 1,200 மாணவர்களைக் கொண்ட இந்த கூட்டத்தினரை அனுமதிக்க முடியாது என அவர் தெரிவிக்கின்றார்.

4.1.2 யூனியன் பிளேஸுக்கும், டீன்ஸ் வீதிக்கும் நெடுகிலும் இந்தப் பேரணியின் காரணமாக கடுமையான போக்குவரத்து நெரிசலொன்று விளைந்துள்ளதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் (கொழும்புக்குப் பொறுப்பான) காமினி மதுரட்ட தெரிவித்தார். எனவே, கண்ணீர்புகைக் குண்டினதும், நீர் பீச்சியடித்தலினதும் உபயோகத்துடன் கூட்டத்தினரைக் கலைப்பதில் பொலிஸ் படை நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்தது. சூழ்நிலையின் பிரகாரமும், கலைந்து செல்வதற்கு மாணவர்கள் தவறியதன் காரணமாகவும் ஒன்றுகூடலை உடைப்பதற்காக பொலிஸார் உருட்டுக்கட்டைகளைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. சிரேஷ்ட பொலிஸ் அலுவலர் ஒருவராக, இந்தச் சம்பவத்திற்கான பொறுப்பினை தான் ஏற்றுக்கொள்வதாக அவர் மேலும் தெரிவிக்கின்றார்.

4.1.3 இந்தச் சட்டவிரோதமான ஒன்றுகூடலில் 1,300 மாணவர்களைக் கொண்ட கூட்டமொன்று இருந்ததுடன், அத்தகைய சட்டவிரோதமான ஒன்றுகூடலிலிருந்து அரசாங்கத்தின் அலுவலகங்களைப் பாதுகாப்பது பொலிசாரின் கடமை என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பாலித்த சிறிவர்தன தெரிவிக்கின்றார். எனினும், மாணவர்களை வேறோர் அதிகாரி சந்திப்பார் என அறிவிக்கப்பட்ட போது, அவர்கள் அதை மறுத்தனர். எனவே, மாணவர்கள் போராடிக் கொண்டிருந்த வேளையில், 3 மணித்தியாலங்களுக்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை.

4.1.4 தேசிய கரிசனையைக்கொண்ட இந்த விடயம் குறித்து பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர அறியாமல் இருந்தமையானது விசாரணையின் போது ம.உ.ஆ.கு. தலைவரினால் ஒரு குறைபாடாகக் காணப்பட்டது. பொலிஸ் படையின் மிகவுயர்ந்த பதவிநிலையிலான அதிகாரியொருவராக இது தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவித்தலொன்றைச் செய்திருப்பது முக்கியமானதாகும் என அவர் மேலும் அறிவித்தார்.

4.2 03.11.2015 அன்று புலனாய்வுகளை ம.உ.ஆ.கு. நடத்தியதுடன், 05.11.2015 அன்று எழுத்துமூலச் சமர்ப்பணமொன்றைப் பிரதிவாதிகள் வழங்கியிருந்தனர். இந்த விடயத்தை தீர்த்து வைப்பதற்காக, கடமைக்கு 226 பொலிஸ் அலுவலர்கள் குறித்தொதுக்கப்பட்டிருந்ததுடன், பொலிஸ் வெளிக்களப் படையிலிருந்து கலகத்தைக் கட்டுப்படுத்தும் அலுவலர்கள் இந்த சம்பவத்தின் போது பணிக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

அது அமைதியான ஒன்றுகூடலென்றால், பின்னால் வரிசையாக நிற்கும்படி பொலிஸ் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. அப்படி இல்லையென்றால், கலைந்து செல்லுமாறு கூட்டத்தினருக்கு எச்சரிக்கையொன்றை வழங்குமாறு பொலிஸ் அலுவலர்களுக்கு கூறப்பட்டிருந்தது, சச்சரவிலான நடத்தை தொடர்ந்துமே நிலவினால், கூட்டத்தினரைக் கலைப்பதற்காக தண்ணீர் புகைக்குண்டைப் பயன்படுத்துமாறு பொலிஸ் அலுவலர்களுக்கு ஆலோசனை கூறப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், மேற்படி விடயம் செயல்படுவதற்குத் தவறினால், உருட்டுக்கட்டைகளினால் கூட்டத்தினரைத் தாக்குவதற்கு பொலிஸ் அலுவலர்களைத் தயாராக இருக்கும்படியும், அத்தகைய ஒன்றுகூடலிலிருந்து கலைந்துசெல்வதற்கு கூட்டத்தினரில் அச்சமொன்றை உருவாக்கும்படியும் பொலிஸ் அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

ஆரம்பத்தில் கொழும்பு தெற்கு பொலிஸ் நிலையப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பாலித்தவின் கீழ் பொலிஸ் அலுவலர்களை முடிவு கட்டுதல் இருந்தது. எனவே, இச் சம்பவத்தின் போது, பொலிஸ் அலுவலர்கள் 3 நீர் பீச்சியடிக்கும் தாங்கிகளையும், 19 தண்ணீர் புகைக்குண்டுகளையும் மற்றும் 3 தண்ணீர் புகை கிரனேட்டுக்களையும் பயன்படுத்தியுள்ளனர். பின்னர் கூட்டத்தினரைக் கலைப்பதற்காக உருட்டுக்கட்டைகளையும் பயன்படுத்தியுள்ளனர்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் அதிகாரச்சட்டங்களிலும், பிரிவுகளிலும் கலைத்தல் நிறைவேற்றப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| குற்றவியல் நடைமுறைக் கோவை | பிரிவு 95 |
| பொதுவழிகள் அதிகாரச்சட்டம் | பிரிவு 59 (i) |
| பொலிஸ் கட்டளைச்சட்டம் | பிரிவு 77(i), (ii), 78/80இல் பிரிவு 56 |
| தண்டனைச் கோவை | பிரிவு 138.∴140 |
| திணைக்களக் கட்டளைகள் | A-18 மற்றும் 19 |

குற்றவியல் நியதியின் பிரிவுகள் 32, 140, 188, 314 மற்றும் 316 மற்றும் 2008இன் தேசிய பொதுவழிகள் அதிகாரச்சட்டம் இல.40இன் பிரிவு 59(1) ஆகியவற்றின் பிரகாரம் மாணவர்களின் கைதுகள் மேற்கொள்ளப்பட்டன.

39 மாணவர்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்த பின்னர், சட்டவிரோதமான கூட்டத்தின் உறுப்பினர்களாக விளங்கியமை, பொலிஸ் அலுவலர்களைத் தாக்கியமை, பிரதான வீதிகளைத் தடைசெய்தமை, சிறு காயங்களை விளைவித்தமை மற்றும் பொலிஸர் தமது கடமையை மேற்கொள்வதைத் தடுத்தமை ஆகிய குற்றங்களுக்காக, B40933/1/15இன் கீழ்

30.10.2015 அன்று நீதவான் முன்னிலையில் அவர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டனர் (பிற்சேர்க்கை 8, மூலத்திலான ஆவணம்).

4.3 இந்தச் சம்பவம் தொடர்பில் 26.11.2015 அன்று அறிக்கையொன்றைச் சமர்ப்பித்துள்ளதாகவும், அந்தத் திகதியன்று அமைச்சருடன் தமது கரிசனைகளின் கலந்துரையாடலொன்றுக்கு ர்னுயு மாணவர்களினால் எழுத்துமூலத்திலான அல்லது வாய்மொழியிலான வேண்டுகோள் அனுப்பப்படவில்லை என அது குறிப்பிடுவதாகவும் உயர் கல்வி, நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரான 12ஆவது பிரதிவாதி பிரகடனப்படுத்தினார்.

எனினும், சம்பவத் திகதியன்று, இந்த நிறுவனம் தொடர்பிலான கரிசனைகளுக்காக காலை 10 மணியளவில் சில வேறு அலுவலர்களுடன் ஒன்றுசேர தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்துடனும், பிரதிப் பணிப்பாளர் நாயகத்துடனும் அமைச்சரின் கூட்டமொன்று இருந்துள்ளது. உயர் கல்வி, நெடுஞ்சாலைகள் அமைச்சில் இன்னொரு கூட்டத்தில் இருந்த போது பிற்பகல் 2.30 மணியளவில் பேரணி குறித்து அறிவிக்கப்படும் வரை, அந்தத் திகதியன்று பேரணி குறித்து ஒன்றில் அமைச்சர் அல்லது செயலாளர் எதையுமே அறிந்திருக்கவில்லை. அமைச்சின் மேலதிகச் செயலாளருடன் மாணவர்களின் கலந்துரையாடலொன்றுக்கு ஒழுங்குகளைப் பொலிஸார் செய்திருந்த போதிலும், இந்த வசதியை மாணவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த மாணவர்களின் கரிசனைகளை இணக்குவதில், சுற்றுநிருபம் இலக்கம் 46/90I நிறைவேற்றுவதற்கு 17 நொவம்பர் 2015 திகிதியிடப்பட்ட 22/2015 இலக்கத்தைக் கொண்ட சுற்றுநிருபமொன்று வழங்கப்பட்டுள்ளதாக 12ஆவது பிரதிவாதி மேலும் தெரிவிக்கின்றார்.

## 5. தொடர்பான சட்ட ஏற்பாடுகள்

- 1978 அரசியலமைப்பின் அத்தியாயம் 3
- 1979இன் இல.15 குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை
- இல.19 தண்டனைச் சட்டக்கோவை
- 1984இன் இல.41 பொலிஸ் திருத்த அதிகாரச்சட்டம்
- 2008இன் இல.40 தேசியப் பொதுவழிகள் அதிகாரச்சட்டம்
- பொலிஸ் திணைக்களத்தின் கட்டளைகள்
- சர்வதேச மனித உரிமைகள் கருவிகள் - மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான ஐ.நா. சமவாயம்.

6. அவதானிப்புகள்

## 6.1 HNDA மாணவர்கள் மற்றும் ஒன்றுகூடல்

29.10.2015 அன்று, கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து, வோர்ட் பிளேஸில் உள்ள உயர் கல்வி அமைச்சிலிருந்து பெருமளவு கிலோ மீட்டர்கள் தூரத்தில் நிறுவப்பட்டிருந்த பாதுகாப்பு தடையரண்களின் முனை வரை பேரணி குறித்து பொலிசார் ஒத்துழைப்பினை வழங்கினர்.

அத்தகைய பேரணி குறித்து அதிகரிகளுக்கு அல்லது பொலிசாருக்கு முன்கூட்டிய அறிவித்தல் வழங்கப்படவில்லை எனத் தோன்றுகின்றது.

வழங்கப்பட்ட காணொளி நாடாக்களும், இரு தரப்புக்களினால் வழங்கப்பட்ட வாக்குமூலங்களும் ஒன்றுகூடலின் காரணமாக வீதியைத் தடைசெய்வதற்கு பொலிசார் முயன்றுள்ளதைக் காட்டுகின்றன. ஒன்றுகூடலின் காரணமாக, கடுமையான போக்குவரத்து நெரிசல் இருந்துள்ளதையும் அது காட்டுகின்றது.

அமைச்சின் உயர் அதிகாரியொருவர் இல்லாததன் காரணமாக, பொலிஸ் அலுவலகங்களின் வேண்டுகோளின் மீது உதவிச் செயலாளரைச் சந்திப்பதற்கு மாணவர்கள் மறுத்தனர் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அமைச்சின் உயர் அதிகாரி ஒருவரைச் சந்திப்பதற்கான மாணவர்களின் கோரிக்கை மறுக்கப்பட்டதன் காரணமாகவே மோதல் ஆரம்பித்துள்ளதாக தெளிவாகத் தாபிக்கப்பட்டுள்ளது.

## 6.2 ஒன்றுகூடலைக் கலைத்தல்

சம்பவம் இடம்பெற்ற போது மேற்சொல்லப்பட்ட பகுதியில் 1,500 என மதிப்பிடப்பட்ட மாணவர்கள் இருந்துள்ளனர். மூன்று நீர் பீச்சியடித்தல் வாகனங்கள் இருந்தன, 17 பொலிஸ் நிலையங்களிலிருந்து 257 பொலிஸ் அலுவலர்களும் கடமையில் இருந்தனர் எனப் பிரதிவாதி தெரிவிக்கின்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான பணிப்புரைகளும், ஆலோசனையும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் (கொழும்புக்கு பொறுப்பு), சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (மத்தி) மற்றும் கொழும்புப் பிரிவின் பொறுப்பதிகாரிகள் ஆகியோர் உட்பட 13 அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெண் அலுவலர்கள் பணிக்கு அமர்த்தப்படவில்லை எனத் தாபிக்கப்பட்டுள்ளதுடன், மாணவர்களின் முன்னைய போராட்டங்களின் பின்விளைவாக அரசாங்கக் கட்டிடங்களுக்கான சேதங்களைத் தவிர்ப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே அமைச்சிலிருந்து

தூரத்தில் பாதுகாப்புத் தடையரண்கள் நிறுவியதற்கான காரணம் என பிரதிவாதி தெரிவிக்கின்றார்.

ஒலிபெருக்கிகள் ஊடாக அறிவித்தல்கள் செய்யப்பட்ட போதிலும், இன்னொரு அதிகாரியைச் சந்திப்பதற்கு அவர்கள் நிராகரித்த பின்னர் கூட்டம் கலையவில்லை எனவும் மேலும் தாபிக்கப்பட்டுள்ளது.

தடையரண்களாகப் பயன்படுத்தப்பட்ட அரண்களை இடித்துத் தள்ளுவதற்கு மாணவர்கள் முயற்சிப்பதை காணொளிப் பதிவுகள் காட்டியுள்ளன. அந்தத் தருணத்தில், நீர் பீச்சியடித்தலின் உபயோகத்தினால் கூட்டத்தைக் கலைப்பதற்கான திட்டம் பிரயோசனமற்றது என்பதை நிரூபித்தது. ஏனெனில் நீரிலிருந்து தாக்குதலுக்கு எதிராக கைகளை ஒன்றாக பிடித்தபடி தம்மை மாணவர்கள் பிணைத்திருந்தனர்.

எனவே, பொலிசார் கண்ணீர் புகைக்குண்டைப் பயன்படுத்தினர். கூட்டத்தின் மீது கண்ணீர் புகைக்குண்டை ஏவிய பின்னர், கூட்டம் கலைந்து செல்வதற்கான எடுத்துக்காட்டுகள் இருந்ததை செய்திப்பத்திரிகைக் கட்டுரைகள், புகைப்படங்கள் மற்றும் காணொளிப் படங்கள் காட்டுகின்றன. எனினும், கண்ணீர் புகைக்குண்டின் உபயோகத்தின் காரணமாக, வாயுவினால் சில மாணவர்களுக்கு தீங்கு ஏற்பட்டு, அவர்கள் நிலத்தில் விழுவதை சில காணொளிப் பதிவுகள் காட்டுகின்றன. மாணவர்களை விரட்டுவதற்காக உருட்டுக்கட்டைகளாலும், மரக்கட்டைகளாலும் அவர்களைப் பொலிசார் தாக்கினர். இந்த சான்று உரிமை பாராட்டுபவரினால் சமர்ப்பிக்கப்பட்டதுடன், ஊடகங்கள் மீதான சான்றும் வெளியிடப்பட்டது. மாணவர்களின் மேல் பின்புற உடலைப் பொலிஸ் அலுவலர்கள் தாக்கியுள்தாக காணொளிப் பதிவுகள் காட்டுகின்றன. பொதுசன ஒன்றுகூடலொன்றை நிருவகிப்பது தொடர்பில் ஒன்றில் அடிப்படைப் பயிற்சியை அல்லது ஒழுங்குவிதிகளின் அறிவினை பொலிஸ் அலுவலர்கள் கொண்டிருக்கவில்லை எனத் தாபிக்கப்பட்டுள்ளது. அந்த தருணத்தில், இடத்திலிருந்து மாணவர்கள் தப்பியோடிய போது, அவர்கள் மீது தாக்குதல் இழைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## 6.3 HNDA மாணவர்களின் கைது

இந்த விடயம் தொடர்பில், பம்பலப்பிட்டி, கறுவாத்தோட்டம், வெள்ளவத்தை, கிருலப்பனை, கொள்ளுப்பிட்டி, நாரஹேன்பிட்டி ஆகிய பொலிஸ் நிலையங்களினால் 39 மாணவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள் பாதுகாவலில் வைக்கப்பட்டனர். 30.10.2015 அன்று இல.B40933/1/15 வழக்கின் கீழ், நீதவான் மன்றத்தின் முன்பாக அவர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டு, பிணை வழங்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட 39 மாணவர்கள் நீதவான் மன்றத்தின் முன்னிலைப்படுதுதப்பட்டார்கள் என அறிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன. தண்டனைச் சட்டக்கோவையின் 140, 153, 14, 316 ஆகியவற்றுடன் ஒன்றுசேர வாசிக்கப்பட்டு பிரிவு 32 மற்றும் 2008இல் இல.40 தேசிய பொது வழிகள் அதிகாரச்சட்டத்தின் பிரிவு 59(1) ஆகியவற்றின் கீழ் கைதுகள் மேற்கொள்ளப்பட்டதாக பொலிசார் தெரிவிக்கின்ற போதிலும், கைதுகள் தன்னிச்சையாக மேற்கொள்ளப்பட்டதாகவும்,

தமது கைதுகளுக்கு தமக்கு காரணங்கள் அறிவிக்கப்படவில்லை எனவும் மாணவர்கள் தெரிவித்தனர். கைது குறித்து முடிவொன்றை எடுப்பதற்கு போதியளவு சாட்சியம் இல்லை என ம.உ.ஆ.கு. கண்டறிந்தது.

### 6.4 சித்திரவதை, கொடூரத்தன்மை மற்றும் இரக்கமின்மை ஆகியன இன்றி கைது இடம்பெற்றிருக்க வேண்டும்

அத்தகைய கைது இடம்பெற்ற போது மாணவர்கள் சித்திரவதை செய்யப்பட்டு, இரக்கமற்ற விதத்தில் நடத்தப்பட்டதாகவும், அத்தகைய விதத்தில் நடத்தியதன் காரணமாக காணொளிப் பதிவுகளிலும், புகைப்படங்களிலும் காட்டப்பட்டுள்ளவாறு, மாணவர்கள் உடல்ரீதியிலான காயங்களை அனுபவித்ததாகவும் மனுதாரர் தெரிவிக்கின்றார்.

வழங்கப்பட்டுள்ள காணொளிப் பதிவில், நிலைகுலைந்த மாணவர் ஒருவர் அவரைச் சுற்றியிருந்த பொலிஸ்காரர்களைக் கொண்ட குழுவொன்றினால் தொடர்ச்சியாக தாக்கப்படுகின்றார் அல்லது உருக்குலைக்கப்படுகின்றார்.

எனினும், உருட்டுக்கட்டைகளைப் பயன்படுத்தி, பொலிசாரினாலான தாக்குதலில் 9 மாணவர்கள் மட்டுமே சிக்கியுள்ளனர். ஆனால், தலை மற்றும் தோள் ஆகியன உட்பட உடலின் மேல் பின்புறத்தின் மீது தாக்கப்பட்ட மேலும் பெருமளவு மாணவர்கள் உள்ளனர். பொலிஸாரிடமிருந்து ஓடிய மாணவர்களையே பொலிஸ் அலுவலர்கள் தாக்கியுள்ளதாகவும், அவர்களைத் தாக்கியது மாணவர்கள் அல்லர் எனவும் தோன்றுகின்றது.

### 6.5 வேறு காரணிகள்

அத்தகைய சம்பவத்தின் காரணமாக, 6 அலுவலர்கள் காயமடைந்து, பிரதிவாதிகளினால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனவே, 24.11.2015க்கு முன்னர், பொலிசாருக்கு மாணவர்களினால் விளைவிக்கப்பட்ட காயங்கள் மீது அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு பிரதிவாதிகளை ம.உ.ஆ.கு. கோரியிருந்தது. ஆணைக்குழுவுக்கு அறிக்கைகளை அனுப்புவதற்கு தவறியதன் காரணமாக, இந்த விடயம் மீது முடிவுகள் அடையப்படவில்லை.

அத்தகையதொரு ஒன்றுகூடலைக் கலைப்பது பிரதிவாதிகளின் கடமை என்றும், அவர்களது நடவடிக்கைகளின் சட்டரீதியிலான கோட்பாடுகளின் பிரகாரமாக விளங்கியது என்றும் பிரதிவாதி காட்டியுள்ளார்.

7. சட்ட இணங்காணல்

7.1 1978 அரசியலமைப்பின் உறுப்புரை 3

7.1.1 சித்திரவதை, கொடூரம் மற்றும் மனிதாபிமானமற்ற ஆகியன இன்றி கைது இடம்பெற்றிருக்க வேண்டும்

இது வரை தாபிக்கப்பட்ட உண்மைகளையும், சாட்சியத்தையும் குறிப்பிடுவதன் மூலம், மனிதாபிமானமின்றியும் , கொடூரமானதுமான வழியொன்றிலும் மாணவர்கள் நடத்தப்பட்டுள்ளார்கள் என்ற கவனம் ஈர்த்தெடுக்கப்பட வேண்டும். இது 1978 அரசியலமைப்பின் உறுப்புரை 11ஐக் குறிப்பிடுகின்றது.

கூட்டத்தினைக் கலைப்பதில் பயன்படுத்தப்பட்ட பொறிமுறைகளை நோக்கி கவனம் திசைதிருப்பப்பட்டுள்ளது. நீர் பீச்சியடித்தலுக்கும், கண்ணீர் புகைக்குண்டுகள் வெளிப்பட்டதற்கும் பின் கீழே விழுந்த அல்லது மயக்கமடைந்த மாணவர்கள் மீது உருட்டுக்கட்டைகள் உபயோகிக்கப்பட்டமை குறித்து காணொளியினதும், புகைப்படங்களினதும் ஊடாக நிரூபணமாகியுள்ளது. சாட்சியத்தில் காட்டப்பட்டுள்ளவாறு, பொலிஸ் அலுவலர்களின் நடவடிக்கைகள் கொடூரமானதும், இரக்கமற்றதுமாகும் எனக் கருதப்படுகின்றது.

7.1.2 சமத்துவத்திற்கான சட்டத்தினதும், உரிமையினதும் பாதுகாப்பு

அரசியலமைப்பின் பிரிவு 12(1)இன் பிரகாரம், சட்டம் சமமாகப் பிரயோகிக்கப்பட வேண்டும் என அது தெரிவிக்கின்றது. எனவே, பிரதிவாதியின் நடவடிக்கைகள் சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் இருந்துள்ளன என்றவாறு, அது பரிசீலிக்கப்பட வேண்டும்.

சட்டவிரோதமான ஒன்றுகூடலொன்றைக் கலைக்குமுகமாக, சட்டத்தின் மட்டுப்படுத்தலினுள் செயற்படுவதற்கு பிரதிவாதியுடன் கடமை சார்ந்துள்ளது. எனவே, பின்வரும் காரணிகள் கரிசனைக்கு எடுக்கப்பட வேண்டும்:

1. அத்தகைய ஒன்றுகூடலின் நோக்கம்
2. அத்தகைய ஒன்றுகூடலைக் கலைக்குமுகமாக, எந்த அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளது?

தண்டனைக்கோவையின் பிரிவு 138ஐக் கரிசனைக்கு எடுக்கும் போது, மாணவர்களின் நடவடிக்கை சட்டவிரோதமான ஒன்றுகூடலொன்றுக்கு உட்பட்டது என பிரதிவாதி தெரிவிக்கின்றார். பொது இடமொன்றில் ஒன்றுகூடுகின்ற வேளையில், சட்டவிரோதமான நடவடிக்கைகளை பொதுவான அக்கறையொன்றுடன் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் இழைத்தால், அது சட்டவிரோதமான ஒன்றுகூடலொன்றுக்கு உட்படும் என அது தெரிவிக்கின்றது.

குற்றவியல் நடைமுறைச் கோவையின் பிரிவு 95இன் பிரகாரம், சட்டவிரோதமான ஒன்றுகூடலொன்றினுள் சட்டபூர்வமான ஒன்றுகூடலொன்று உருமாறலாம் எனக் காட்டுகின்றது. இது சமூகத்திற்கு ஒன்றுகூடல் குழப்பத்தை ஏற்படுத்தினால்தான். எனினும், அறிவித்தலை வழங்குவதற்கு பொலிஸ் அலுவலர் எந்த பதவிநிலையைக் கொண்டிருப்பது ஒரு பொருட்டல்ல என்ற போதிலும், கூட்டத்தைக் கலைப்பதற்கான கடமையைப் பிரதிவாதி கொண்டுள்ளார்.

திணைக்களக் கட்டளைகளின் ஒழுங்குவிதி இல. நு5இன் பிரகாரம், பொலிசாருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டு, ஒன்றுகூடுவதற்கு முன்னதாக கணிசமானளவு நேர காலமொன்றினுள் பொலிஸ் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும், பொலிசிலிருந்து அங்கீகாரம் வழங்கப்படவில்லை.

அத்தகைய சட்டவிரோமான ஒன்றுகூடலின் காரணமாக, சமூகத்தில் அமைதியின் மீறலொன்று இருந்ததினால், பொலிஸ் கட்டளைச்சட்டத்தின் பிரிவுகள் 77(1) மற்றும் 78(1) ஆகியவற்றின் கீழ், சட்டவிரோதமான கூட்டமொன்றைக் கலைப்பதற்கான அதிகாரத்தைப் பொலிஸ் கொண்டுள்ளது. அத்தகைய நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்கு முன், நிகழ்ச்சிக்கு மிகக் கிட்டிய பொலிஸ் நிலையத்திற்கு பொலிஸ் அறிவிக்க வேண்டும் என்றும், அத்தகைய குழப்பம் தொடர்வதை அனுமதிக்கக்கூடாது என்றும் பிரிவு 77(1) தெரிவிக்கின்றது. சட்டவிரோமான ஒன்றுகூடலைக் கலைக்குமுகமாக, 12 அல்லது அதற்கு மேற்பட்டவர்களைக் கொண்ட கூட்டமொன்றை பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கலைக்க வேண்டும் என்றும், பொலிஸ் இன்ஸ்பெக்டரின் கௌரவத்தை தரம்குறைக்காத வழியொன்றில் நடவடிக்கை செய்யப்பட வேண்டும் என்றும் பிரிவு 78(1) குறிப்பிடுகின்றது.

வழங்கப்பட்டுள்ள உண்மைகளின் பிரகாரம், சட்டவிரோதமான ஒன்றுகூடலுக்கு மாணவர்களின் நடவடிக்கைகள் உட்படுமா? என்பதே கேள்வியாகும். அமைச்சரைச் சந்திப்பதற்கு மாணவர்களுக்கு மறுப்பினைத் தெரிவித்த பின்னர், சூழ்நிலை மோசமடைந்து பொதுமக்களுக்கு குழப்பமொன்றை விளைவித்ததினால், தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 138 மற்றும் பொலிஸ் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 78(1) ஆகியவற்றின் கீழ், சட்டவிரோதமான ஒன்றுகூடலொன்றுக்கு அது உட்படுகின்றது எனத் தோன்றுகின்றது.

இந்த சட்டவிரோதமான ஒன்றுகூடலை விளைவிக்கின்ற கூட்டத்தினைக் கலைக்குமுகமாக, பிரதிவாதிகள் அவசியமானதும், நியாயமானதுமான நடவடிக்கைகளை எடுக்கின்றார்களா என்பதே அடுத்த கரிசனையாகும். கூட்டமொன்றைக் கலைப்பதற்கான அறிவுறுத்தல் பொலிஸ் திணைக்கள ஒழுங்குவிதி 18இல் குறிப்பிடப்பட்டுள்ளதாக பிரதிவாதி தெரிவிக்கின்றார். எனினும், சிவில் போராட்டங்களுக்கு இந்த ஒழுங்குவிதி பிரயோகிக்கப்படுவதில்லை. அடுத்தாக, பொலிஸ் திணைக்களக் கட்டளைகள் அ 19ஐ நோக்கி கவனத்தை பிரதிவாதி ஈர்த்தெடுத்தார். இது சட்டவிரோதமான ஒன்றுகூடலொன்றின் தருணத்தில் பொலிஸ் அலுவலர் ஒருவர் செயற்படுவது குறித்த அறிவுறுத்தலை வழங்குகின்றது. எனினும், குழம்பிய நிலையிலான கூட்டத்தினுள் அமைதியான தன்மையொன்று இருந்ததாகவும், அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை பொலிசார் மிதமிஞ்சி பயன்படுத்துவதற்கான அவசியம் இருக்கவில்லையெனவும் தோன்றுகின்றது.

கூட்டத்தைக் கலைக்குமுகமாக, நீர் பீச்சியடித்தலையும், கண்ணீர் புகைக்குண்டினையும் பிரதிவாதிகள் வெளிப்படுத்திய வேளையிலான தருணத்தில், காணொளிப் பதிவுகளில் காட்டப்பட்டுள்ளவாறு, கூட்டத்தைக் கலைப்பதற்காக உருட்டுக்கட்டைகளைப் பயன்படுத்த பொலிசார் ஆரம்பித்தனர். குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 95(2)இன் பிரகாரம், அதிகாரத்தின் உபயோகமானது சரிவிகிதாசாரத்தையும், அவசியத்தையும் கொண்டிருக்க வேண்டும். மாணவர்கள் தப்பியோடிய போது, உடலின் மேல் பகுதிகளின் (தலை மற்றும் தோள் உட்பட) மீது மாணவர்களைப் பொலிஸ் அலுவலர்கள் தாக்கியுள்ளதாகத் தோன்றுகின்றது. எனவே, பொலிசாரின் நடவடிக்கை சரிவிகிதாசாரமானதா அல்லது இல்லையா என்பதில் இன்னுமே சந்தேகம் உள்ளது.

சட்ட மா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்ட 19.02.2014 திகதியிடப்பட்ட இல.AG/24/2013 அறிக்கையொன்றின் பிரகாரம், சிவில் போராட்டமொன்றின் போது, இறப்பர் குண்டுகளைப் பயன்படுத்துவதே சிறந்த தெரிவாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய தருணத்தைத் தணிப்பதற்கு குறைந்தபட்ச பலமே பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் அது குறிப்பிடுகின்றது. எனினும், இறப்பர் குண்டுகளைச் சுடுவது கூட காயங்களையும், மரணத்தையும் விளைவிக்கக்கூடும். எனவே, குறைந்தளவு காயங்களையும், மரணங்களையும் விளைவிக்கக்கூடிய வழியொன்றில், பலத்தின் குறைந்தபட்சத்தைப் பயன்படுத்துவதற்கு சம்பந்தப்பட்டவர்களுடனேயே தீர்மானம் சார்ந்துள்ளது. எனவே, குறைந்தபட்ச தொகையைக் கொண்ட காயங்களையும், மரணங்களையும் பலத்தின் உபயோகம் விளைவிக்க வேண்டும் என அது குறிப்பிடுகின்றது. இந்தச் சூழ்நிலையில், பலத்தின் நியாயமான பயன்பாட்டினைப் பிரதிவாதிகள் மேற்கொள்ளவில்லை.

காணொளிப் பதிவுகளின் தொடர்பில், கூட்டத்தினர் கலைந்துசெல்லும் வேளை பொலிசார் நீர் பீச்சியடித்தலையும், கண்ணீர் புகைக்குண்டையும் பயன்படுத்தியதாகத் தோன்றுகின்றது. இந்த மாணவர்கள் மீது உருட்டுக்கட்டைகளின் உபயோகம் தேவையற்றது என ம.உ.ஆ.கு. அவதானித்துள்ளது. எனவே, அரசியலமைப்பின் உறுப்புரை 12(1)ஐ மீறி, தீவிரமான அதிகாரத்துடன் பொலிசார் செயற்பட்டுள்ளனர். 2008இன் இல.40 பொதுவழி அதிகாரச் சட்டத்தின் பிரிவு 59(1)இன் பிரகாரம், கோட்டையிலிருந்து வோர்ட் பிளேஸ் வரை மாணவர்களின் பேரணியைத் தடைசெய்வதற்கு பொலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுடன், இது பிரிவு 59(1)இன் மீறலொன்றுக்கு உட்பட்டதாகும்.

### 7.1.3 சித்திரவதையிலிருந்தும், கொடூரத்திலிருந்தும், மனிதாபிமானமற்ற மற்றும் தரக்குறைவாக நடத்துவதிலிருந்தும் சுதந்திரம்

39 மாணவர்களைக் கைது செய்வதில் அரசியலமைப்பின் உறுப்புரை 13(1)இன் மீறலொன்று இருந்துள்ளதா என்பது குறித்த உண்மையானது ம.உ.ஆ.கு.இனால் அவதானிக்கப்படுகின்றது. குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 23(1)இன் பிரகாரம், நபர் ஒருவர் கைது செய்யப்படும் போது, கைதின் வாய்மொழிக்கு அல்லது நடவடிக்கைகளுக்கு சந்தேக நபர் ஒழுகிநடக்காவிட்டால், கைது செய்ய வந்துள்ள நபர் தடுத்துவைக்கப்படவுள்ளவரைத் தொடுவதற்கான அல்லது கைதினை நிறைவேற்றுவதற்கான புத்திகூர்மையிலான நடவடிக்கைகளைப் பயன்படுத்துவதற்கு அதிகாரத்தைக் கொண்டுள்ளார். அத்தகைய கைதுக்கு

மறுப்பொன்று இருந்தால், சந்தேக நபரை கைதுசெய்கின்ற நபர் கைது செய்வதற்கு சரிசமவிகிதமானதும், அவசியமானதுமான நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

அத்துடன், பொலிஸ் திணைக்களக் கட்டளைகளின் 20இன் பிரிவு 2(அ)இல், அது வன்முறை இன்றி கைது ஒன்றின் நடைமுறை இடம்பெற வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. எனினும், அத்தகைய கைதுக்கு முன்னர் அல்லது பின்னர் பலத்தைப் பயன்படுத்துவதற்கான அவசியமொன்று இருந்தால், பலத்தின் உபயோகம் குறைந்தபட்சமாகவும், அவசியமாகவும் இருக்க வேண்டும். மாணவர்கள் கைது செய்யப்பட்ட தருணத்தின் போது, மேலே குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளைப் பொலிசார் பின்பற்றினார்களா என்ற கேள்வி உள்ளது.

கைது ஒன்று செய்யப்படும் போது, ஏன் அத்தகைய கைது இடம்பெறுகிறது என்பது குறித்து தடுத்துவைக்கப்படவுள்ளவருக்கு அரசியலமைப்பின் உறுப்புரை 13(1)இன் கீழ் கூறப்பட வேண்டும்.

தண்டனைக் சட்டக்கோவை இல.32இன் பிரிவுகள் 140, 153, 314, 316 மற்றும் 2008இன் இல.40 பொதுவழிகள் அதிகாரச்சட்டத்தின் பிரிவு 59(1) ஆகியவற்றின் மீறலின் காரணமாகவே அத்தகைய கைதுக்கான காரணம் என பிரதிவாதி குறிப்பிடுகின்றார். எனினும், அரசியலமைப்பின் உறுப்புரை 13(1)இன் பிரகாரம், பொலிசார் கைது செய்தனரா அல்லது செய்யவில்லையா என்ற உண்மையைக் குறிப்பிடுவது சாத்தியமற்றதாகும்.

7.1.4 கருத்துச் சுதந்திரம் மற்றும் சுதந்திரத்திற்கான உரிமை

அரசியலமைப்பின் உறுப்புரை 14(1)(அ) கருத்துச் சுதந்திரத்தையும் (ஆ) ஒன்றுகூடலின் சுதந்திரத்தையும் மற்றும் (இ) சுதந்திரத்தைக் கொண்டிருப்பதற்கான உரிமையையும் கையாளுகின்றது.

மாணவர்களைப் பொறுத்தளவில், அரசியலமைப்பின் உறுப்புரைகள் 15(2), 15(3) மற்றும் 15(7) ஆகியன மீறப்பட்டுள்ளதாக வலியுறுத்தப்படுகின்றது. எனினும், 2008இன் இல.40 பொதுவழிகள் அதிகாரச்சட்டத்தினதும், பொலிஸ் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 77இனதும் பிரகாரம், வழங்கப்பட்டுள்ள நேரத்திற்கு முன்னதாக பொலிசாருக்கு ஒன்றுகூடலொன்றின் அத்தகைய முயற்சி குறித்து மனுதாரர்கள் அறிவிக்கவில்லை எனத் தோன்றுகின்றது. எனினும், மாணவர்களின் பேரணி ஆரம்பித்த போது பொலிசாரின் ஒத்துழைப்பு இருந்துள்ளது.

கட்டுக்கடங்காத தன்மையொன்றில் செயற்பட்ட மாணவர்களைக் கலைப்பதற்கு பொலிசார் முயற்சித்த போது, அரசியலமைப்பின் உறுப்புரை 14(1)ஐப் பிரதிவாதி மீறவில்லை. எனினும், கூட்டத்தைக் கலைப்பதற்கு பொலிசாரினால் பலத்தின் உபயோகமானது சரிசமவிகிதத்திற்கு உட்பட்டதாகும்.

7.1.5 சர்வதேச மனித உரிமைகள் மீதான சட்டம்

சர்வதேச தரத்தின் பிரகாரம், அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் UDHR உறுப்புரைகள் 5 மற்றும் 7 (சித்திரவதையையும், கொடூரத்தையும், இரக்கமின்மையையும், இழிவான நடத்துவதையும் தடுத்தல்) மற்றும் சிவில் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயத்தின் ஐஊஊஸீசுசு உறுப்புரைகள் 7 மற்றும் 9 ஆகியவற்றின் கீழ் பிரதிவாதிகள் பொறுப்புக்கு உட்படுத்தப்படலாம்.

இரு தரப்புக்களினாலும் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியத்தின் பிரகாரம், சித்திரவதை, கொடூரத்தன்மை, இரக்கமின்மை மற்றும் தரம் குறைவாக நடத்துதல் ஆகியவற்றில் விளைந்துள்ள சட்டவிரோதமான ஒன்றுகூடலொன்றைக் கலைக்குமுகமாக, வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பிரதிவாதி மிகையாகப் பயன்படுத்தியுள்ளார் என ம.உ.ஆ.கு. முடிவு செய்ய முடியும். எனவே, மாணவர்கள் தொடர்பில் சமத்துவத்திற்கான உரிமை மீறப்பட்டுள்ளது.

8. பரிந்துரைகள்

8.1 மனித உரிமைகளின் மீறல்

உறுப்புரைகள் 11 மற்றும் 12(1) ஆகியவற்றை மீறுவதில் மாணவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக ம.உ.ஆ.கு.இனால் முடிவொன்று அடையப்பட்டுள்ளதுடன், தனது காயங்களுக்காக சிகிச்சையளிக்கப்படுகின்ற சாஷினி சந்தீபானி குமாரசிறி என்ற பெயரிலான மாணவருக்கு ரூ.25,000/- கொண்ட கொடுப்பனவொன்றையும், இங்கு கீழே பெயரிடப்பட்டுள்ள மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.15,000/- கொண்ட கொடுப்பனவொன்றையும் செய்யுமாறு விதந்துரைக்கப்படுகின்றது:

1. நுவன் பிரதீப் குமார
2. ஆயிஷ் ரத்நாயக்க
3. சுபுன் ஈஷான்
4. பாத்திமா ஹனினா ஹுசேயின்
5. சந்துனி சந்திரசிறி
6. புத்திக உக்வத்த
7. நிலுகா நயனா
8. ஜீவ ரூபசிங்க

8.2 எதிர்காலத்தில் அத்தகைய நடவடிக்கையை தடுத்தல்

அத்தகைய கரிசனைகளைக் கையாள்வதில் தமது பொறிமுறையில் உள்ள குறைபாடுகளை வாழ்க்கைத் தொழில் ரீதியாக நீக்குவதில் எடுக்கப்படுவதற்கான அவசியமான நடவடிக்கைகள் குறித்து பொலிசாருக்கு ம.உ.ஆ.கு. அறிவித்துள்ளதுடன், ஆலோசனையும் கூறியுள்ளது.

8.2.1 சிவிலியன்களைக் கையாள்வதில் பொலிசாரின் தன்மையையும், அமைப்பினையும் தாபித்தல்

மேலதிகமாக, பொறுப்பான அலுவலர்களுக்கு எதிராக இன்றைய சூழ்நிலைகளுக்குப் பொருத்தமாக எடுக்கப்பட வேண்டிய ஒழுக்காற்று நடவடிக்கைகள் மீது அறிக்கையொன்றை விடுக்குமாறும், விசேட பயிற்சியை வழங்குமாறும், 01 மார்ச் 2016க்கு முன் பயிற்சிக் கையேடு ஒன்றை எழுதுமாறும் ம.உ.ஆ.கு. கோரியுள்ளது.

அத்தகைய சூழ்நிலையில், கூட்டத்தைக் கலைப்பதற்கு பெண் பொலிஸ் அலுவலர்களை அல்லது பெண் பொலிஸ் அலுவலர்களின் குழாமொன்றை கடமைக்கு குறித்தொதுக்குவது அவசியமானது என ம.உ.ஆ.கு. பரிந்துரைக்கின்றது. இந்தப் பரிந்துரை மீது, ம.உ.ஆ.கு.க்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8.3 ஒழுக்காற்று நடவடிக்கை

வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அப்பால் செயற்பட்ட பொலிஸ் அலுவலர்கள் மீது அவசியமான ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்குமாறும் அத்துடன் அத்தகைய பயிற்சியின் முன்னேற்றம் மீது ம.உ.ஆ.கு.க்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறும் ம.உ.ஆ.கு. பரிந்துரைக்கின்றது.

8.4 சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனம் செலுத்தப்பட வேண்டும்

சட்டவிரோமான ஒன்றுகூடலின் நிகழ்வுக்கு (29.10.2015) முன்னதாக, அத்தகைய நிகழ்வு இடம்பெறும் என ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளதாக ம.உ.ஆ.கு. கண்டறிந்துள்ளது. இதைப் பொறுப்புக்கு எடுப்பதற்கு அரசாங்க அதிகாரிகள் உதாசீனம் செய்துள்ளனர். எனவே, அது ஆரம்பிப்பதற்கு முன்னரேயே அத்தகைய ஒன்றுகூடலை நிறுத்துவது பொலிசாரின் கடமையாகும்.

எனவே, எதிர்காலத்தில் அத்தகைய பிரச்சனைகளைத் தணிப்பதற்கு, தொடர்பான அலுவலர்களும், அதிகாரிகளும் முன்னெச்சரிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதுடன், அப்படி இல்லையென்றால், அது அத்தகைய சட்டவிரோதமான ஒன்றுகூடலுக்கு இட்டுச்செல்லும் என ம.உ.ஆ.கு. பரிந்துரைக்கின்றது.

HNDA மாணவர்கள் மீது நடத்தப்பட்ட அவதானிப்புகள் அமைதியான ஒன்றுகூடலை அவர்கள் கொண்டிருந்தனர் என்பதையும், அடுத்து அவர்கள் மீது பிரதிவாதிகள் தாக்குதலை ஆரம்பித்தனர் என்பதையும், உயர் கல்வி அமைச்சர் அவர்களை சந்திக்க விரும்பவில்லை எனக் குறிப்பிட்டனர் என்பதையும் காட்டுகின்றன.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் விடயத்தைக் கலந்துரையாடுவதற்கு வாய்ப்பினைப் பொலிஸ் அலுவலர்கள் தாமாகவே வழங்கியுள்ளதாக ம.உ.ஆ.கு. குறித்துக் கொண்டுள்ளது.

கலாநிதி தீபிகா உடகம
தவிசாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

திரு.சாலிய பீரிஸ்
ஆணையாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

திருமதி அம்பிகா சற்குணநாதன்
ஆணையாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

திரு.ஹமீட் கஸாலி ஹுசெயின்
ஆணையாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

கலாநிதி உபனந்த விதானபத்திரண
ஆணையாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

## அத்தியாயம் மூன்றுக்கான பிற்சேர்க்கை

பிற்சேர்க்கை 3அ -

2015இல் இ.ம.உ.ஆ.கு.இன் அலுவலர்களினால் பங்கெடுக்கப்பட்ட கடல்கடந்த நாடுகளில் இடம்பெற்ற மகாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்

| | பங்கெடுத்த அலுவலர்களின் பெயர் மற்றும் பதவிப் பெயர் | நாடு மற்றும் மகாநாடுகள்/ கருத்தரங்குகள்/ /செயலமர்வுகள் | கால எல்லையுடன் திகதிகள் |
|---|---|---|---|
| 1 | திருமதி மேனகா ஹேரத்<br>சட்ட அலுவலர் | தாய்லாந்து<br>ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் LGBT நபர்களின் உரிமைகளை மேம்படுத்துவதிலும், பாதுகாப்பதிலும் NHRIஇன் வகிபங்கு மீதான APF - UNDP செயலமர்வு | 24.02.2015 - 27.02.2015 |
| | | | |
| 2 | திரு.டபிள்யு.எச்.சுமணலால் - I.O<br>திருமதி சுஜீவ குமாரி - I.O<br>திருமதி எம்.எஸ்.அபோன்ஸோ- I.O அம்பாறை<br>திருமதி டபிள்யு.கே.எஸ்.பிரியங்கா - I.O, அனுராதபுரம் | நேபாளம்<br>பெண்களினதும், யுவதிகளினதும் மனித உரிமைகள் மீது உப பிராந்தியக் கலப்பிலான கற்கை நெறி | 13.04.2015 - 17.04.2015 |
| | | | |
| 3 | திருமதி டி.எஸ்.வீரவிக்ரம<br>சட்ட அலுவலர் | பிலிப்பைன்ஸ்<br>புலனாய்வினதும், சித்திரவதையினதும் மீதான முன்னோடிப் பிராந்திய கலப்பிலான கற்கை நெறி - பிராந்தியச் செயலமர்வு APF | 20.04.2015 - 24.04.2015 |
| | | | |
| 4 | திரு.எம்.எ.என்.சந்திரசிறி - R.O<br>திரு.பி.டபிள்யு. சந்திரசிறி - R.O அம்பாறை | பங்களாதேஷ்<br>சுதேசிய மக்களின் உரிமைகள் மீதான ஐ.நா. பிரகடனம் மீது முன்னோடி பிராந்தியக் கலப்பிலான கற்கை நெறியொன்றில் பங்கெடுப்ப தற்கான அழைப்பு - APF | 04.05.2015 - 08.05.2015 |
| 5 | திருமதி எஸ்.ஜே.பரணகம<br>செயலாளர்<br>திரு.ரி.கனகராஜ் | ருவாண்டா<br>முன்கூட்டிய மற்றும் நிர்ப்பந்திக்கப்பட்ட | 04.05.2015 - 08.05.2015 |

| | | | |
|---|---|---|---|
| | R.C யாழ்ப்பாணம் | திருமணத்தினதும், பாலியல் வன்முறையினதும் மீதான NHRIஇன் பொதுநலவரசு அரங்குடன் செயல் அமர்வு | |
| | | | |
| 6 | திரு.கே.ரி.கே.பி.ஆரம்பத்<br>பதில் பணிப்பாளர் - நிருவாகம் மற்றும நிதி | தாய்லாந்து<br>வியாபார மற்றும் மனித உரிமைகள் பயிற்சி நெறி - APF | 05.05.2015 - 08.05.2015 |
| | | | |
| 7 | திரு.சி.கே.ராஜசிங்க<br>வலைப்பின்னல் நிருவாகஸ்தர்<br>திருமதி டபிள்யு.எ.யு.சமன்மலி<br>ஆவணப்படுத்தல் அலுவலர் | தாய்லாந்து<br>தென் மற்றும் தென் கிழக்காசியாவில் மனித உரிமைகள் நூலகங்கள் மீதான மகாநாட்டுக்கு அழைப்பு - ராகுல் வலன்பேர்க் நிறுவனம் | 20.05.2015 - 22.05.2015 |
| | | | |
| 8 | திருமதி எஸ்.ஜே.பரணகம<br>செயலாளர் | பெல்ஜியம்<br>தேசிய மனித உரிமைகள் நிறுவனத்துடன் விசேட நிகழ்வு - ஐரோப்பயி ஆணைக்குழு | 02.06.2015 - 06.06.2015 |
| | | | |
| 9 | திரு.கே.ரி.கே.பி.ஆரம்பத்<br>பதில் பணிப்பாளர் - நிருவாகம் மற்றும் நிதி | மலேஷியா<br>வெளிநாட்டு கைத்தொழில் சுற்றுலா | 03.06.2015 - 09.06.2015 |
| | | | |
| 10 | திருமதி சித்தாரா தம்பிலியாகொட<br>பதில் பணிப்பாளர் - I&I | அவுஸ்திரேலியா<br>சாட்சி மற்றும் பாதிக்கப்பட்டவர் பாதுகாப்பு அரங்கு - அவுஸ்திரேலிய சட்ட மா அதிபர் திணைக்களம் | 15.06.2015 - 19.06.2015 |
| | | | |
| 11 | திரு.கே.கே.வில்லவராஜன்<br>கல்வி அலுவலர் | மொங்கோலியா<br>20ஆவது வருடாந்த கூட்டம் மற்றும் ஈராண்டுக்கொரு முறையிலான மகாநாடு - NHRIஇன் APF | 26.08.2015 - 28.08.2015 |
| 12 | திரு.கே.கே.வில்லவராஜன்<br>கல்வி அலுவலர் | தாய்லாந்து<br>UPR நடைமுறையில் பன்னிலையிலான பாலியல் முனைப்பாக்கத்தையும், பால்நிலை | 22.09.2015 - 23.09.2015 |

| | | | |
|---|---|---|---|
| | | அடையாளத்தையும் கொண்ட விளிம்புநிலையிலான பெண்களினதும், மக்களினதும் குரல்களை உள்ளடக்குவது மீதான செயலரங்கு | |
| | | | |
| 13 | திருமதி எஸ்.ஜே.பரணகம<br>செயலாளர் | தாய்லாந்து<br>தென் ஆசியாவில் MSM மற்றும் மாற்றுபாலினத்துவ மக்கள் மத்தியில் நடத்தும் விதம் மற்றும் மனித உரிமைகள் மீதான பிராந்திய உசாவுகை - UNDP | 27.09.2015 - 29.09.2015 |
| | | | |
| 14 | திருமதி சுஜீவ குமாரி<br>சட்ட அலுவலர் | சியோல், கொரியா<br>வயதுமுப்பானவர்களின் உரிமைகள் மீதான NHRI விசேட அமர்வு | 26.10.2015 - 28.10.2015 |
| | | | |
| 15 | திருமதி எஸ்.ஜே.பரணகம<br>செயலாளர் | மலேஷியா<br>சிரேஷ்ட நிறைவேற்றுனர் வட்ட மேசை மகாநாடு | 26.10.2015 - 28.10.2015 |
| | | | |
| 16 | திருமதி சந்திராணி சில்வா - I.O<br>திரு.எ.டபிள்யு.எம்.அஹமட் - L.O<br>எஸ்.எ.விஜேயநந்த - I.O | மலேஷியா<br>கோலாலம்பூரில் குடிவரவு தடுத்தல் வைத்தல் மீதான செயலமர்வு | 30.11.2015 - 03.12.2015 |

**Human Rights Commission of Sri Lanka**
No. 165, Kynsey Road, Colombo 08
Hot Line 1996
Tele. +94 11 2694925, 2685980, 2685981
Fax +94 11 2694924
sechrc@sltnet.lk www.hrcsl.lk